விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 புரட்டாதி 21 சனிக்கிழமை (08.10.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 293

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## ஆபிரிக்காவை சேர்ந்த 3 பெண்களுக்கு சமாதானத்துக்கான நோபல்பரிசு

(கொழும்பு)

2011ஆம் ஆண்டுக்கான சமாதானத்துக்கான நோபல் பரிசு மூன்று பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆபிரிக்க நாடொன்றில் முதல் பெண் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட லைபிரீய ஜனாதிபதி இல்லேன் ஜோன்சன் சறிலீவ் அதே நாட்டைச் சேர்ந்த லேய்மா பௌது மற்றும் யேமன் நாட்டைச் சேர்ந்த ரவாக்குல் கர்மன் ஆகியோருக்கே இவ்வாண்டின் சமாதானத்துக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

பெண்கள்பாதுகாப்பு, பெண்களின்உரிமை மற்றும் சமாதானத்துக்காக அகிம்சை வழியில் இம் மூவரும் தொடர்ச்சியாகப் போராடி வருவதற்காக இம்மூவருக்கும் இப் பரிசு வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய (20ஆம் பக்கம் பார்க்க)

## நாவாந்துறை சம்பவத்தைப் போன்று மீண்டும் இடம்பெற அனுமதிக்க வேண்டாம்

### வட்டுக்கோட்டையில் பொலிஸார் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறையில் இடம்பெற்றதைப் போன்றதொரு சம்பவம் மீண்டும் நிகழ்வதை அனுமதிக்க வேண்டாம் என வட்டுக்கோட்டைப் பொலிஸார் பொதுமக்களை எச்சரித்துள்ளனர்.

வட்டுக்கோட்டையில் தொலைத் தொடர்பு கோபுரம் ஒன்றை அமைப்பதற்கு பொதுமக்கள் எதிர்ப்புத் தெரிவித்த நிலையிலேயே பொலிஸார் இவ்எச்சரிக்கையை விடுத்துள்ளனர்.

வட்டுக்கோட்டையில் தொலைத் தொடர்பு கோபுரம் அமைப்பதற்கான அனுமதியை வலி.மேற்கு பிரதேச சபை வழங்கியமை தொடர்பில் அப்பகுதி பொதுமக்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

இந்நிலையில் அனுமதியை இடை நிறுத்துவதாக மேற்படி தொலைத் தொடர்பு கோபுரத்தை அமைக்கும் நிறுவனத்திற்கு வலி.மேற்கு பிரதேச சபைத் (19ஆம் பக்கம் பார்க்க)

# நேருக்கு நேர் மோதி அரசியல் நடத்த தயாரா?



## சரத் பொன்சேகா சவால்

(கொழும்)

பொய்யான குற்றச்சாட்டுக்களை சுமத்தி சிறையில் அடைத்துள்ள வஞ்சக அரசியல்வாதிகளினால் நேருக்கு நேர் அரசியல் நடத்த முடியுமா? அரசியல் களத்தில் நேருக்கு நேர் மோதிப்பார்க்க தயாரா என சரத் பொன்சேகா சவால் விடுத்துள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)

## பொக்ஸின் பயணம் நெருக்கடியில்

(கொழும்பு)

பிரித்தானிய பாதுகாப்புச் செயலாளர் லியம் பொக்ஸ் இலங்கை வந்தபோது பாதுகாப்பு அமைச்சுக்கு சம்பந்தம் இல்லாத வெரிட்டி என்பவர் அவருடன் பயணம் செய்து இலங்கை அரசு பிரதிநிதிகளை சந்தித்தார் என குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

வெரிட்டி தமது நண்பர் எனவும் அவரை பத்துக்கு மேற்பட்ட முறைகள் பாதுகாப்பு அமைச்சகத்தில் தான் சந்தித்திருப்பதாகவும் பிரித்தானிய அரசு நிமித்தமாக அல்லாது தனிப்பட்ட முறையிலேயே அவரைச்சந்தித்ததாகவும் பொக்ஸ் குறிப்பிட்டிருக்கிறார்.

லியம் பொக்ஸ் இலங்கை வந்த ஒரு தருணத்தில் வெரிட்டியும் இலங்கையின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் மனைவியும் சேர்ந்து ஏற்பாடு செய்த ஒரு தனிப்பட்ட நிகழ்வில் தாம் கலந்து கொண்டதாகவும் அது அரசு முறையிலானது அல்ல எனவும் லியம் பொக்ஸ் தெரிவித்திருக்கிறார். (பா)

## வரவு செலவுத் திட்டம் நவ.21இல் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

2012ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் எதிர்வரும் நவம்பர் மாதம் 21ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

2012ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டு மதிப்பீட்டு அறிக்கை இந்த மாதம் 18ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ளது. 2012ஆம் ஆண்டுக்கான உத்தேச செலவு 2 ஆயிரத்து 220 பில்லியன் ரூபாயாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இவ் வருடத்திற்கான மூலதன செலவு ஆயிரத்து 111 பில்லியன் ரூபாயாகும். கடந்த வருடம் இது 938 பில்லியன் ரூபாயாக இருந்தது.

இதேவேளை 2012ஆம் வருடத்திற்கான உத்தேச வருமானம் ஆயிரத்து 115 பில்லியன் ரூபாயாகும். வளர்ச்சி வீதத்தை 8 சதவீதமாக பேணுவதற்காக 2012ஆம் ஆண்டுக்கான அரச முதலீடு 541 பில்லியன் ரூபாயிலிருந்து 553 பில்லியன் ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெல கூறினார். (பா)

## காங்.சீமெந்து தொழிற்சாலை அடுத்த வருடம் ஆரம்பமாகும்

### அமைச்சர் தயாசிறி திசேரா தெரிவிப்பு

(கொழும்பு)

காங்கேசன்துறை சீமெந்துச் தொழிற்சாலை அடுத்த வருடம் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வளங்கள் மற்றும் அரச நிறுவனங்கள் அபிவிருத்தி அமைச்சர் தயாசிறி திசேரா தெரிவித்துள்ளார்.

30 வருடங்களாக மூடப்பட்டிருந்த யாழ்ப்பாணம் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையை மீண்டும் ஆரம்பிக்க திட்டங்கள் வகுத்துள்ளதாக அரச வளங்கள் மற்றும் அரச நிறுவனங்கள் அபிவிருத்தி அமைச்சர் தயாசிறி திசேரா தெரிவித்துள்ளார்.

எந்த நிறுவனங்களுடனும் கூட்டுச்சேராது அரசாங்கமே இந்த சீமெந்து நிறுவனத்தை நடத்த திட்டமிட்டுள்ளது. இதற்காக 6 முதல் 7 பில்லியன் (19ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டுத் தூதுவர்களின் நியமனக் கடிதம் கையளிப்பு

(கொழும்பு)

புதிதாக இலங்கைக்கான உயர்ஸ் தானிகர்களாகவும் தூதுவர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ள நால்வர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் நேற்று தங்கள் நியமனக்கடிதங்களை கையளித்தனர். இலங்கைக்கான நியூசிலாந்தின் புதிய உயர்ஸ்தானிகராக எவ்ரில் ஹெறண்டர்சனும், மலேசியாவின் புதிய உயர்ஸ்தானிகராக அஷ்வின் நஸவுந்தின் ஆகியோர் தங்கள் நியமனக்கடிதங்களை கையளித்தனர்.

இலங்கைக்கான துருக்கிநாட்டின் புதிய தூதுவராக புரக் அக்பார் நியமிக்கப்பட்டுள்ளதுடன் ஜோர்ஜியாவின் புதிய தூதுவராக சுரப் கட்ஷ்விலி நியமிக்கப்பட்டுள்ளார். புதிதாக நியமிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளின் நியமனக் கடிதங்கள் கையளிக்கும் நிகழ்வு நேற்று முற்பகல் அலரிமாளிகையில் இடம்பெற்றது. (பா)

## கொழும்பு மாநகரசபை உட்பட 23 சபைகளுக்கு இன்று தேர்தல்

(கொழும்பு)

இலங்கையில் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள்-2011இன் மூன்றாம் கட்டம் இன்று 08ஆம் திகதி நடைபெறுகின்றது. 17 மாநகர சபைகள், ஒரு நகர சபை மற்றும் 5 பிரதேச சபைகள் என மொத்தமாக 23 உள்ளூராட்சி சபைகளுக்கு 420 பேரைத் தெரிவு செய்வதற்கு 26 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

இதற்காக ஆயிரத்து 167 வாக்களிப்பு நிலையங்களில் 15 இலட்சத்து 89 ஆயிரத்து 622 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். முன்னதாக மார்ச் மற்றும் ஜூலை மாதங்களில் கட்டம் கட்டமாக நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் இப்போது நடத்தப்படும் மூன்றாவது கட்டத்தில்தான் பெரிதும் எதிர்பார்க்கப்படும் கொழும்பு மாநகர சபைத் தேர்தலும் நடைபெறுகின்றது.

கொழும்பில் ஆளும் பிரதான சுதந்திரக் கூட்டமைப்பிலிருந்து முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறகொட தலைமையிலான அணியும் பிரதான எதிரணியான ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து ஏ.ஜே.எம்.முஸம்மில் தலைமையிலான அணியும் போட்டியிடும் இத்தேர்தலில் தமிழ்க் கட்சியான மனோகணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணி இன்னொரு அணியாகப் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

கட்டம் கட்டமாக நடத்தப்படும் தேர்தல்களில் அரசு தனது முழுப்பலத்தையும் பிரயோகித்து தேர்தல் பிரசாரங்களிலும் ஏனைய அரசியல் பணிகளிலும் ஈடுபட்டுவருகிறது என ஆரம்பத்திலிருந்தே குற்றஞ்சாட்டப்பட்டு வந்தது.

தேர்தல் வன்முறைகள், சட்டவிதி மீறல்கள் தொடர்பாக இம்முறை தமக்கு மொத்தமாகக் கிடைத்துள்ள (19ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சுவீடன் மனோதத்துவ நிபுணருக்கு இலக்கியத்துக்கான நோபல் பரிசு

2011-ம் ஆண்டு இலக்கியத்துக்கான நோபல் பரிசு சுவீடனைச் சேர்ந்த மனோதத்துவ நிபுணரும், கவிஞருமான தோமஸ் ரான்ஸ்ரூமருக்கு (வயது 80) வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

1931-ம் ஆண்டு சுவீடனில் பிறந்த இவர், இப் பரிசை பெறும் 108-வது நபராக பெருமை பெற்றுள்ளார். இப்பரிசு கடந்த வருடம் பெருவை சேர்ந்த மரியோ வர்கஸ் லோசா என்பவருக்கு வழங்கப்பட்டிருந்தது.

மனித மனத்தின் அற்புதங்கள் குறித்து இவர் எழுதிய இலக்கியப் படைப்புக்காக இவ் விருது அவருக்கு வழங்கப்படுவதாக நோபல் பரிசுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இவர் எழுதிய mystical, Versatile and sad என்ற கவிதைத் தொகுப்பு 50 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

அவரின் பல கவிதைகளை அமெரிக்க கவிஞரான றொபேர்ட் பிளே மற்றும் ஸ்கொட்ரிஸ் கவிஞரான றொபின் பல்றொன் ஆகியோர் மொழி பெயர்த்துள்ளனர்.

1990-ம் ஆண்டு பக்கவாத நோயால் பாதிக்கப்பட்ட அவர் தற்போது தனது பேச்சுத்திறனை இழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தனது 23-வது வயதில் முதல் கவிதைத் தொகுதியை வெளியிட்ட இவர், கடந்த 10 வருடங்களுள் இலக்கியத்துக்கான நோபல் பரிசைப் பெறும் 10-வது ஐரோப்பியராக பெருமை பெற்றுள்ளார்.

2003-ம் ஆண்டு படுகொலைசெய்யப்பட்ட சுவீடன் வெளிவிவகார அமைச்சர் அன்னா லின்டாவின் இறுதிக்கிரியை நிகழ்வின்போது இவரின் கவிதை ஒன்று வாசிக்கப்பட்டிருந்தது.

இவ்வாண்டின் இலக்கியத்திற்கான நோபல் பரிசைப் பெறும் இவருக்கு 1.5 மில்லியன் அமெரிக்க டொலர் பணப்பரிசு வழங்கப்படவுள்ளது.

அதேவேளை இவ்வாண்டின் இரசாயனவியலுக்கான நோபல் பரிசு இஸ்ரேலைச் சேர்ந்த விஞ்ஞானி டன் சீக்மனுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

குவாசிகிறிஸ்ரல் எனும் புதிய இரசாயன கட்டமைப்பை கண்டுபிடித்ததன் மூலம் அணுக்கள் மற்றும் மூலக்கூறுகளின் கட்டமைப்பு வடிவங்கள் புதிய கண்ணோட்டத்தில் நோக்கப்பட வேண்டிய தேவையை இவர் வலியுறுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (பா)

# மெய்வன்மை தொழில்நுட்ப அலுவலர் தரம் II பரீட்சையில் வடக்கில் இருவர் சித்தி





(யாழ்ப்பாணம்)

இலங்கை மெய்வன்மைத் தொழில்நுட்ப அலுவலர் தரம் II இற்கான பரீட்சையில் வட மாகாணத்தைச் சேர்ந்த இருவர் சித்தியடைந்துள்ளனர். வவுனியா மாவட்டச் செயலக, மாவட்ட மெய்வல்லுநர் பயிற்றுநர் கதிர்வேல் விஜிதரன், யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வித்துறை விரிவுரையாளர் சிதம்பரநாதன் சுரேந்தினி ஆகிய இருவருமே சித்தியடைந்தவர்களாவர். கடந்த மாதம் நடைபெற்ற இப்பரீட்சையில் 35 பேர் தோற்றியிருந்தபோதிலும் 14 பேர் மட்டுமே சித்தியடைந்துள்ளனர். (ஏ)

# ஸ்பெயின் நாட்டுக் கோடீஸ்வரிக்கு 85 வயதில் 3-வது திருமணம்

(மட்ரிட்)

ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்தவர் அல்பா. 85 வயதான இந்தப் பெண் மிகப் பெரிய கோடீஸ்வரியாவார். இவருக்கு ஏற்கெனவே 2 தடவை திருமணம் நடந்துள்ளது. அவரின் 2 கணவர்களும் இறந்துவிட்டனர். அவர்கள் மூலம் பிறந்த மகன்களும், மகள்களும் மற்றும் பேரன் பேர்த்திகளும் உள்ளனர்.

இருந்தும் அவர் 3-வது திருமணம் செய்து கொள்ள விரும்பினார்.

அதற்காக தன்னை விட 25 வயது குறைந்தவரான 60 வயதான ஊழியரை மணமகனாக தேர்வு செய்தார்.

இவரது 3-வது திருமணத்தை மகன்கள், மகள்களும் எதிர்த்தனர்.

அதைப்பற்றியெல்லாம் கவலைப்படாத அல்பா நேற்று தனது காதலரைத் திருமணம் செய்து கரம் பிடித்தார்.

அவர்களது திருமணத்தில் ஏராளமானவர்கள் மலர்க் கொத்துடன் கலந்து கொண்டு வாழ்த்துத் தெரிவித்தனர்.

இந்த நிகழ்ச்சியின் போது 85 வயது அல்பா தனது 60 வயது காதல் கணவருடன் இளம்பெண் போன்று மகிழ்ச்சி பொங்க நடனமாடினார். இது திருமணத்திற்கு வந்த அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. (சு-8)

# திறப்பு விழா

புற்றுநோய் கல்வி மற்றும் உளவள ஆலோசனை நிலைய திறப்பு விழா நாளை மறுதினம் 10-ம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 4 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலையில் திறந்து வைக்கப்படவுள்ளது.

பிரதம விருந்தினராக ஹற்றன் நஷனல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ராஜேந்திரா தியாகராஜா; சிறப்பு விருந்தினராக ஹற்றன் நஷனல் வங்கியின் மனித வள மற்றும் நிர்வாக பிரதிப் பொது முகாமையாளர் ஜே.ஆர். பி.எம்.பைவா, கௌரவ விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணமும் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-8)


## சஞ்சிகை, இசைத்தட்டு வெளியீடு

நெடுந்தீவில் இருந்து முதன்முதலாக வெளிவரும் கலை இலக்கிய சஞ்சிகை 'சப்தம்' மாதாந்த இதழ் மற்றும் நெடுந்தீவு யோகேஸ்வரனின் 'குறும்புக்காரன்' இசைத் தட்டு வெளியீடும்

காலம் : 09.10.2011 (ஞாயிற்றுக்கிழமை)

நேரம் : 9.30 AM (முற்பகல்)

இடம் : சொர்ணாம்பிகை மண்டபம்
தியாகி அறக்கொடை நிலையம்,
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

இவ் நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக பாராளுமன்ற உறுப்பினரும் நெடுந்தீவு பிரதேச ஒருங்கிணைப்பு குழுத் தலைவருமான சில்வேஸ்திரி அலன்டின், பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, நெடுந்தீவு மகேஷ் மற்றும் சிகரம் தொடு ஆசிரியர் கோ.றுஷாங்கன், நெடுந்தீவு புலவர் அரியநாயகம் ஆகியோர் கலந்துகொள்ள உள்ளனர்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

விழா ஏற்பாட்டாளர்கள்

(சி-4665)



## யாழ்ப்பாணம் மாநகரசபை

### வெற்றுக் காணி பொறுப்பேற்றல் சம்பந்தமான அறிவித்தல்

1) ஆதன இல: 54/14, 54/14 பி., 59 சுவாமியார் வீதி வட்டாரம் 08
2) ஆதன இல: 27 ஏ. ஏ.வி. றோட் வட்டாரம் 08
3) ஆதன இல:12, 42, இலந்தைக்குளம் வீதி வட்டாரம் 08
4) ஆதன இல:32, பழைய பூங்கா வீதி வட்டாரம் 06
5) ஆதன.இல:50, புது வீதி, கொய்யாத்தோட்டம் வட்டாரம் 06

யாழ்ப்பாணம் வட்டாரம் 08-ல் சுவாமியார் வீதி, ஏ.வி.றோட், இலந்தைக்குளம் வீதி, வட்டாரம் 06-ல் பழைய பூங்கா வீதி, புது வீதி கொய்யாத்தோட்டம் என்பவற்றில் அமைந்துள்ள மேற்படி ஆதனங்கள் பராமரிப்பின்றி பற்றைகள் வளர்ந்து சுகாதாரத்திற்கு கேடு விளைவித்தும், நுளம்புப் பெருக்கத்திற்கு ஏற்ற வகையிலும் இருப்பதாக அயலவர்களினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே யாழ்ப்பாணம் மாநகர சபை 2007-ம் ஆண்டின் 11-ம் இலக்க நுளம்புப் பெருக்கத் தடைச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ளது.

இவ்வாதனங்கள் மீது எவராவது உரிமை கொண்டவராய் இருப்பின் 31.10.2011-ம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணம் மாநகர சபையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். தவறின் ஆதனங்கள் மாநகரசபையின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டு பரிபாலிக்கப்படும் என்பதனை அறியத் தருகின்றேன்.

04.10.2011

திருமதி யோ.பற்குணராசா
முதல்வர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

(சி-4669)



## யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், இலங்கை
## முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம்
### விரிவுரைகள் ஆரம்பம்

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ வணிக பீடத்துக்குப் புதிதாக அனுமதிக்கப்பட்டுள்ள முதலாம் வருட மாணவர்களுக்கான 2010/2011 கல்வியாண்டுக்கான அறிமுக நிகழ்வு 12.10.2011ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். அறிமுக நிகழ்வில் தவறாது கலந்து கொள்ளுமாறு புதிய மாணவர்கள் அனைவரும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மற்றும் அனைத்து வருட மாணவர்களுக்குமான முதலாம், இரண்டாம் அரையாண்டுக்கான விரிவுரைகள் எதிர்வரும் 24.10.2011 திங்கட்கிழமை ஆரம்பமாகும்.

பதிவாளர்
07.10.2011

(சி-4666)



## பாராட்டி வாழ்த்துகிறோம்



திரு. அ. அகிலதாஸ்



திருமதி சுசீலா திருச்செல்வம்



செல்வி ப.கந்தசாமி

யா/கொக்குவில் இந்துக் கல்லூரியின் மதிப்புக்குரிய அதிபர் திரு.அ. அகிலதாஸ் அவர்கள் நல்லதிபர் விருதினையும் ஆசிரியர்களான திருமதி சுசீலா திருச்செல்வம், செல்வி ப.கந்தசாமி ஆகியோர் நல்லாசிரியர் விருதினையும் மாண்புமிகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களிடம் அலரிமாளிகையில் பெற்றுக் கொள்கின்ற வேளையில் அதிபரையும் ஆசிரியர்களையும் மேலும் பல சிறப்புகள் பெற்று வாழ்க என வாழ்த்துகிறோம்.

யா/கொக்குவில் இந்துக் கல்லூரி
நலன் விரும்பிகள்

(சி-4657)



## பனை அபிவிருத்திச் சபை

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு

### விண்ணப்ப முடிவுத் திகதி நீடிப்பு

சபையின் விலைமனுக்கோரல் என்ற தலைப்பிடப்பட்ட 2011.09.13-ம் திகதிய பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட விண்ணப்ப முடிவுத் திகதி 15.10.2011 திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றேன்.

பசுபதி சீவரத்தினம்,
தலைவர்
பனை அபிவிருத்திச் சபை,
தேசிய வீடமைப்புச் செயலகக் கட்டிடம்,
யாழ்ப்பாணம்.

(சி-4667)

# இன்று ஒரு தகவல்

## தண்டனை யாருக்கு?

ஓர் ஊரில் ஒரு மன்னர் இருந்தார். ஒருநாள் அவரும் மனைவியுமாக அரண்மனையின் தனி அறையிலே சதுரங்கம் விளையாடிக்கொண்டிருந்தார்கள்.

அச்சமயத்தில் அரண்மனை அதிகாரி அங்கே வந்தார்.

" மன்னா!... நமது மண்டபத்திலே நீதி விசாரணை நடத்த வேண்டிய நேரம் இது ...எல்லோரும் வந்து காத்துக் கொண்டிருக்கிறார்கள்."

அதற்கு மன்னர் " எனக்குப் பதிலாக நீங்களே அங்கே விசாரணை நடத்துங்கள்" என்றார்.

வந்த அதிகாரி ஒருமாதிரியாக மகாராணியைப் பார்த்தார். மகாராணி சூழ் நிலையைப் புரிந்து கொண்டார்.

"நீதிமன்றத்துக்கு வரவேண்டுமென்று எனக்கு ஆசையாக இருக்கிறது" என்றார்.

"சரி போகலாம்" என்று கூறிவிட்டு அரசியையும் நீதிமன்றத்திற்கு அழைத்துச்சென்றார்.

விசாரணைகள் ஒவ்வொன்றாக எடுத்துக்கொள்ளப்பட்டது.

அவ்வேளையில் ஒரு மனிதனைக் கொண்டு வந்து நிறுத்தினார்கள்.

"இவன் என்ன குற்றம் செய்தான்?"

"திருடினான்" மன்னா... மன்னர் அவரைப் பார்த்துக் கேட்டார் "நீ திருடியது உண்மை தானா?"

"உண்மைதான் ஆனால் ...."

" அதற்கு மேலே விளக்கம் எதுவும் தேவை இல்லை... திருட்டுக்குற்றத்திற்கு நமது தேசத்தில் என்ன தண்டனையோ அதை நீ அனுபவித்துத்தான் தீர வேண்டும்!"

இதை அவதானித்த அரசி மன்னருக்கு அருகில் சென்று "ஒரு குற்றவாளியைத் தண்டிக்க வேண்டியது முறைதான்... ஆனாலும் குற்றம் சாட்டப்பட்ட அந்த ஆள் என்னதான் கூறுகிறான் என்று கேட்பதில் பிரச்சினை இல்லையே..."

" நீங்கள் கூறுவதும் சரிதான்!" என்றார் மன்னர்."

"சரி... நீ என்ன கூறுவதற்கு வந்திக்கிறாய். அதை முதலில் கூறு பார்க்கலாம்..." என்றார் மன்னர்.

அவன் தன் குற்றத்தைத் தெளிவுபடுத்த ஆரம்பித்தான்.

"மன்னா! நான் சிறிய வயது முதல் மிகவும் பிரியமாக என் குதிரையை வளர்த்துக் கொண்டு வருகிறேன்."

அதற்காக நமது அரசாங்கம் "ரேஷன்" கடையிலே என்ன வழங்குகிறதோ அதைத்தான் அதற்கும் உணவாக கொடுத்துக் கொண்டு வந்தேன். நமது அரசாங்கம் வழங்குகிற அளவு அந்தக் குதிரை உயிர் வாழப்போதுமானதாக இல்லை. மெலிந்து கொண்டே செல்கிறது. இன்னும் சிறிது நாளிலே அதன் நிலைமை மோசமாகப் போய்விடும். அதைப் பார்த்துக் கொண்டு என்னால் இருக்க முடியாது. அதனால் அரசாங்கப் பண்டகசாலையிலிருந்து சிறிது உணவுத் தானியத்தைத் திருடிவிட்டேன்... செய்தது பிழைதான்! என்னை மன்னித்துக் கொள்ளுங்கள் மன்னா! என்றான்.

"நமது ஆட்சியிலே எந்தக் குற்றத்தையும் மன்னிக்கிற என்ற வழக்கமே இல்லை!" என்றார் மன்னர்.

அதன்பின் அரசி பக்கமாகத் திரும்பி, "நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்றார்.

"அந்தக் குதிரையை இந்த மண்டபத்துக்குக் கொண்டு வரச் சொன்னால் நல்லது...!" என்றார் அரசி.

குதிரையைக்கொண்டு வரும்படியாக உத்தரவிட்டார் மன்னர். குதிரை வந்து சேர்ந்தது. வந்ததும்... அது தலையைத் தூக்கி அங்கேயும் இங்கேயும் பார்த்தது... அதை வளர்த்தவன் பக்கத்திலே போய் ஆசையாக நின்றது.

"சரி... இப்போது சொல்லுங்கள்... குற்றவாளிக்கு என்ன தண்டனை வழங்கலாம்?" என்றார் மன்னர்.

அரசி சொன்னார்... "குற்றவாளிக்குத் தண்டனை வழங்க வேண்டியது அவசியம்தான். அதற்கு முதல் குற்றவாளி யார் என்பதைத் தீர்மானிக்க வேண்டும்!"

"என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்டார்.

உண்மையான குற்றவாளி இந்தக் குதிரையின் சொந்தக்காரன் இல்லை. இந்தக் குதிரையைப் பட்டினி போட்ட அரசாங்க அதிகாரிதான் குற்றவாளி.

அவருக்குத்தான் தண்டனை வழங்கப்படவேண்டும்! பற்றாக்குறையான ரேஷனை வழங்கியதுதான் இந்தக் குற்றத்துக்கு மூலகாரணம்!"

மன்னர் யோசனை செய்தார். அவரை விடுதலை செய்தார்.

இதிலே உள்ளடங்கி இருக்கிற கருத்து என்னவென்றால்,... குற்றத்துக்கு என் தண்டனை வழங்கலாம் என்பது மட்டும் அல்ல... அந்தக் குற்றத்துக்கு மூலகாரணம் என்ன என்பதை அறிந்து அதை நிவர்த்தி செய்வதுமாகும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# சமூக விரோத செயல்களை தடுக்க பாதுகாப்பு விழிப்புக்குழு அமைப்பு

## பொலிஸ், பிரதேச செயலர்கள் விவாதம்

(யாழ்ப்பாணம்)

பிரதேச செயலாளர்களின் கருத்திற்கு பொலிஸ் தரப்பினரால் கடும் விமர்சனம் செய்யப்பட்டதால் எதிர்காலத்தில் தமது தரப்பில் கருத்துக்களும் ஆலோசனைகளும் வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக பிரதேச செயலர்களினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட பொதுமக்கள் பாதுகாப்புக்குழுவின் அங்குரார்ப்பண குழுக்கூட்டம் நேற்று யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டம் ஆரம்பித்து சில நிமிடங்களில் கிராம மட்டங்களில் அமைக்கப்படும் குழுக்களுக்கான அடையாள அட்டை வழங்குவது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

சமூக விரோதச் செயல்களை கட்டுப்படுத்தும் நோக்குடன் கிராமங்கள் தோறும் அமைக்கப்படும் இந்தக் குழுக்களில் 25 அங்கத்தவர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் இரவு முழுவதும் கிராமங்களில் ரோந்து பணிகளில் ஈடுபடுத்தப்படவுள்ளதோடு பொலிஸ் உத்தியோகத்தர்களும் இவர்களுடன் இணைந்து ரோந்துப் பணியில் ஈடுபடவுள்ளனர்.

இந்தக் குழுவின் உறுப்பினர்களை அடையாளப்படுத்தும் முகமாக பொலிஸாரினால் அடையாள அட்டையும் வழங்க முடிவு செய்யப்பட்டிருந்தது.

இந் நிலையில் பொலிஸாரினால் வழங்கப்படவுள்ள அடையாள அட்டையை பெறுவதற்கு அக் குழுவின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரினாலும் தலா 200 ரூபா வழங்கப்பட வேண்டும் எனவும் பொலிஸ் தரப்பினரால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, அடையாள அட்டையை பெறுவதற்கு அக் குழுவில் உள்ள அனைத்து உறுப்பினர்களினாலும் 200 ரூபா வழங்க முடியாது. காரணம் கூலித்தொழிலாளிகளும் இந்தக் குழுவில் உள்ளடக்கப்பட்டுள்ளனர் என பிரதேச செயலர் ஒருவரினால் கருத்து முன்வைக்கப்பட்டது.

பிரதேச செயலரின் இந்தக் கருத்துக்கு பதிலளித்த யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நேவின் பத்மதேவா இங்கு நாம் மக்களுக்கு பல நலத்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம். அதன் ஒரு கட்டமாகவே இந்த பாதுகாப்பு குழுவும் அமைந்துள்ளது.

சமூக விரோதச் செயல்களைக் கட்டுப்படுத்தும் வகையில் எம்மால் மேற்கொள்ளப்படும் இந்த வேலைத்திட்டத்தை மக்களும் ஆதரிக்கின்றனர்.

அடையாள அட்டை வழங்குவதற்காக 200 ரூபாவைக்கூட வழங்க மறுத்தால் நாம் என்ன செய்ய முடியும்.

மக்களின் பாது காப்புக்காக இவ்வாறான செயற்பாடுகளைச்செய்ய நாம் முன்வரும்போது அதை விமர்சிப்பது ஏற்க முடியாது என மிகவும் காட்டமாக பதிலளித்தார்.

இதற்கிடையில் 200 ரூபாபணம்கொடுத்து அடையாள அட்டை பெற முடியாதவர்களுக்கு வேறு விதமாக பணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இருப்பினும் பிரதேச செயலாளரின் கருத்திற்கு பொலிஸ்தரப்பினரால் கோபமான முறையில் பதிலளிக்கப்பட்டது. பிரதேச செயலர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இதனால் எதிர்காலத்தில் மக்களின் நிலையை தம்மால் வெளிப்படுத்த முடியாதவாறு நெருக்கடி ஏற்படும் எனவும் பிரதேச செயலர்கள் தெரிவித்தனர்.

இறுதியில் பொலிஸ்தரப்பினரால் பிரதேச செயலர்களிடம் மன்னிப்பு கோரப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்த அங்குரார்ப்பணக்குழுக் கூட்டத்தில் யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், பிரதிப் பொலிஸ் மா அதிபர் நீல் தளுவத்தை, யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நேவின் பத்மதேவா, யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, யாழ். மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலகர்கள், மதகுருமார்கள், அரச அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(4-2-6)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 100 | 40 |
| உருளைக்கிழங்கு | 70 | 90 | 60 |
| பச்சைமிளகாய் | 130 | 120 | 70 |
| தக்காளி | 50 | 70 | 50 |
| மரவள்ளிக் கிழங்கு | 30 | 30 | 30 |
| கோவா | 30 | 20 | 40 |
| கரட் | 50 | 90 | 50 |
| பூசணி | 30 | 50 | 40 |
| புடோல் | 35 | 40 | 30 |
| வாழைக்காய் | 40 | 20 | 30 |
| சின்ன வெங்காயம் | 90 | 110 | 90 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 60 |
| பாகற்காய் | 100 | 160 | 70 |
| வெண்டிக்காய் | 40 | 80 | 40 |
| கருணைக் கிழங்கு | 70 | 80 | 80 |
| பயற்றங்காய் | 80 | 90 | 70 |
| லீக்ஸ் | 50 | 40 | 50 |
| பீற்றூட் | 20 | 20 | 15 |
| கறிமிளகாய் | 60 | 60 | 40 |
| முருங்கைக்காய் | 40 | 80 | 70 |
| போஞ்சி | -- | 110 | -- |
| கத்தரிதம்புள்ள | 30 | 20 | 20 |
| கீரை - 1 பிடி | 12-15 | 20 | 15 |
| தேசிக்காய் | 230 | 240 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 30 | 30 |

## இராசி பலன்

08.10.2011

(புரட்டாதி 21, சனிக்கிழமை)

சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு

துவாதசி பின்னிரவு 2.47 மணிவரை

அவிட்டம் பிற்பகல் 11.09 மணிவரை

இராகுகாலம் 09.02- 10.32 மணிவரை

சுபநேரம் 3.02-4.32 மணிவரை

**மேடம்** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம், புதிய பொருட்சேர்க்கையுண்டு.

**இடபம்** கூட்டுத் தொழிலில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும், தந்தை வழியில் தன லாபம் உண்டு, தூரதேசச் செய்திகள் வந்து சேரலாம், உடல்நலம் சீராகி உற்சாகமடைவீர்கள்.

**மிதுனம்** வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள், எதிலும் அவசரத்தை தவிர்ப்பது நல்லது, வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புக்கள் ஈடுசெய்ய முன்வருவீர்கள், பகை ஒன்று நட்பாகலாம்.

**கடகம்** காலையில் கலகலப்பும் மாலையில் சலசலப்பும் ஏற்படும் நாள், ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் தோன்றி மறையும், எடுத்த காரியங்கள் தாமதமாகும், போசன சுகமுண்டு.

**சிங்கம்** உடல்நலம் சீராகி உற்சாகமாக செயற்படும் நாள், குடும்பத்தில் பெரியவர்களினால் ஏற்பட்ட பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைப்பீர்கள், குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும்.

**கன்னி** பிள்ளைகளால் பெருமை சேரும் நாள், குடும்பத்தில் உங்கள் செல்வாக்கு மேலோங்கும், மருத்துவச் செலவுகள் குறையும், அரை குறையாக இருந்த பணியை மீண்டும் தொடர்வீர்கள்.

**துலாம்** தாய்வழி ஆதரவு பெருகும், சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, வியாபார விருத்தியுண்டு, நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும்.

**விருச்சிகம்** எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும் நாள், செல்வாக்கை பெருக்க சிவனை வழிபடவேண்டிய நாள், பயணங்களால் பலனுண்டு, பாராட்டும் புகழும் அதிகரிக்கும்.

**தனுசு** தாராளமாக செலவுசெய்து மகிழும் நாள், குடும்பத்தில் பெருமைதரும் வகையில் சில நிகழ்வுகள் நடக்கலாம், தொலைபேசி வழித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும்.

**மகரம்** முன் கோபமும் அலைச்சலும் ஏற்படலாம், உலநலம் சீராகும், சொன்னசொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள்.

**கும்பம்** முருகப் பெருமான் வழிபாடு முன்னேற்றம் தரும், புதிய பொறுப்புக்களால் வேலைச்சுமை கூடும், உறவினருக்காக ஒரு தொகையை செலவு செய்ய வேண்டி வரலாம், தேவையற்ற கற்பனைகள் குடிகொள்ளும் நாள்.

**மீனம்** வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள், உறனர் சிலரின் அன்புக் கட்டளைகளுக்கு ஆட்பட நேரிடலாம், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், அந்நிய தேசச் செய்திகள் ஆச்சரியப்படவைக்கும்.

வளவன்

# வாணிவிழா

(சாவகச்சேரி)

சுபாலய மாணவிகளின் வாணிவிழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் சுபாலய நாட்டியப் பள்ளி இயக்குநர் சி.தயாபரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலாளர் திருமதி அஞ்சலி தேவி சாந்தசீலன், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி மக்கள் வங்கி முகாமையாளர் க.சண்முகலிங்கம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

தொடர்ந்து சுபாலய மாணவிகளின் நாட்டிய கலை நிகழ்வுகள் நடைபெறவுள்ளது. இக்கலை நிகழ்வுகளை கோப்பாய் தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் திருமதி சுபாதினி தயாபரன் நெறிப்படுத்தவுள்ளார். (4-3-29)

# கத்தரிக்கோலால் குத்திய மரணம் தொடர்பான வழக்கு யாழ்.மேல் நீதிமன்றிற்கு மாற்றம்

(சாவகச்சேரி)

கடந்த 2009 ஆம் ஆண்டு கைதடி கிழக்கில் தனது மனைவிக்கு மரணத்தை ஏற்படுத்தும் நோக்குடன் கத்தரிக்கோலால் குத்தி மரணம் ஏற்படுத்திய சம்பவம் தொடர்பான கடந்த 2009 ஆம் ஆண்டு 10 ஆம் மாதம் 28ஆம் திகதி சாவகச்சேரி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட நபர் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

குறித்தநபர் கடந்த 2010 ஆம் ஆண்டு 8 ஆம் மாதம் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்ட நிலையில் மேல் நீதிமன்ற பிணைக்கட்டளை பிரகாரம் பிணையில் விடப்பட்டார்.

இந்நிலையில் தொடர்ச்சியான மேற்படி வழக்கின் விசாரணை கடந்த 6 ஆம்திகதி நடைபெற்ற போது குறித்த வழக்கினையும் அதனோடொத்த சான்றுப் பொருட்களையும் யாழ்.மேல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்தும் படி பதிவாளருக்கு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா உத்தரவிட்டார். (4-3-29)




# நிறுவுனர் தினவிழாவும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் விக்டோரியா கல்லூரியின் நிறுவுனர் தினவிழாவும் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரி அதிபர் வி.சிறிகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத் தலைமைக் காரியால கலாநிதி திருமதி ஏ.என். கிருஸ்ணவேணி கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக சங்கானை கல்வி வலயப் பணிப்பாளர் ரி.இன்பரசு, கௌரவ விருந்தினராக விக்டோரியாக் கல்லூரி பிரதி அதிபர் வி.சண்முகநாதன், கிளிநொச்சி நீர்ப்பாசன பிரதிப்பணிப்பாளர் என்.சுதாகரன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (4-12)

# உழவு இயந்திரத்தில் நசியுண்டு 18 வயது இளைஞன் உயிரிழப்பு

## மிருசுவில் வடக்கு சோகத்தில்

(சாவகச்சேரி)

மிருசுவில் வடக்கு கொடிகாமத்தில் உழவியந்திரத்தில் நேற்று முன்தினம் நள்ளிரவு நசியுண்டு மரணமானதாக சந்தேகிக்கப்பட்ட தி.தினேஸ் (வயது-18) என்ற இளைஞனின் மரணம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் நேற்றைய தினம் முறைப்பாடு செய்ததையடுத்து சம்பவ இடத்திற்கு நேரில் சென்று சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா விசாரணைகளை மேற்கொண்டார்.

விசாரணை குறித்து தெரிய வருவதாவது,

நள்ளிரவு வேளையில் சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றி இறக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடும் உழவியந்திரத்தில் நசியுண்டே மேற்படி இளைஞன் உயிரிழந்துள்ளதாக தெரிய வருகின்றது.

எனவே சந்தேக நபரான உழவியந்திர சாரதியை கைது செய்து சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் முற்படுத்துமாறு கொடிகாமம் பொலிஸாருக்கு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

சடலத்தை சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் வைத்து பிரேத பரிசோதனை செய்த பின் உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (4-3-29-85)

# பட்டப்பகலில் பெண்ணின் சங்கிலியை அபகரிக்க முயற்சி

## மிருசுவில் சந்தியில் சம்பவம்

(மிருசுவில்)

வீதியால் நடந்து சென்று கொண்டிருந்த பெண்ணின் தங்கச் சங்கிலியை இரு இளைஞர்கள் அறுக்க முற்பட்ட வேளை பெண் கூக்குரலிட்ட போது இளைஞர்கள் தப்பியோடியுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் நண்பகல் 12 மணியளவில் மிருசுவில் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது,

குறித்த பெண் நடந்து சென்ற வேளை மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் சங்கிலியை அறுக்க முற்பட்ட வேளை சங்கிலியை பற்றிப் பிடித்தவாறு பெண் கூக்குரலிட்டபோது சங்கிலி அறுந்த நிலையில் இரு இளைஞர்களும் தப்பியோடி உள்ளனர். (4-3-85)

# வினாத்தாள்களைப் பெற்றுக் கொள்ளலாம்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பாடசாலைகளில் தரம் 11 இல் சைவ சமயப் பாடம் கற்கும் மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சை எதிர்வரும் 12 ஆம் திகதி புதன்கிழமை தென்மராட்சி வலய பாடசாலைகளில் நடைபெறவுள்ளது.

இதற்கான வினாத்தாள் பொதியினை நாளைமறுதினம் திங்கட்கிழமை தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார்.

அதேவேளை பரீட்சையில் விடைத்தாள்களை சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் திருத்தம் செய்து மாணவர்கள் பெற்ற புள்ளி மற்றும் பகுப்பாய்வு போன்றவற்றினை எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4-3-29)

# உலக உளநலதினம் கடைப்பிடிப்பு

(கொழும்புத்துறை)

உலக உளநல தினம் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கியூடெக் கரித்தாஸ் நிறு வன மண்டபத்தில் பத்மகேசரி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கியூடெக் கரித்தாஸ் நிறுவன இயக்குநர் அருட்தந்தை பேனாட் றெக்னோ கலந்து கொண்டு பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்தப்பட்ட ஓவியம், கவிதைப்போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கி கௌரவிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக மந்திகை மனநல வைத்தியர் திருமதி முல்லை கலந்து கொண்டு வெளிப்படுத்தலும் சமூக உறவும் என்ற கருப் பொருளிலும் கியூடெக் கரித்தாஸ் நிர்வாக இயக்குநர் எஸ்.திலகரட்ணம் உளநல சமூகம் என்ற பொருளிலும் உரையாற்றவுள்ளனர்.

தொடர்ந்து உளநல நெறிப்படுத்துனர் எஸ்.யோசப்பாலா தலைமையில் மகிழ்ச்சிப்படுத்துதல் தொடர்பான ஆக்கப்பயிற்சிகளும் நடாத்தப்படவுள்ளன. (4-3-51)

# தம்பாலை வெள்ளவாய்க்காலை புனரமைக்க மக்கள் கோரிக்கை

(நல்லூர்)

தம்பாலைப் பகுதியில் உள்ள பிரதான வெள்ளவாய்க்கால் கடந்த 30 வருடங்களாக புனரமைப்பு செய்யப்படாமல் தேடுவாரற்ற நிலையில் தூர்ந்து போய் உள்ளது.

இதனால் இப்பகுதியில் மழை காலங்களில் வெள்ளம் தேங்கி நிற்பதால் நோய் பெருக்கம் ஏற்படும் அபாய நிலை உள்ளதுடன் மழை காலங்களில் வீடுகளுக்குள் வெள்ளம் உட்புகுவதால் இப்பகுதியில் உள்ள குடும்பங்கள் உறவினர் வீடுகளிலும் பொது மண்டபங்களிலும் இடம்பெயர்ந்து தங்குகின்ற அவல நிலையும் காணப்படுகின்றது.

எனவே இவ்விடயம் தொடர்பாக உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-3-134)





(யாழ். மாவட்ட பொதுமக்கள் பாதுகாப்புக்குழுவின் அங்குரார்ப்பண குழுக்கூட்டம் நேற்று யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் பிரமுகர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-அலுவலகச் செய்தியாளர்)

# வெள்ளவத்தை பேருந்து தரிப்பிடவசதி நிரந்தரமானதாக இருக்க வேண்டும்

## விஜயகலா எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ்.கொழும்பு சேவையிலீடுபடும் பேருந்துகளுக்கு வெள்ளவத்தையில் வழங்கப்பட்டிருக்கும் தரிப்பிட வசதி நிரந்தரமானதாக அமைவதுடன் அரசியலுக்கு அப்பாற்பட்ட செயன்முறையாக இருக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்.மாவட்ட் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்ப்பாணம்- கொழும்புக்கிடையில் சேவையில் ஈடுபடும் பேருந்துகள் நின்று பயணிகளை ஏற்றுவதற்கான தரிப்பிடம் வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷனுக்கருகில் வழங்கப்பட்டுள்ளமை பாராட்டத்தக்க நடவடிக்கையாகும். நேற்றையதினம் இந்த தரிப்பிட அங்குரார்ப்பண வைபவம் இடம்பெற்றது.

இந்த பஸ்தரிப்பிடம் தமிழ் பயணிகளுக்கு நன்மை அளிக்கும் வகையில் தொடர்ந்தும் நிரந்தரமாக செயற்பட வேண்டும். இதனை விடுத்து தேர்தல் அரசியலுக்காக இந்த தரிப்பிட விடயம் பயன்படுத்தக் கூடாது. வெறும் அரசியல் தேவைகளுக்கு மாத்திரம் இந்த விடயத்தினை பயன்படுத்துவதனை அனுமதிக்க முடியாது.

தற்போது தரிப்பிடமாக மாற்றப்படும் இராமகிருஷ்ண மிஷனுக்கருகில் உள்ள சுகாதார அமைச்சின் களஞ்சியசாலைக்குரிய காணி தமிழ் பாடசாலையொன்றினை அமைப்பதற்காக ஒதுக்கப்பட்டதாகும். எனது கணவர் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக இருந்த போது தமிழ் பாடசாலையொன்றினை வெள்ளவத்தையில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் இது குறித்து பேச்சுவார்த்தை நடத்தி இந்தக் காணியை பாடசாலைக்கு ஒதுக்கியிருந்தார். இதற்கான அமைச்சரவை அங்கீகாரமும் வழங்கப்பட்டிருந்தது.

பேருந்து அனுமதியானது தேர்தலுக்கான நலன்கருதியதாக இருக்கக் கூடாது. யாழ்ப்பாணம்-கொழும்பு பயணிகளின் நன்மையைக் கருத்தில் கொண்டு நிரந்தரமானதாக இந்த தரிப்பிட வசதி அமையவேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (4-2)

# ஜனாதிபதிக்கு தண்டனை வழங்குவதில் மேற்குலக நாடுகள் முனைப்பு காட்டுகின்றன



## அமைச்சர் சுசில் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு தண்டனை வழங்க வேண்டுமென்பதில் சில மேற்குலக நாடுகள் முனைப்புக் காட்டி வருவதாக ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

உள்ளக சக்திகளினால் ஜனாதிபதிக்கு எதுவித அழுத்தங்களும் கிடையாது எனவும் வெளிச்சக்திகளே ஜனாதிபதியின் மீது அழுத்தங்களை பிரயோகித்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.சில வலுவான மேற்குலக நாடுகள், தமிழீழ விடுத லைப்புலி ஆதரவாளர்கள் மற்றும் சர்வதேச தன்னார்வத்தொண்டு நிறுவனங்கள் ஆகியன இணைந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக நடவடிக்கை எடுக்க தீவிர முனைப்புக் காட்டி வருகின்றன என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டமையை தாங்கிக் கொள்ள முடியாத சக்திகள் இவ்வாறு ஜனாதிபதியை இலக்கு வைத்து போலியான பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.கோட்டே பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். (4-2)

# அவுஸ்திரேலியாவுக்கு தப்பிச் செல்ல முயன்ற 6 நபர்களிடம் விசாரணை

## பொலிஸார் தெரிவிப்பு

(கொழும்பு)

மீன்பிடி படகு மூலம் அவுஸ்திரேலியாவுக்குத் தப்பிச்செல்ல முயற்சித்த நிலையில் அண்மையில் கைது செய்யப்பட்டவர்களில் தமிழீழ விடுதலைப்புலி இயக்க உறுப்பினர்கள் என்று சந்தேகிக்கப்படும் 6 பேரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குற்றத் தடுப்புப் பிரிவால் இது குறித்து கொழும்பு நீதிவான் நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அவுஸ்திரேலியா தப்பிச் செல்லவிருந்த 37 பேரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் மூலம் குறித்த 6 பேரும் இனம்காணப்பட்டதாக குற்றத்தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த காலங்களில் பல தீவிரவாத செயல்களில் இவர்கள் ஈடுபட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளதென குற்றத் தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (4-2)

# நீதிமன்றத்தால் அபராதம்

(கிளிநொச்சி)

மதுபோதையில் மோட்டார் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி நீதிமன்றத்தால் பிணையில் விடுதலை செய்யப்பட்ட நபர் வழக்கிற்கு சமுகமளிக்காததால் பிணையாளிக்கு 10 ஆயிரம் ரூபா அபராதமாக விதிக்கப்பட்டதுடன் செலுத்தத்தவறின் 2 மாத சிறைத்தண்டனையும் வழங்கப்பட்டது.

மேற்குறித்த குற்றச்சாட்டுடன் தொடர்புடைய நபர் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது 10 ஆயிரம் ரூபா ஆட்பிணையில் விடுவிக்கப்பட்டார். குற்றவாளி வழக்கிற்கு சமுகமளிக்காததால் நேற்றைய தினம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி பெ.சிவகுமார் பிணையாளிக்கு மேற்குறித்த பணத்தை செலுத்துமாறு உத்தரவிட்டார்.

* * * * * *

(கிளிநொச்சி)

750 மில்லிலீற்றர் கோடாவை தன்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் இரு நபர்கள் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றையதினம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி பெ. சிவகுமார் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் தலா 5 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் ஒருமாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

* * * * * *

(கிளிநொச்சி)

மதுபோதையிலும் மோட்டார் வாகனப் பதிவு இன்றியும் மோட்டார் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி பெ.சிவகுமார் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளியாக்கண்டு 6 ஆயிரத்து 500 ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் ஒருமாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

* * * * * *

(கிளிநொச்சி)

15 ஆயிரம் மில்லிலீற்றர் கோடாவை தன்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் இரு நபர்கள் மதுவரித்திணைக்களத்தால் கைது செய்யப்பட்டு நேற்றையதினம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி பெ. சிவகுமார் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியெனக்கண்டு தலா 30 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் 3 மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

* * * * * *

(யாழ்ப்பாணம்)

கவயீனமாகவும் முறையற்ற விதத்திலும் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் யாழ்.பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ்.நீதிவான் நீதிமன்றில்ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த யாழ்.நீதிவான் நீதிமன்ற நீதிபதி அ.பிறேமசங்கர் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு 3 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் மூன்று மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

* * * * * *

(யாழ்ப்பாணம்)

21 வயதுக்கு குறைவான நபர்களுக்கு சிகரெட் விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் 12 வியாபாரிகள் யாழ்.மதுவரி பரிசோதகர்களால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ்.நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த யாழ்.நீதிவான் நீதிமன்ற மேலதிக நீதிவான் அ.பிறேமசங்கர் குறித்த நபர் மன்றத்தில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு 12 பேருக்கும் தலா 2 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் தலா 2 மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (4-3)

# ஆனந்தசங்கரி தலைமையிலான குழுவை இந்திய வெளியுறவு செயலாளர் சந்திப்பார்

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள இந்திய வெளியுறவுச் செயலாளர் ரஞ்சன் மாத்தாயை தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்.வி.ஆனந்தசங்கரி, புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எப். பத்மநாபா அணியின் தலைவர் எஸ். ஸ்ரீதரன் ஆகியோர் சந்தித்து பேசவுள்ளனர்.

இந்தச் சந்திப்பானது நாளைமறுதினம் திங்கட்கிழமை கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இன்று சனிக்கிழமை இலங்கை வரும் இந்தியவெளியுறவுச் செயலாளர் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ, எதிர்கட்சித்தலைவர் ரணில் விக்ரமசிங்க, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோரையும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி.க்களையும் சந்தித்து பேசவுள்ளார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் புதிதாக பதவியேற்ற ரஞ்சன் மாத்தாய் இலங்கைக்கு முதற்தடவையாக விஜயம் செய்வது குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கை வரும் இவர்,பல பகுதிகளுக்கும் விஜயம் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (4-2)


- தபால் மூலம் -

ஆறு மாத கால டிப்ளோமா

Course Length - Six Month

22

SEPT. 2011 TO FEBRUARY 2012

தமிழ் மொழி மூலம்

Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
Dip. in Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Sales & Marketing Management - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி.
Dip. in Health & Hospital Management - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி.
Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

● கல்முனை ● மட்டக்களப்பு ● திருகோணமலை ● புத்தளம் ● வவுனியா ● மன்னார் ● யாழ்ப்பாணம் ● கண்டி ● கொழும்பு ● ஹட்டன் ● அனுராதபுரம் ● நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Mobile: 0777 140 844, 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator

MARUTHUR . A. HASSEN

(B.Sc. Psychology. M.Sc. Psychology)

ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES

24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.

Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org


Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி :10.10.2011

(சி-4632)

# வட கிழக்கு மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்க ஆராய்வு

## அமைச்சர் ஹெகலிய தெரிவிப்பு



(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது தொடர்பில் அரசாங்கம் ஆராய்ந்து வருவதாக அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றைய தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுவார்த்தைகள் தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அமைச்சர் மேற்கண்டவாறு சுட்டிக் காட்டியுள்ளார். (4-2)

### சப்ரகமுவ மாகாணத்தில்

# 565 தமிழ்மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப முடிவு

(கொழும்பு)

சப்ரகமுவ மாகாணத்தில் காணப்படும் 565 தமிழ்மொழிமூலமான ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தேவையான அனுமதியினை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வழங்கியுள்ளார்.

இந்தத் தகவலை சப்ரகமுவ மாகாண முதலமைச்சர் மகீபால கேரத் வெளியிட்டுள்ளார். கேகாலையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சப்ரமுகவ மாகாணத்தில் 196 தமிழ் பாடசாலைகள் உள்ளன. இந்தப் பாடசாலைகளுக்குத் தேவையான 565 தமிழ் ஆசிரியர் வெற்றிடங்களுக்கு சப்ரகமுவ மாகாணத்திலுள்ள பட்டதாரிகளை நியமிக்க ஜனாதிபதி பணித்துள்ளார். இந்த மாகாணத்தில் போதிய தகைமை உடையவர்கள் இல்லாதவிடத்து வடக்கு மற்றும் கிழக்கு உட்பட நாட்டின் பல பாகங்களிலும் உள்ள தமிழ் பட்டதாரிகளுக்கு சந்தர்ப்பம் வழங்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. (4-9)

# வடக்குக் கிழக்கில் பொலிஸாரின் அராஜகம் ஒரு வாழ்க்கையாகிவிட்டது

## சுமந்திரன் எம்.பி.தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையின் சட்டம் மற்றும் ஒழுங்கை நிலைநாட்ட இலங்கை படைத்தரப்பினருக்கு அழைப்பு விடுவிக்கப்பட்டுள்ளமை பொலிஸாருக்கு கிடைத்த பெரும் அவமானம் என தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

84 ஆயிரம் பேரைக் கொண்ட இலங்கையின் பொலிஸ் துறையில் ஆயிரத்து 143 தமிழ் பொலிஸாரே இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் இவர்களில் 10 பேர் கூட உயரதிகாரிகள் என்ற தரத்தில் இல்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அமர்வில் தேசிய பொலிஸ் பயிற்சிக் கலாசாலை நிறுவுதல் தொடர்பான சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது, வடக்குக் கிழக்கை பொறுத்தவரையில் அங்குள்ள மக்களுக்கு பொலிஸ் அராஜகம் ஒரு வாழ்க்கை முறையாகிவிட்டது. கிறிஸ் பூதங்கள் விவகாரத்தில் இலங்கை பொலிஸாருக்கும் படைத்தரப்பினருக்கும் தொடர்பு இருப்பதாகவே வடக்குக் கிழக்கு மக்கள் நம்புகின்றனர். இதனால் ஏற்பட்டுள்ள வன்முறைகள் மற்றும் வெகுஜன ஆர்ப்பாட்டங்கள் போன்றனவற்றில் பலர் உயிரிழக்கவும் மேலும் பலர் காயங்களுக்கு உள்ளாகவும் நேரிட்டது.

பொதுமக்கள் மீதான இலங்கையின் பொலிஸ் அராஜகங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலைமை தொடர்பில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்தும் சுட்டிக்காட்டி வந்துள்ளது. ஒவ்வொரு மாகாணத்துக்கும் மாகாண பொலிஸ் அணி நிறுவப்படுவதற்கான அனுமதியை சட்டம் வெளிப்படையாகவே வழங்கியிருக்கின்றது.

இதன் பிரகாரம் மாகாணத்துக்குள் பொதுமக்கள் ஒழுங்கை பேணுவதும் குற்றச்செயலை தவிர்ப்பதும் அது தொடர்பில் நீதிமன்றத்தில் முறையிடுவதும் மேற்கொள்ளப்பட வேண்டியவைகளாகும். இதை தற்போது கடைப்பிடிப்பதாக இல்லை.

இலங்கையின் பொலிஸ் படையணியில் பல திறமையான உத்தியோகத்தர்கள் இருக்கின்றனர் என்பதில் சந்தேகமில்லை. அரசியல் தலையீடுகளுக்கு மத்தியிலும் தமது பணி உணர்ந்து செயற்படுபவர்களும் இருக்கின்றனர்.

இந் நிலையில் வினைத்திறனும் நேர்மையும் கொண்ட அதிகாரிகளுக்கு பதவி உயர்வுகள் வழங்குகின்ற சந்தர்ப்பங்களில் உதாசீனப்போக்கு கடைப்பிடிக்கப்படுகின்றது. அது மட்டுமல்லாது தகுதியற்ற அதிகாரிகளுக்கு வல்லமைமிக்க அரசியல்வாதிகளால் சலுகைகளும் வழங்கப்படுகின்றன. திறமையான இலங்கை பொலிஸார் இருக்கின்ற நிலையில் நாட்டின் சட்ட ஒழுங்கை நிலை நாட்டுவதற்கு இலங்கை படைத்தரப்பை அழைப்பது பொலிஸாரை அவமானப்படுத்துவதாகும் என சுமந்திரன் தனது உரையில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (4-2)


# மகிந்த சிந்தனையில்



கிராம மட்ட வாழ்வாதார முயற்சிகளுக்கு உதவி வழங்குவதன் ஊடாக அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பொருட்டு வருடா வருடம் வடக்கு மாகாணத்தில் பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதனை வெளிக்காட்டும் வகையில் இன்று தொடக்கம் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை மாகாண கண்காட்சியும் விற்பனையும் இடம்பெறவுள்ளது.

இக்கண்காட்சியானது "மஹிந்த சிந்தனை" வேலைத்திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் கௌரவ பசில் ராஜபக்ஷ அவர்களின் "வடக்கின் வசந்தம்" நிகழ்ச்சித் திட்டத்தில் பாரம்பரிய சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா, கைத்தொழில் வர்த்தகத்துறை அமைச்சர் கௌரவ ரிஷாட் பதியுதீன், கௌரவ ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் உள்ளூராட்சி அமைச்சு தனது திணைக்களங்களான கூட்டுறவு, கிராம அபிவிருத்தி, கைத்தொழில், சமூக சேவைகள், நன்னடத்தை, சிறுவர் பராமரிப்பு ஆகியவற்றுடன் ஒன்றிணைத்து "அபிவிருத்தியில் உள்ளூர் வளங்கள்" என்ற தொனிப்பொருளில் நடாத்தப்படுகின்றது.

இக்கண்காட்சி மூலம் சிறுகைத்தொழில் முயற்சிகள், உள்ளூர் வளங்களின் பயன்பாடு மற்றும் அதனோடு இணைந்த தொழில் நுட்ப வசதிகள், அடைவுகள், எதிர்கால எதிர்பார்ப்புக்கள் தொடர்பாக பொதுமக்களுக்கு காட்சிப்படுத்தலின் ஊடாக அவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு கிராமிய மட்டத்தில் பயிற்சி வழங்கும் வழிமுறைகள், அதன் தொடர்ச்சியாக ஏற்பட்ட சிறுகைத்தொழில் என்பவை இனங்காணப்பட்டு உள்ளூர் உற்பத்தி நடவடிக்கைகளின் பயன்பாடு மற்றும் அபிவிருத்தி, வேலைவாய்ப்பு என்பன தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தி சமூக மட்டத்தில் ஓர் நிலையான உறுதிப்பாடான, தங்கி வாழாத சமூகத்தை உருவாக்க வழிவகுத்தல் என்ற அடிப்படையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## வடக்கின் வசந்தம் அபிவிருத்தி திட்டத்தின் கீழ்





இதன்மூலம் சிறுகைத்தொழில் முயற்சி ஈடுபாட்டை மேம்படுத்தல், நிலையான வருமானம் பெறும் குடும்பங்களை உருவாக்குதல், நலிவுற்ற மக்கள் உதவிபெற நாட வேண்டிய வழிமுறைகள் வழிகாட்டுதல் மற்றும் கிராம மட்டத்தில் பயிற்சி வழங்கப்படும் முறைகள் பற்றி அறிவுறுத்தப்படுகின்றது.

இக்கண்காட்சியில் 30 முயற்சியாண்மை கூடம், 38 விற்பனைக்கூடம், 31 சேவைக் கூடம், திறந்த வெளிக்கூடம் என்கின்ற நான்கு வகையான கூடங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன. இதில் முதலீட்டாளர்கள், சிறுகைத்தொழிலாளர்கள், சேவை வழங்குநர்கள், தனியார் துறையினர், விற்பனையாளர்கள் ஆகியோர் பங்குபற்றுகின்றனர்.

(ஓ-4662)

## 2011ஆம் ஆண்டு வடக்கு மாகாண சபையின்



## உள்ளூராட்சி அமைச்சு மற்றும் கூட்டுறவு, கிராம அபிவிருத்தி, கைத்தொழில், சமூக சேவைகள், நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு திணைக்களங்களினால்

அபிவிருத்தியில் உள்ளூர் மூலவளங்கள் என்ற தொனிப்பொருளில் 2011 ஒக்டோபர் 8, 9,10 ஆம் திகதிகளில் உள்ளூராட்சி வளாகத்தில் வர்த்தக கண்காட்சியும் விற்பனையும் நடாத்தப்படும்.

உள்ளூராட்சி, நிவாரணம் மற்றும் புனர்வாழ்வு, கூட்டுறவு, கிராம அபிவிருத்தி, கைத்தொழில், சமூகசேவைகள், நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சு, வடக்கு மாகாணம்.

# சுகநல வாரத்தையொட்டி இரத்ததான நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

குருதிக் கொடை பல உயிர்களையும் தக்க தருணத்தில் காப்பாற்றக் கூடியதொரு உன்னதமான தர்மமாகும். இது பாதுகாப்பானது, உயிர்காப்பது மற்றும் இலகுவானது. தற்போது யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியில் அனைத்து குருதி வகைகளுக்கும் அவசர தேவை ஏற்பட்டுள்ளது.

காயமடைந்து குருதியிழப்புடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுபவர்கள், சத்திரசிகிச்சைக்குட்படுத்தப்படும் நோயாளர்கள், கர்ப்பவதிகள், புற்று நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் என குழந்தைகள் முதல் முதியவர் வரை தினம்தோறும் குருதிக் கொடையாளர்கள் வழங்கும் குருதியினால் உயிர் காக்கப்படுபவர்கள் ஏராளம்.

இதனைக் கருத்தில் கொண்டு நாளை ஞாயிற்றுக்கிழமை தேசிய சுகநல வாரத்தையொட்டி இரத்ததான நிகழ்வுகள் மூன்று இடங்களில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இது யாழ்ப்பாணம் மற்றும் வலிகாமம் பிரதேசங்களுக்கு ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையிலும் வடமராட்சியில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையிலும் மற்றும் தென்மராட்சியில் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையிலும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இதில் உயிர்காக்கும் உணர்வுள்ள சமூக நலன் விரும்பிகள், சுகாதாரப் பணியாளர்கள், அரச , அரசசார்பற்ற நிறுவன உத்தியோகத்தர்கள், விளையாட்டுக் கழகங்கள், தன்னார்வத் தொண்டு அமைப்புக்கள், இளைஞரமைப்புகள், சமய , சமூக பொது அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள், பொதுமக்கள் என அனைவரையும் பங்குபற்றி குருதிக் கொடை வழங்க முன்வருமாறு அன்போடு கேட்டுக் கொள்கின்றோம் என பிராந்திய சுகாதார சேவைகள் பணியகம் அறிவித்துள்ளது. (4-6)

# போதைப் பொருள் பாவனையை கட்டுப்படுத்த விசேட வேலைத்திட்டம்

## ஜனாதிபதி தெரிவிப்பு



சட்ட விரோத போதைப் பொருள் காரணமாக கொழும்பு புறநகர் பகுதியில் வாழும் மக்கள் பாரிய இன்னல்களுக்கு முகம் கொடுப்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இவர்களை இதில் இருந்து மீட்க மதுவரி திணைக்கள அதிகாரிகளின் ஒத்துழைப்பு அவசியம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மதுவரித் திணைக்களத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கொழும்பு நகரில் வாழும் மக்கள் முகம் கொடுக்கும் இந்தப் பிரச்சினைக்கு வெகு விரைவில் தீர்வினைப் பெற்றுக் கொடுப்பதற்காக விசேட வேலைத்திட்டங்களை முன்னெடுக்குமாறும் அவர் கோரியுள்ளார். (4-2)

# இனந்தெரியாதோரின் வாள்வெட்டில் ஒருவர் பலி

## வட்டக்கச்சியில் சம்பவம்

(வட்டக்கச்சி)

இனந்தெரியாத நபர்களின் வாள் வெட்டுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றையவர் படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு வட்டக்கச்சி மாயவனூரில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் திருகோணமலையை சேர்ந்த தம்பிராசா சவுந்தரராசா (வயது 50) என்பவர் உயிரிழந்துள்ளதுடன் அவரது மனைவியின் சகோதரியான தியாகராசா சாந்தி (வயது 49) என்ற நபர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் மனைவி வெளிநாடு சென்றிருப்பதாகவும் இப்பகுதியிலுள்ள உறவினருடன் தங்கியிருந்ததாகவும் தெரியவருகின்றது. இச்சம்பவம் தொடர்பாக கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-3-86)


# தொலைபேசி உரையாடல்கள் ஒட்டுக்கேட்கப்படுவதில்லை

(கொழும்பு)

இலங்கையில் பயன்படுத்தப்படும் தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக் கேட்க எந்த உபகரணங்களையும் அரசாங்கமோ வேறு எந்த நிறுவனங்களோ இறக்குமதி செய்யவில்லை என அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய நேற்று முந்தினம் நாடாளுமன்றத்தில் தெரி வித்துள்ளார்.

அத்துடன் அமைச்சர்களின் தொலைபேசி உரையாடல்கள் ஒட்டுக் கேட்கப்படுவதில்லை எனவும் அவ்வாறு செய்வதற்கு எந்த தேவையும் அரசாங்கத்திற்கு இல்லை எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். (4-2)



ஏ/9 வீதியிலுள்ள மாங்குளம் சந்தியில் பழுதடைந்திருந்த பிரதான பாலம் தற்போது சீன அரசாங்கத்தின் நிதி மற்றும் தொழில்நுட்பத்துடன் புதிதாக அமைக்கப்பட்டுக் கொண்டிருப்பதை படத்தில் காணலாம்.

*(படம்:- மல்லாவிச் செய்தியாளர்)*




★ 1573-எண்பதாண்டுகள் போரில் நெதர்லாந்து முதலாவது வெற்றியை ஸ்பெயினுக்கெதிராக பெற்றது.

★ 1871-சிகாகோ பெருந்தீ: சிகாகோவில் இடம்பெற்ற பெரும் தீயில் ஒரு இலட்சம் பேர் வீடுகளை இழந்தனர். விஸ்கொன்சின் மாநிலத்தில் இடம்பெற்ற தீயில் 2500 பேர் வரையில் கொல்லப்பட்டனர்.

★ 1912-முதலாவது பால்கன் போர் ஆரம்பமானது. மொண்டெனேகுரோ துருக்கியுடன் போர் தொடுத்தது.

★ 1918-இரண்டாம் உலகப் போர் பிரான்சில் அமெரிக்கக் கோப்ரல் அல்வின் யோர்க் தனியாளாக 25 ஜேர்மனிய இராணுவத்தினரைக் கொன்று 132 பேரைக் கைப்பற்றினர்.

★ 1932-இந்திய விமானப் படை நிறுவப்பட்டது.

★ 1939-இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனி மேற்கு போலந்தை இணைத்துக் கொண்டது.

★ 1967-கெரில்லா இயக்கத் தலைவர் சேகுவேராவும் அவரது சகாக்களும் பொலிவியாவில் கைது செய்யப்பட்டனர்.

★ 1973-சூயஸ் கால்வாயின் இஸ்ரேலியப் பக்கத்தில் இடம்பெற்ற போரில் 140 இஸ்ரேலியத் தாங்கிகள் எகிப்திய படைகளினால் அழிக்கப்பட்டது.

★ 1982-சொலிடாரிட்டி தொழிற்சங்கம் போலந்தில் தடை செய்யப்பட்டது.

★ 2001-இத்தாலியின் மிலான் நகரில் இரண்டு விமானங்கள் நடுவானில் மோதியதில் 118 பேர் உயிரிழந்தனர்.

**பிறப்பு**

★ 1971-பா.ராகவன், தமிழக எழுத்தாளர்

**இறப்புக்கள்**

★ 1992-வில்லி பிரான்ட் ஜேர்மனி நாட்டு ஜனாதிபதி, அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவர் (பி.1913)

★ 2003-வீரமணி ஐயர், ஈழத்துக் கவிஞர் (பி.1931)

**சிறப்பு நாள்**

★ குரொவேசியா- சுதந்திர தினம்



★ 1959-கவிஞர், பாடலாசிரியர் பட்டுக் கோட்டை கல்யாண சுந்தரத் தின் நினைவு தினம் (பி.1930)

## பாதுகாப்புச் செயலாளரின் கருத்து

# ஜனநாயகத்திற்கு பெரும் அச்சுறுத்தல்

### ஏ.ஜே.எம்.முஸம்மில் தெரிவிப்பு

(கொழும்பு)



பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் கூற்று ஜனநாயகத்திற்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாநகரசபை மேயர் வேட்பாளர் ஏ.ஜே.எம். முஸம்மில் தெரிவித்துள்ளார்.

மக்களினால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளுடன் கடமையாற்றுவதே அரசாங்க உத்தியோகத்தர்களின் கடமை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமக்கு விருப்பமானவருக்கு மக்கள் வாக்களிக்க வேண்டுமென அண்மையில் பாதுகாப்புச் செயலாளர் கோரியதாகவும் இது ஜனநாயக விரோதமானது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஆளும் கட்சியினர் தமது தேர்தல் பிரசார நடவடிக்கையை இலகுபடுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மிகவும் மோசமான ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட இருவரை கட்சியில் வேட்பாளராக நிறுத்தி ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு தமக்கு உதவி செய்துள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மிலிந்த மொரகொட மற்றும் மஹ்ரூப் ஆகியோர் ஊழல் மோசடிகளுடன் தொடர்புடையவர்கள் என தெரிவித்துள்ளார். (4-2)

# கொழும்பு நகரின் தனியார் பேருந்து சேவையில் நவீனஆடம்பர பேருந்துகள்

(கொழும்பு)

நாட்டின் போக்குவரத்துத்துறை தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்காகவும் கொழும்பு நகரில் போக்குவரத்து நெருக்கடியை குறைப்பதற்காகவும் இரு புதிய ஆடம்பர பேருந்துகள் இரு வாரங்களில் சேவையில் அறிமுகப்படுத்தப்படுத்த தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை போக்குவரத்துச் சபையால் பயன்படுத்தப்படும் பேருந்துகள் உட்பட பெரும் எண்ணிக்கையான பேருந்துகள் 30 வருடங்களுக்கு மேல் இயங்குவதாகவும் அவை மாற்றப்பட வேண்டும் எனவும் தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன கூறினார்.

சக்கர நாற்காலிகளைப் பயன்படுத்தக் கூடிய குறைந்த உயரத்திலான தரைப்பகுதியைக் கொண்ட இரு அசோக் லேலண்ட் பேருந்துகள் மொரட்டுவை- புறக்கோட்டை வீதியில் இயங்கவுள்ளதாகவும் அடுத்த வருடம் இத்தகைய மேலும் 100 பேருந்துகள் சேவையில் இணைக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். இந்த பேருந்துகளுக்கான கட்டணம் சாதாரண பேருந்து கட்டணங்களின் 3 மடங்காக இருக்கும்.

15 மில்லியன் ரூபா பெறுமதியான இந்த பேருந்துகளின் அடிப்பகுதியின் உயரத்தை மாற்றிக் கொள்ள முடியும் என்பதால் வயோதிபர்கள், மாற்றுத் திறனாளிகள் ஆகியோர் பயன்படுத்தக்கூடிய வகையிலானதாக இருக்கும் என லங்கா அசோக் லேலண்ட் கம்பனியின் பிரதான நிறைவேற்று அதிகாரி உமஷ் கௌதம் கூறினார்.

இந்த பேருந்துகள் பேருந்து உரிமையாளர்களால் இயக்கப்பட்டாலும் அவற்றின் பராமரிப்பு செலவு லங்கா அசோக் லேலண்ட் கம்பனியால் பொறுப்பேற்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (4-2)

# உளவுப் பணியில் ஈடுபட்டவர்கள் குறித்து விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களின் சார்பில் இலங்கையில் உளவுப் பணியில் ஈடுபட்டவர்கள் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களுக்காக 300 இலங்கையர்கள் இவ்வாறு உளவுப் பணிகளில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகிறது. வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனத்தின் பணிப்புரைக்கு அமைய குறித்த நபர்கள் உளவு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள னர்.

இலங்கைக்கு எதிராக போலி போர்க் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதற்கு பொய்யான தகவல்களை இவர்களே வழங்கியிருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

300 பேரைக் கொண்ட இந்த குழு செய்மதித் தொலைபேசி ஊடாக நோர்வே நாட்டில் கடமையாற்றிய வெளிநாட்டு இராஜதந்திரி ஒருவருக்கு தகவல்களை வழங்கியுள்ளனர். அமெரிக்க இரகசிய ஆவணமொன்றில் குறித்த நபர்கள் பற்றிய தகவல்கள் கிடைக்கப் பெற்றதாக சிங்கள ஊடகமொன்று செய்திவெளியிட்டுள்ளது. (4-2)

## சிறுவர் நாடகப்போட்டி

(பூநகரி)

பூநகரி கோட்ட மட்டத்திலான ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கான சிறுவர் நாடகப் போட்டி நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு செம்பன் குண்டு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக பூநகரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.தர்மரத்தினம் அறிவித்துள்ளார். (4-3-84)

# பாடசாலைகளில் மனித உரிமை விவகாரங்கள் கற்பிக்கப்படவேண்டும்

### மொஹான் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)



பாடசாலைகளில் மனித உரிமை விவகாரங்கள் கற்பிக்கப்பட வேண்டுமென முன்னாள் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பாடசாலை பாட விதானத்தில் மனித உரிமை தொடர்பான விடயங்களும் உள்ளடக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். மனித உரிமை தொடர்பான அரசாங்கத்தின் செயற்றிட்டத்தை முதலில் மக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு மக்களினால் ஏற்றுக் கொள்ளப்படாத விடயமொன்றை சர்வதேச சமூகத்தில் முன்வைப்பதில் அர்த்தமில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மனித உரிமை பாதுகாப்பு தொடர்பான செயற்றிட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் இதன் அமுலாக்கல் குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மனித உரிமை பாதுகாப்பு தொடர்பான செயற்றிட்டத்தை ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கு அனுப்பி வைத்தல் தொடர்பில் கருத்து வெளியிட்டபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (4-2)

# மாகாணமட்ட ஆங்கிலமொழி தின போட்டி முடிவுகள்-2011

*பாத்திரமேற்று நடித்தல்*

**தரம் 06**

யா/வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை, யா/யாழ்ப்பாணக் கல்லூரி, மூன்றாமிடம் இருவர் -யா/வடஇந்து பெண்கள் கல்லூரி,மன்/சென்சேவியர் பெண்கள் கல்லூரி.

**தரம்-07**

யா/யாழ்.இந்து மகளிர் கல்லூரி,யா/யாழ்ப்பாணக் கல்லூரி, யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை

**தரம்-08**

யா/வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை,மன்/சென்சேவியர் ஆண்கள் கல்லூரி,யா/யாழ்ப்பாணக் கல்லூரி

**தரம்-09**

யா/வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை, இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தி,யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை

**தரம்10**

யா/வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை,யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி,யா/சாவகச்சேரி பெண்கள் கல்லூரி

**தரம் 11**

யா/யாழ்ப்பாணக் கல்லூரி,யா/வேம்படி பெண்கள உயர்தரப் பாடசாலை, இறம்பைக் குளம் மகளிர் மகா வித்தி

*தனி நடிப்பு*

**தரம் 10**

பி.சத்தியா (இறம்பைக் குளம் மகளிர் மகா வித்தி),எ.நகலின்(யா/வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை),யு.மிதுஷன் (யா/சென்.பற்றிக்ஸ் கல்லூரி)

**தரம் 11**

எஸ்.சுகன்யா (யா/திருக்குடும்ப கன்னியர் மடம்),பி.டனிஷன் (யாழ்.இந்துக் கல்லூரி), ரி.அபர்ணா (யா/யாழ்ப்பாணக் கல்லூரி),

**தரம் 12**

என்.சிறிஸ்சிகா (யா/இளவாலை கன்னியர் மடம் மகா வித்தி),பிலோனி கமலினி மலிஸ் (யா/ உடுவில் மகளிர் கல்லூரி), பி.ஜெணந்தன் (வவு/தமிழ் மகா வித்தியாலயம்)

**தரம் 13**

ரி.நிரோஜினி (வவு/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), ஜெ.அன்றுஜா (யா/ உடுவில் மகளிர் கல்லூரி),கே.சுபரதன் (யா/ஹாட்லிக் கல்லூரி)

*உரத்துவாசித்தல்*

**தரம்-03**

எஸ்.காயத்திரி (சென்.ஜோன்ஸ் பொஸ்கோ வித்தி), எஸ்.மதுமிதா (சென்.ஜோன்ஸ் பொஸ்கோ வித்தி), ஏ.கார்த்தியியன் (வவு/வவுனியா தமிழ் மத்திய மகா வித்தி)

**தரம்-04**

ரி.ஆர்த்திகா (யா/யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை), கே.டாசிகா (வவு/இறம்பைக் குளம் மகளிர் மகா வித்தி), ஆர்.கீர்த்தனா (யா/யாழ்ப்பாணக் கல்லூரி)

**தரம்-05**

ஏ.மெல்வின் (யா/சென்.ஜோன்ஸ் கல்லூரி), கே. பவதாரணி (யா/மானிப்பாய் மகளிர் கல்லூர்), ஆர்.கிருசிகா (மன்/சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி)

*அபிநயப்பாடல்*

**ஆரம்பப்பிரிவு 1-2**

யா/உடுவில் பெண்கள் கல்லூரி, யா/திருக்குடும்ப கன்னியர் மடம்,மன்/சென்சேவியர் பெண்கள் கல்லூரி

**ஆரம்பப்பிரிவு 3-5**

யா/உடுவில் மகளிர் கல்லூரி, யா/திருக்குடும்ப கன்னியர் மடம்,மன்/சென்சேவியர் ஆண்கள் கல்லூரி

**குழுப்பாடல்**

**கனிஷ்டபிரிவு 6-9**

யா/உடுவில் மகளிர் கல்லூரி, மன்/சென் ஆன்ஸ் மத்திய மகா வித்தியாலயம், மூன்றாமிடம் இருவர்:- யா/மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, வவு/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி

**சிரேஷ்ட பிரிவு 10-13**

யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, யா/உடுவில் மகளிர் கல்லூரி,வவு/இறம்பைக் குளம் மகளிர் மகா வித்தி

*திறந்த நாடகம்*

**தரம் 3-13**

வவு/ தமிழ் மகா வித்தியாலயம், இரண்டாம் இருவர்:- யா/வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை, கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

*கவிதை கூறல்*

**தரம்-06**

ஜெ.ஜெயதீபிகா (யா/வேம்படி பெண்கள் உயர் தரப் பாடசாலை), யோ.சாம்பவி (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), ரி.டிலக்சனா (யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி)

**தரம் 07**

பு.கோபிகா (யா/யாழ்ப்பாணக் கல்லூரி), என்.வித்தியா (யா/வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை),இருவர் மூன்றாமிடம்:- பி.மிச்சல் பியானோ (யா/வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை),கோ.மாதங்கி (யா/யாழ்ப்பாணக் கல்லூரி

**தரம் 08**

என்.நவீனா (யா/யாழ்ப்பாணக் கல்லூரி), உ.சங்கவி (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), இருவர் மூன்றாமிடம்:- ரி.பிலினி (யா/யாழ்ப்பாணக் கல்லூரி),பி.ஆரணி (யா/யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி)

**தரம்-09**

ஆர்.கார்த்திகா (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி),கே.சாரகா (யா/யாழ்ப்பாணக் கல்லூரி), இருவர் மூன்றாமிடம்:- கே.துஸ்யந்தன் (வவு/ தமிழ் மத்திய மகா வித்தியாலயம்),கே.விதுரா (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி)

*விவாதம்*

**தரம் 10-13**

யா/ஹாட்லிக் கல்லூரி,வவு/ தமிழ் மகா வித்தியாலயம்,யா/யாழ்ப்பாணக் கல்லூரி

(முற்றும்)

# விவசாயி நமது வளர்ப்புத் தாய்



ஆன்மீகம் 64

## புரட்சியானது விழிப்புணர்வினாலும் அறிவினாலும் நடத்தப்பட வேண்டுமே தவிர கோபத்தினால் அல்ல



நான் முன்பே சொன்னது போல் 5,6 குறிக்கோள்கள் வைத்துக் கொண்டு இப்போது என்ன நடக்க வேண்டும். ஒரு வருடத்தில், 5 வருடத்தில் என்னென்ன நடக்க வேண்டும் என்று நாம் தீர்மானம் செய்து அரசாங்கத்தரப்பில் என்ன நடக்க வேண்டும் என்றும் நமக்குள்ளே என்ன நடக்க வேண்டும் என்றும் குறிப்பிட்ட நோக்கத்தில் பயணிக்க வேண்டும். ஒவ்வொரு விவசாயிக்கும் பிரச்சினை இருக்கிறது. இழப்பு, நட்டமாகியிருக்கிறது. எனக்குப் பொருள் கொடுங்கள், பணம் கொடுங்கள் என்று கேட்க ஆரம்பித்தால் தீர்வு வருவதில்லை. கோபம்தான் வருகிறது. புரட்சி என்பது கோபத்திலிருந்து உருவாக வேண்டும் என்று நாம் நினைத்து விட்டோம். அப்படியல்ல. புரட்சியென்பது விழிப்புணர்வினால், அறிவினால் நடக்க வேண்டும். எப்போதுமே புரட்சி என்பது கோபத்தில் நடக்கிறது. எதிர்ச் செயலாக நடக்கிறது அது போன்ற புரட்சி வேண்டும். ஏனெனில் அதனால் நன்மை வராது.

கேள்வி: 1970 இல் நாம் 20 மில்லியன் தொன் பால் உற்பத்தி செய்திருந்தோம். இன்றைக்கு அமெரிக்காவைவிட ஏன் உலகிலேயே அதிகமாக பால் உற்பத்தி செய்கிற நாடு இந்தியாதான். நீங்கள் அயல் நாட்டு நிறுவனத்துக்கு வாயப்புக் கொடுப்பதைவிட குரியன் மாடல் போல் கூட்டுறவு செய்தால் என்ன? இன்னொருவரை ஏன் செய்ய விட வேண்டும்.

சத்குரு: பன்னாட்டு நிறுவனங்கள் பற்றி நாம் பேசவில்லை. இந்திய நிறுவனம் பற்றித்தான் பேசுகிறோம். முதலில் இதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும். நாம் என்றால் இந்த நாட்டில் இருப்பவர்கள் எல்லோரும் 'நாம்' தான். விவசாயிகள் மட்டும் 'நாம்' ஆனால், வியாபார நிறுவனம் எதிரியா? எதிரியுடன் தினமும் வியாபாரம் செய்வது என்றால் சிக்கல் தான். அனைவரையும் 'நாம்' என்று கொள்ள வேண்டும். அந்த நிறுவனம் வெளிநாட்டிலிருந்து வரவில்லை. இந்தியாவிலும் இருக்கிறார்கள். வெளிநாட்டிலிருந்து வந்தாலும் ஒன்றும் தவறில்லை. நாம் வெளி நாட்டிற்கு மருத்துவரை அனுப்பியிருக்கிறோம். கணிப்பொறி வல்லுநர்களை அனுப்பியிருக்கிறோம். அவர்கள் மேலாளர்போல ஒருவரை அனுப்பியிருக்கிறார்கள். இதிலென்ன தவறு? நமக்கு இது பிடித்தாலும் சரி, பிடிக்காவிட்டாலும் சரி இப்போது உலகில் நடப்பது என்னவென்றால், நாட்டின் எல்லைகள் உடைந்து போய்க்கொண்டிருக்கின்றன. நீண்ட நாட்கள் அந்த எல்லைகள் நீடிக்காது. அரசியல் ரீதியாக அவை இருக்கலாம். ஆனால், மக்கள் மன நிலையில், பொருளாதாரத்தில், வியாபாரத்தில், இது இந்தியா, இது பாக்கிஷ்தான் என்பதே இருக்காது. அரசியல் வாதிகளிடம் இருக்கின்ற அதிகாரம் பொருளாதாரத் தலைவர்களிடம் வரும்போது இந்தப்பிரிவினைகளை அவர்கள் வைத்துக் கொள்ளமாட்டார்கள். இலாபம் கிடைக்கிற இடத்தில் வியாபாரம் செய்பவார்கள். வெளிநாட்டிலிருந்து எதற்கு வியாபார நிறுவனம் வர வேண்டும் என்று நினைக்க வேண்டாம் நன்மை எங்கிருந்து வந்தால் நமக்கென்ன? நம் நாட்டில் பருவ மழை பெய்தால் வெளிநாட்டிலிருந்துதானே வருகிறது? வேண்டாம். எங்களூர் காற்றையே சுவாசித்துக் கொள்கிறோம். எங்கள் ஊர் மழையிலேயே விவசாயம் செய்து கொள்கிறோம் என்றால் நடக்குமா? அத்தகைய எண்ணங்கள் வேண்டாம். நன்மை எங்கிருந்து வந்தாலும் வணங்கி ஏற்றுக்கொள்ள வேண்டும்.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# கிழக்கிலங்கையில் தொலையும் தொன்மைகளும் தொன்மைக் கிராமங்களும்

03

### பேராசிரியர் கிளைக்கோன் தரும் தமிழர் பற்றிய குறிப்புகள்

பிரிட்டிஷ்காரரர் காலத்தில் எழுதப்பட்ட குறிப்புக்கள் பல. பேராசியர் கிளைக்கோன் 1799 இல் ஆனி முதலாம் நாள் எழுதிய குறிப்பு வருமாறு. தீவின் நடுப்பகுதியும் தென்பகுதியும் வளவை தொடக்கம் சிலாபம் வரையுள்ள மேற்குப்பகுதியும் சிங்கள ஆட்சிக்குட்பட்ட பிரதேசம் ஆகும். இத்தீவின் வடக்குக் கிழக்கு நிலப்பகுதிகள் தமிழரால் ஆட்சி செய்யப்பட்ட பிரதேசங்களாகும்.

ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் கிழக்குக் கரைப்பகுதி ஆட்சிப் பிரிவுகள் குமுக்கன் ஆற்றை தெற்கெல்லையாகக் கொண்டிருந்தன எனவும் தமிழர் நிலப்பகுதி குமணையோடு நில்லாமல் விந்தனை, அம்பாந்தோட்டை ஆகிய இடங்களிலும் பரந்திருந்ததாகவும் கூறியுள்ளார். நீர்கொழும்பிற்க வடக்கே தமிழர் வாழ்ந்ததாகவும் குறிப்பிடுகின்றார்.[10]

### கி.பி.1829 இல் கோல்புறூக் அணைக்குழு தமிழர் பற்றிக் கூறியவை

1832 இல் அறிக்கையாக அளிக்கப்பட்ட கோல்புறூக் குழுவின் அறிக்கையுடன் இணைக்கப்பட்ட வரைபடம் முக்கியமானது. இதில் இலங்கை ஐந்து பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருந்தமை காட்டப்பட்டிருந்தது. கிழக்கு, வடக்கு, மேற்கு, மத்தி, தெற்கு என 5 மாகாணங்களின் எல்லைகள் காட்டப்பட்டுள்ளன. கிழக்கு மாகாணத்தில் மேற்கு எல்லையாக மாகாவலிகங்கை காட்டப்பட்டுள்ளது. வேடர்களின் வதிவிடங்களான விந்தனை, வெல்லச ஆகிய இரண்டும் கிழக்கு மாகாணத்துடன் காட்டப்பட்டுள்ளன. 1835-1948 மாசிவரை இந் நடைமுறையே வழக்கிலிருந்தது.[11]

1948 மாசிமாதம் நான்காம் திகதி பிரிட்டிஷ்காரரிடமிருந்து சுதந்திரம் பெற்றவுடன், இலங்கைத்தீவு ஒற்றையாட்சி நாடாக்கப்பட்டு சிங்களப் பெரும்பான்மை முதலிடம் பெற்றது. தமிழர் தாயகப் பிரதேசங்கள் மாறத்தொடங்கின. புதிய புதிய நகர்கள் எற்படுத்தப் பட்டன.

"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"

### கிழக்கு மாகாணத்தின் எல்லைகள்

கோல்புறூக் வரைபடத்தில் கிழக்கு மாகாணத்தின் எல்லையாக மகாவலி கங்கை விதந்துரைக்கப் பட்டுள்ளது. மகாவலி கங்கைக்கு அப்பாலும் தமிழர்கள் வாழ்ந்திருந்தனர் என டாக்டர் பரணவிதான குறிப்பிட்டுள்ளார்.[12] கிழக்குக் கரையோரத்தின் மேற்கெல்லையாக குமுக்கன் ஆறு முதல் கல்லோயா ஆற்றினூடாக வடக்கு நோக்கிச்சென்று, தெற்கே கந்தளாய்க் குளம் வரை சென்று மீண்டும் யான் ஓயா வரை சென்று பாவற்குளம் ஊடாக அருவி ஆற்றுக்கிளைவரை நேர்கோட்டில் செல்கிறது. வவுனியாவிற்கும் மதவாச்சிக்கும் இடைப்பட்ட இவ்வெல்லை வட மத்திய மாகாணம் ஆகும்.

பொதுவான தமிழ் இன எல்லையானது. குமுக்கன் ஆற்றிலிருந்து தொடங்கி கல்லோயா, மகாவலி கங்கை, கந்தளாய் ஆறு, யான் ஓயா, அருவிஆறு, மோரகம் ஆறு, கலா ஓயா ஆகிய ஆறுகளின் எல்லையே தமிழ் மக்களின் எல்லைகள் ஆகின்றன.[13] தொல் பழங்காலம் முதல் இயக்கர், நாகர், கதிாகாம ஷத்திரியர் என வாழ்ந்த தமிழ்ப் பரம்பரை பின்னர் சோழ, பாண்டிய கலிங்கர், முக்குவர் என தொடர்ச்சியாக ஆட்சி நிலவின. ஆதித்திராவிடர்களின் தொடர்ச்சியான பாரம்பரியம் மிக்க இடமாகிய கிழக்கு மாகாணத்தின் பல இடங்கள் பெரும்பான்மை இனமாக்கப்படுகிறது. சில இடங்கள் முற்று முழுதாக அழிக்கப்பட்டு விட்டன. உண்மையை அறிய உதவும் ஆதாரங்கள் பயனற்றுப் போய் விட்டன.மறைக்கப்பட்டும் மாற்றப்பட்டும் வருகின்றன.

### மறைக்கப்பட்ட தமிழ்ப் பிரதேசமான அம்பாறை

அம்பாறையின் எல்லைகளாக பொலநறுவை, மொனறாகலை, பதுளை, மட்டக்களப்பு மாவட்டங்கள் அமையப்பெற்றன. இவ்வெல்லைகளிலுள்ள பல கிராமங்களின் பெயர்ளை நோக்கின் அவை அனைத்தும் தமிழ்ப் பெயர்கள் என்ற உண்மை புரியும். அம்பாறை என இன்று அழைக்கப்படும் நகரினை மையமாகக் கொண்டு அதனைச் சூழவுள்ள கிராமங்கள் பல இன்று முற்று முழுதாகப் பெயர்கள் மாற்றப்பட்டு சிங்களப் பெயர்கள் ஆக்கப்பட்டுள்ளன. சில தமிழ்ப்பெயர்கள் மாறாமல் தமிழர் தாயகப் பெயர்கள் என்பதை உணர்த்திக் கொண்டிருப்பதையும் மேலோட்டமாகக் காணக்கூடியதாகவுள்ளது.

(தொடரும்)

செல்வி கதிர்காமன் தங்கேஸ்வரி

# வாழையில் பீடைகளும் முகாமைத்துவமும்

16-III



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

வாழை பற்றி அதில் எடுத்துக் சொல்லப்படும் வாழ்க்கை பற்றிய செய்தி பற்றி மிகவும் அக்கறை கொண்டுள்ள நாங்கள் வெட்ட வெட்ட தழைத்திடும் வாழை போல அவரவர் குலத்தை இதுபோல அனுமானித்திருப்பினும் வாழையின் இத்தகைய தன்மைக்கு நிலத்தின் கீழிருக்கும் கிழங்கு சிறப்பானதாகவும் பாதிப்பேது மற்றும் இருத்தல் அவசியம் எனப் புரிகின்றதல்லவா? அவ்வாறான கிழங்கிலிருந்து குலையீன்ற தாயை காண பல குட்டிகள் உருவாகும். குட்டிகள் பல வெளிக்கிளம்பின் அவை வீரியத்துடன் வளரமாட்டா என்பதனால் தற்கால குடும்பங்கள் போல ஒரு கிழக்கிலிருந்து குட்டிகளின் எண்ணிக்கையை இரண்டு அல்லது மூன்றிற்கு மேல் வளர விடுவதில்லை.

இதனை குட்டி கழித்தல் என்பர். இதற்கு காரணம் வாழையின் அடி பலமானதாக இல்லாதிருப்பதுவுமாகும். இதனை தற்கால குடும்ப உறவு முறைகளுடன் ஒப்பிட்டுக் கொள்வதுடன் வாழைக் குட்டி கழித்தலுக்கிணைவாக பிள்ளைகளின் எண்ணிக்கையையும் வலுவான பொருளாதார அடி இல்லாததனால் நாமிருவர் நமக்கிருவர் என்றும் நாமிருவர் நமக்கொருவர் என்றும் பாராயணம் பண்ணிக் கொள்கின்றனர்.

நிலத்தின் கீழுள்ள கிழங்கின் தன்மைக்கும் செழிப்பிற்குமேற்ப வெளிவரும் வாழைக்குட்டிகள் வீரியமானதாக இருக்கும். இவை வளர்ந்து அடி அகன்ற வாழை மரமாக சிறந்த வாழைக் குலையை உருவாக்கும்.

இங்கே ஒன்றைக் கவனித்தீர்களா! அவரவர் குலத்தை பிரதிபலிப்பவர்கள் பெண்கள் என்பதால் வாழைக்கிழக்கிலிருந்து வெளிவரும் வாழைக்குட்டிகள் வளர்ந்து குலையீனும் திறனுடன் ஒப்பிடப்பட்டுள்ளது.

தாயைப் போல பிள்ளை நூலைப் போல சேலை என்பது பொய்யா மொழியும் எவ்வாறு பின்னிப் பிணைந்திருக்கின்றது பார்த்தீர்களா?

வாழைக்கிழங்கிற்கு இத்துணை முக்கியத்துவம் தேவைதானா? நிச்சயமாக இக்கிழங்கிலேற்படுகின்ற பாதிப்பு ஒரு வாழையினடியை மட்டுமல்ல ஏனையவற்றையும் பாதித்து விடும். கிழங்கு பாதிப்புறுவதனால் ஏற்படும் பிரச்சினைகளைப் பார்ப்போம்.

வாழையில் ஏற்படுகன்ற நோய்களைப் பட்டியலிட்டால் பூஞ்சணத்தினால் பக்றீரியாவினால் இன்றும் வைரசுவினால் ஏற்படுத்தப்படுகின்ற நோய்கள் தனித்துவமானவையாகவும் ஒன்றுக்கு மேற்பட்ட காரணிகளுடனிணைந்து சூழல் காரணிகளும் ஏற்புடையதாக மாறிவிடுவதால் இனிய உறவுகளே! நோய்கள் தனியே பூச்சி மற்றும் சிற்றுண்ணி பீடைகள் தனியே என வாழையில் பிரித்துப் பார்க்க முடியாது.

ஒன்றுக்கொன்று தொடர்பிருப்பதால் இங்கே முகாமைத்துவம் என்பது ஒன்றிணைந்த முறையாக செயற்படுத்தினாலன்றி இவற்றின் முகாமைத்துவம் முழுமையாக சாத்தியமாகாது.

இங்கே வாழைச் செய்கையாளர்கள் அனைவரும் ஒன்றிணைந்து பீடைக்கட்டுப்பாட்டு முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். குறிப்பாக நடுகைக்காக கடைப்பிடிக்க வேண்டும். குறிப்பாக நடுகைக்காக வாழைக் குட்டிகளைப் தெரிவு செய்யும் போது நோய், பீடைகளற்ற

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...



நல்ல வாழையடியிலிருந்து பெறவேண்டும். தவறின் வாழைக் குட்டிகளினூடாக இந்நோய்களும் பூச்சி மற்றும் சிற்றுண்ணி பீடைகளும் நெமற்றோட்டுக்களும் ஓரிடத்திலிருந்து பாதிப்பேதுமற்ற இன்னொரு இடத்திற்கு இலகுவாகப் பரவிவிடும். தன்கையே தன் கண்ணைக் குத்திக் கொண்டது போல நாமே வலிந்து வினையைத் தேடிக் கொள்ளக்கூடாது. எனவே தான் வாழைக் செய்கையாளர்களுக்கு பீடை முகாமைத்துவம் பற்றி விரிவாக இத்தொடர் மூலமாக விளக்க முற்பட்டுள்ளேன்.

இந்நோய்களை வந்த பின்பு கட்டுப்படுத்துவது சிரமமானதாக இருக்கின்றது.

நோய்களைப் பொறுத்தவரை வருமுன் காத்தலே சிறந்தது.

நோய்கள் ஒரு பக்கமிருக்க வாழையில் சேதத்தை ஏற்படுத்தும் பூச்சி பீடைகள் மற்றும் சிற்றுண்ணி பீடைகள் இவற்றுடன் விலாங்குப் புழுக்கள் (நெமற்றோட்டுக்கள்) என பலவிதமான பீடைகளும் சேதத்தை ஏற்படுத்துவதனால் இவற்றைப் பற்றிய ஓரளவு அறிவு எங்களூர் விவசாயப் பெருமக்களுக்கு இருப்பதன் மூலம் அவர்கள் பிரச்சினைகளை இலகுவாக இனங்கண்டு அவர்களது மட்டத்தில் கட்டுப்படுத்துவதற்கு ஏதுவாகும்.

யாக எத்துணை பொருந்துகின்றது. ஒரு தாயினுடைய எண்ணங்கள், நடத்தை, செயற்பாடு இன்னும் குணாதிசயங்கள் இதனுடன் தாய்மையின் வெளிப்பாடு அனைத்தையும் வைத்து அவரின் மகளைக் கணிப்பது போல வாழைக் குலையின் அளவு, நிறை, இவற்றை வைத்து வாழைக் குட்டியை தெரிவு செய்வதாகும். எம்மினிய உறவுகளே! எமது வாழ்க்கை முறைகளுடன் வாழையின் வாழ்க்கை

உங்களுக்குள் இருக்கும் வாழ்ப் பீடை முகாமைத்துவம் பற்றிய சந்தேகங்களை எமக்கும் தெரிவித்தால் அவற்றிற்கும் பதில் தரப்படும். வாருங்கள் நோய் பீடைகளற்ற வாழைச் செய்கைக்கு நாம் முயற்சி செய்வோம்.

நோய்களை விரைந்து கட்டுப்படுத்தவும் பீடைகளை பெருக விடாதும் கட்டுப்படுத்துவோம். இவற்றிற்கு வழிகள் உண்டு. நம்பிக்கை தானே வாழ்க்கை.

(தொடரும்)

# கோத்தபாயவை தேசிய பட்டியலில் உள்வாங்குவதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

கொழும்பில் ஆளும்கட்சி வெற்றி பெற்றால் கோத்தபாய பிரதமர் பதவிக்கு நியமிக்கப்படுவார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

கொழும்பில் நடைபெறும் உள்ளாட்சித் தேர்தல் நடவடிக்கைகளின் அனைத்துப் பொறுப்புக்களையும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஒருங்கிணைத்து வந்திருந்தார்.

அதன் காரணமாக கொழும்பு மாநகராட்சியை ஆளும்கட்சி கைப்பற்றுமாக இருந்தால் அந்த வெற்றியின் கதாநாயகனான கோத்தயாய ராஜபக்ஷவை தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்றத்திற்கு உள்வாங்கி பிரதமர் பதவியில் அமர்த்துவது ஜனாதிபதியின் நோக்கமாக இருப்பதாக அறியப்படுகின்றது.

ஜனாதிபதி மற்றும் பாதுகாப்புச் செயலாளருக்கு மிகவும் நெருக்கமானவரும் தேசியப் பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகமுமான லஷ்மன் ஹுலு[illegible] மூலமாகவே இந்தத் தகவல்கள் கசிந்துள்ளன.

அவ்வாறு கோத்தபாய ராஜபக்ஷவை பாராளுமன்றம் கொண்டு வருவதாயின் தற்போதுள்ள தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுபபினர் கமலா ரணதுங்கவை பதவி விலகுமாறு ஜனாதிபதி கோரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (4-2)

# வவு.22 தனியார் மருந்தகங்களில் சுகாதார திணைக்களம் சோதனை

(கொழும்பு)


வவுனியா மாவட்டத்திலுள்ள 22 தனியார் மருந்தகங்களில் சுகாதார திணைக்களத்தின் அதிகாரிகள் திடீர் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

பதிவு செய்யப்பட்ட மருந்தகங்கள் பலவற்றில் மருந்தாளர்கள் பிரசன்னமாகியிருக்காமை அவதானிக்கப்பட்டதாகவும் பெரும்பாலான மருந்தகங்களுக்கு ஒரு வருட கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தும் இதுவரை பதிவுகள் மேற்கொள்ளாமல் இருப்பதாகவும் தகுதி வாய்ந்த மருந்தாளர்கள் இல்லாது மருந்தகங்கள் இயங்கி வருவதாகவும் மருந்துச் சிட்டைகளின்றி மருந்துகள் வழங்கப்பட்டு வருவதாகவும் வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி மு.மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான குறைபாடுகளுடன் இயங்கி வரும் மருந்தகங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் கூறினார்.

வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி மு.மகேந்திரனின் பணிப்பின் பேரில் மேலதிக சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி எச்.எல்.எம். அஸ்லம் உணவு, மருந்து பரிசோதகர் ந.சுஞ்சீவ, பிராந்திய மருந்தாளர் ந.மகேந்திரன் ஆகியோர் வவுனியாவிலுள்ள மருந்தகங்களில் திடீர் பரிசோதனையை மேற்கொண்டனர். (4-2)

# நாட்டில் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்துள்ளது-ரணில்



நாட்டில் மிகவும் பயங்கரமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

விரும்பியவாறு அரசியலில் ஈடுபடும் அரசாங்கம் சட்ட மீறல்களை மேற்கொள்வதாக குற்றம் சாட்டியுள்ளார்.

இதனால் நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர் குலைத்துள்ளதுடன் இது அபாயகரமானதும் ஆபத்தான நிலைமையுமாகும். சந்தேக நபர்கள் பொலிஸ் நிலையத்திலேயே கொல்லப்படுகின்றனர். இதனால் ஆத்திரமடையும் மக்கள் பொலிஸ் நிலையங்கள் மீது தாக்குதல் நடத்துகின்றனர்.

சட்டம் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளதனால் மக்கள் சட்டத்தை கையிலெடுப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் அரசியல் நோக்கத்திற்காக 17 ஆம் திருத்தச் சட்ட மூலத்தை இல்லாதொழித்துள்ளது என ரணில் விக்ரமசிங்க குற்றம் சுமத்தியுள்ளதாக சிங்கள இணைய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (4-2)

# சார்க் மாநாட்டுக்கு விசேட அதிரடிப்படை

## மோப்ப நாய்களும் சேவையில்

எதிர்வரும் நவம்பர் மாதத்தில் மாலைதீவு அட்டு நகரில் இடம்பெறவுள்ள சார்க் என்ற தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு மாநாடு நடைபெறவுள்ளது. இதன்போது மாநாட்டில் பங்கேற்கும் நாடுகளின் தலைவர்களுக்கு பாதுகாப்பு வழங்க இலங்கையின் பயங்கரவாத தடுப்பு நடவடிக்கை பிரிவின் விசேட அதிரடிப்படையினர் சேவையில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சார்க் நாடுகளின் பரிமாற்றத்திட்டத்தின் கீழ் இலங்கை அதிரடிப்படையினர் இந்த சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளார்கள்.

இதன்போது இலங்கையில் உள்ள K9 என்ற பொலிஸ்துறை மோப்ப நாய்களும் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

இலங்கையின் இறுதிப் போரின் போது விசேட அதிரடிப்படையினர் சிறப்பாக செயற்பட்டதாக மாலைதீவு அரசாங்கம் தெரிவித்துள்ளது.

பிரித்தானிய வன்முறை அடக்கும் எஸ்.ஏ. எஸ் அதிகாரிகளின் பயிற்சிகளை இலங்கை விசேட அதிரடிப்படையினர் பெற்றிருப்பதையும் மாலைதீவு அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (4-2)

# பொலிஸ் சேவையில் ஒழுக்க சீர்கேடுகள்

## பொலிஸ் பரிசோதகர் சங்கம்

(கொழும்பு)

அரசியல் நியமனங்களின் காரணமாக பொலிஸ் சேவையின் ஒழுக்கம் சீர்குலைந்துள்ளதாக பொலிஸாரின் பரிசோதகர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

பொலிஸ் நிலையங்களில் தகுதியற்றவர்கள் பொறுப்பதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் ஒழுக்க விதி மீறல் சம்பவங்கள் அதிகளவில் பதிவாகின்றன என சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

திறமையான தகுதியான அதிகாரிகளுக்கு உரிய சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை எனவும் மோசடியான உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 1986 இன் பின்னர் பதவி வகித்த பொலிஸ் மா அதிபர்கள் தங்களுக்கு நெருக்கமானவர்களுக்கு பதவி உயர்வுகளை வழங்கியுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இலங்கைக் பொலிஸார் திறமையானவர்களுக்கு பொறுப்பதிகாரி பதவிகளை வழங்கும் நடைமுறை எதுவும் கிடையாது என பொலிஸ் பரிசோதகர் சங்கம் விசனம் வெளியிட்டுள்ளது. (4-2)

# ஞாபகார்த்த போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

கந்தசாமி கிட்ணலிங்கம் ஞாபகார்த்த மாபெரும் சைக்கிள் ஓட்டப் போட்டியும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டியும் இன்று பண்டத்தரப்பு பிரான்பற்றில் நடைபெறவுள்ளது.

இதில் காலை 6 மணிக்கு சைக்கிள் ஓட்டப் போட்டியும் மாலை 2 மணிக்கு மாட்டு வண்டிச் சவாரியும் ஆரம்பமாகி நடைபெறும். (4-12)

# பிச்சைக்காரர்கள் திட்டமிட்டு கொலை செய்யப்படுகின்றனர்

(கொழும்பு)

இலங்கையில் திட்டமிட்ட வகையில் பிச்சை எடுப்போர் கொலை செய்யப்பட்டு வருகின்றமை தொடர்பில் ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு குரல் எழுப்பியுள்ளது.

கடந்த சில மாதங்களாக இலங்கையில் இந்தக் கொலைச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

இறுதியாக கடந்த 4 ஆம் திகதி களனியில் கூரிய ஆயுதத்தினால் தாக்கப்பட்டு ஒரு பிச்சை எடுப்பவர் கொல்லப்பட்டுள்ளார்.

இவருடன் சேர்த்து கடந்த 3 மாதங்களில் 8 பிச்சை எடுப்போர் கொல்லப்பட்டதாக ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

நகரை அழகுபடுத்தும் திட்டத்தின் கீழ் 2010 ஆம் ஆண்டிலும் கொழும்பு நகரில் பிச்சை எடுப்போர் கொல்லப்பட்டமையை ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் உரிய விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று ஆணைக்குழு கோரியுள்ளது. (4-2)

# டெங்கு நோயால் 23 பேர் மரணம்

கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் இவ்வருடம் இதுவரையான காலப் பகுதியில் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டு 23 பேர் உயிரிழந்துள்ளனர்.

டெங்கு நோய் பரவுதல் தற்போது குறைவடைந்துள்ளதாக கொழும்பு மாநகரசபை பிரதம சுகாதார வைத்திய அதிகாரி பிரதீப் காரியவசம் தெரிவிக்கின்றார்.

கடந்த காலங்களில் நாளாந்தம் சுமார் 25 டெங்கு நோயாளர்கள் பதிவான போதிலும் தற்போது நாளொன்றுக்கு மூன்று அல்லது நான்கு பேரே இனங்காணப்படுவதாகவும் அவர் கூறினார்.

மாளிகாவத்தை, மட்டக்குளி ஆகிய பிரதேசங்களிலேயே அதிகளவில் டெங்கு நோயாளர்கள் பதிவாவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (4-2)

# இலவச பாடநூல் விநியோகம்

நல்லூர் கோட்டப் பாடசாலைகளுக்கான இலவச பாடநூல்கள் எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். மாணிக்கராசா அறிவித்துள்ளார். (4-6)


# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவக கல்விமாணி பட்டநெறி மூன்றாம் வருட இறுதிப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான முக்கிய கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறும்.




# நவீன எண் சோதிடம்



## நல்லகாரியமானாலும் தீயகாரியமானாலும் துணிந்து செய்துவிடுவர் 66

### சனியின் பொதுப் பலன்

8 எண் சனி ஆதிக்கத்தைக் குறிக்கும். தனி ஒரு மனிதனு டைய நல்லியக்கத்திற்கும் தீய செயலுக்கும் சனி ஆதிக்கம் தான் காரணம் என்றால் மிகையாகாது. இந்த எண்ணில் பிறந்தவர்கள் ஒரு நாட்டை நிர்வகிக்கும் அரசியல் தலைவர்களாகவோ அல்லது ஊர், மாவட்டம், சமூகம் போன்றவற்றின் தலைவர்களாகவோ இருப்பர். இன்னும் சிலர் அரசாங்கத்தின் முக்கிய பொறுப்பாளராகவோ தனி நிறுவனத்தின் பொறுப்பாளராகவோ விளங்குவர். பலருக்கு உதவுவதன் மூலமும், துணிந்து எதிர்ப்பதன் மூலமும் போராடுவதன் மூலமும் புகழடைவர். நல்ல காரியத்தைச் செய்தாலும், தீய காரியத்தைச் செய்தாலும் துணிந்து செய்து விடுவர்.

நம்பியவர்களுக்கு நல்லவனாகவே இருப்பர். இவர்களை ஏமாற்ற நினைப்பவர்களுக்கு ஏமாற்றுக் காரர்ராக இருப்பர். சனி என்ற 8 எண்ணை கண்டால் பலர் பயப் படுகின்றனர். ஆனால் இது தவறு. 8 இற்குள்தான் எலக்ட்ரானிக் கடிகாரம் முதல் கணக்கிடும் கல்குலேட்டர் வரை இயங்கி வருகின்றது. உலகம் முழுவதும் பரவியுள்ள ஆங்கில மொழி எண்ணுக்குள் கூட 26 என்ற எண்ணுக்குள் தான் உள்ளது.

இப்படி பல்வேறு வழிகளில் சிறப்புற்று நம்மையளிக்கும் 8 திடீரென்று அழிவு வேலைகளுக்கும் காரணமாகவே உள்ளது. ஆனால் யாருக்கு அந்த அழிவைக் கொடுக்கிறது என்பதை நாம் தெரிந்து கொள்ளவேண்டியது அவசியம். விஞ்ஞானத்தில் நாம் இன்று உயர்ந்த இடத்தை வகிப்பதால் ஆகாய விமானம், எலக்ட்ரானிக் கருவிகள், தொலை பேசி, தொலைக்காட்சி, வானொலி, இன்னும் எத்தனையோ ஆக்கமான விஞ்ஞான ஒத்துழைப்பு மனிதனுக்கு பல வழிகளில் பயன் பட்டாலும் அதே விஞ்ஞானம் அணு ஆயுதம் என்ற முறையில் நம்மை அழிக்கவும் காத்துக் கொண்டு இருக்கிறது. என்பதை நாம் மறந்து விடக்கூடாது. இதைப் போல் சனி ஆதிக்கம் மனிதனுடைய உயர்வுக்கும் விழ்ச்சிக்கும் காரணமாகின்றது. ஆனால், யாருக்கு ஆக்கத்தைத் தரும் யாருக்கு வளர்ச்சியைக் கொடுக்கும் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

சனியை வெல்லக்கூடிய சக்தி புதனாகி 5க்கு உண்டு. பொதுவாக சனி ஆதிக்கத்தில் பிறந்தவர்கள் புதன் ஆதிக்கத்தில் வரும்படி பெயரை அமைத்துக் கொண்டால், மிகச் சிறந்த பலனைக் அடையலாம். 8,17,26 போன்ற தேதியில் பிறந்த அனைவரும் சனி ஆதிக்கம் கொண்டவர்களே. போராட்ட வாழ்க்கையைத் தொடங்கி போராடியே வெற்றி கொள்ளுவர். பெயர் நன்றாக அமைந்தவர்கள் எப்பொழுதும் வெற்றி வீரராகவே திகழ்வர். கலை, கலாச்சாரம், பண்பாடு போன்றவற்றில் மிகுந்த ஆர்வமுடையவர்களாக இருப்பர். இந்த சனி ஆதிக்கத்தில் 9 வகையான வர்களைப் பற்றிப் பார்ப்போம்.

*   *   *

### உடல் எண் 8 உயிர் எண் 1

8,17,26 போன்ற தேதியில் பிறந்து, பிறந்த தேதி, மாதம், வருடம் இம் மூன்றையும் கூட்டி வருகின்ற உயிர் 1 வருமேயானால் இவர்கள் சனி, சூரியன் அதிக்கத்தில் பிறந்தவராவர். பார்ப்பதற்கு குறுகுறுப்பான முக அமைப்புடனும் சிந்தனா சக்தியுடனும், முன் பல் இரண்டும் சற்றுப் பெரிதாகவும் சுமாரான உயரத்துடனும் காட்சியளிப்பர். சிலர் மெலிந்தும் இன்னும் சிலர் சதைப்பற்றுடனும் இருப்பர். இவர்களைப் பார்க்கின்ற பொழுது சிறந்த் ஞானம் உள்ளவர்கள் என்று தெரிந்து கொள்ளலாம்.

சுமாராக படித்தவராக இருந்தாலும் புத்திக்கூர்மை உடையவராக விளங்குவர். 'நூலறிவைவிட நுண்ணறிவு சிறந்தது' என்ற கொள்கை கொண்டவர்கள். அன்பு உள்ளம் கொண்ட இவர்கள் இளமையிலேயே காதல் வயப்படக் கூடிய வராதலால் பலர் காதல் திருமணம் செய்து கொள்கின்றனர். பலருக்கு உதவுவதில் முன் நின்று நல்ல பெயர் எடுப்பர். யார் எதைச்சென்னாலும் தன் மனதில் உதித்தபடியே செயற்படுவர். இவர்களது வயிறு அடிக்கடி கோளாறு செய்வதால் திடீரென்று

**எண் கணித நிபுணர்**
**கலாநிதி ஆர்.ஐ.துரைமுருகர் D.LIT**

சோர்வுறுவர். ஆனால், பெயர் நன்றாக அமைந்தவர்கள் இளமையிலேயே சகல வசதிகளும் பெற்று வாழ்கின்றனர். இன்னும் சிலர் இளமையில் கஷ்டப்பட்டாலும் தனது முயற்சியால் படிப்படியாகப் போராடி உழைத்து உயர்ந்த இடத்தை அடைகின்றனர். வாகனம், வீடு, கண்டிப்பாக இவர்களுக்கு அமைந்து விடுகிறது. அப்படி உயர்ந்த நிலையை அடைந்தாலும், தனது பழைய வாழ்க்கையை மறப்பதில்லை. செய்கின்ற தொழிலை தெய்வமாக மதிக்கும் இவர்கள் சிற்றின்ப வாழ்க்கையில் அதிக ஈடுபாடு கொண்டவர்கள். இதனால் கெட்டபெயர் வாய்ப்பு இருப்ப தால், பெண்கள் விடயத்தில் கவனமாக நடந்து கொள்ள வேண்டியது அவசியம். நண்பர்களிடத்தும் மனைவியிடத்தும் சிரிப்பூட்டும் வார்த்தைகளைப் பயன்படுத்தி தானும் மகிழ்வதில் ஆர்வமுடையவர்கள்.

பொதுவாக இவர்களுடன் இருப்பவர்களே இவர்களைப்பற்றி புரிந்து கொள்ள முடியாது தவிப்பர். இப்பொழுது கூறியதை மறந்து பிறகு ஒன்று கூறுவர். இளகிய மனம் கொண்ட இவர்களுக்குத் தன் குடும்பத்திற்குத் தெரியாது மறைமுகமாக சிலருக்க உதவும் நிலை வரும். இதனால், குடும்பத்தில் சில பிரச்சினைகள் வரும். தான் துன்பப்பட்ட காலத்தில் உதவி செய்பவர்களுக்கு நன்றிக்கடன் செலுத்த் தவறமாட்டார்கள். இயற்கைக் காட்சிகளையும் மலைப்பிரதேசங்களையும் ஆடம்பரப் பொருட்களையும், விஞ்ஞானக் கருவிகளையும் கண்டு மனம் அமைதி கொள்ளும். பொருட்கள் வாங்கிச் சேர்ப்பதிலும், அழகான வீடு கட்டுவதிலும், ஆடம்பரப் பொருட்களை வாங்கிச் சேர்ப்பதிலும் ஆர்வம் கொண்டவர்கள்.

பிறருக்கு தீங்கு செய்யும் காரியங்களில் இறங்கி மனம் கூசுவர். சம்பாதிப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்ட இவர்கள், தான் செய்வதுதான் சரி என்று அடித்துப் பேசுவர். இதனால் நண்பர்களிடத்தில் கருத்து வேறுபாடுகள் உருவாகும். புதியபுதிய திட்டங்களைப் போட்டு சமுதாயத்தில் உயர்ந்து நிற்க வேண்டும் என்று உழைப்பர். சில நேரங்களில் தகுதிக்கு மீறிய திட்டங்களில் இறங்கித் தோல்வி கண்டாலும் மீண்டும்போராடி வெற்றி பெறுவர். எவ்வளவு வசதி பெருகினாலும் ஓய்ந்திருக்காது மீண்டும் முயன்றுகொண்டிருப்பர். எவ்வளவு வசதி பெருகினாலும் ஓய்ந்திருக்காது மீண்டும் முயன்று கொண்டிருப்பர். வசதிபடைத்தவராக இருந்தாலும் கூட பிரச்சனைகளுக்கிடையே சிக்கி மீள வேண்டிதாக இருக்கும். எவ்வளவு பணம் இருந்தாலும் திருப்தி காண முடியாது. பெரும் பணக்காரராக ஆக வேண்டும் என்பது இவர்களது இலட்சியம். சிலர் திடீரென்று சமயத் தொண்டிலும் பக்தி, பக்தி மார்க்கத் திலும் இறங்கிவிடுவர். இவர்களது பெயர் ஒழுங்காக அமைந்து விட்டால் இவர்களது வாழ்கையில் முன்னேற்றம் அடைவது கஷ்டமாகிவிடும். வாழ்க்கை நிலை உயர்வு தாழ்வுடன் இருக்கும். இன்னும் சிலருக்கு போட்டிகளும் பொல்லாப்புகழும் வந்து சேரும். இதனால் பெயரைப் பொருத்தமான எண்ணில் மாற்றிக் கொள்வது அவசியம்.

பெயர் நன்றாக அமைந்தவர்கள் பலவிதமான தொழில்களைச் செய்யும் டாக்டர்கள், இஞ்சினியர், ஆசிரியர், எழுத்தாளர், கலை நிபுணர்களாகவும் பெரும் பணம் சம்பாதித்து விடுகின்றனர். உத்தியோகத்தில் இருந்து கொண்டு பல்வேறு தொழில் செய்பவர்களாகவும் இருக்கின்றனர். ஜோதிடம், சட்டம், மருத்துவம், அரசியல், பத்திரிகை, விளம்பரம், சம்பந்தமானவைகளில் மனம் நாடிச்செல்லும். வெளிநாட்டுப் பயணங்கள், வெளியூர்ப் பயணங்கள் செய்யும் வாய்ப்பு அடிக்கடி வரும். இதனால், தன் தகுதியை உயர்த்திக் கொள்ளுவர். தன் தோழர்களிடம் அன்பாகப் பழகுவர். சிலருக்கு வாழ்க்கைத் துணைவர் இரண்டாக வருவதால் திருமணம் செய்பவர்கள் முதலிலேயே பொருத்தமான எண்களில் பிறந்தவர்களைத் தேர்ந்து எடுப்பதால் மறுமணத்தைத் தவிர்க்கலாம்.

பெயர் நன்றாக அமையாவிட்டால் போரட்டமும், கஷ்டமும் தொடர்ந்து வரும். இதனால், மன வேதனை அடைந்து நோயாளியாக மாற நேரும். பெயரை நல்ல எண்ணில் மாற்றியமைத்து, நல்ல ஆரோக்கியம், நல்ல வாழ்க்கைத் துணைவர், நல்ல குழந்தைகள், நிறைந்த செல்வம் பெற்று வாழ முடியம்.

**தொழில்**

இவர்களுக்கு ஒப்பந்த வேலைகள், ஏஜென்ஸி, விளம்பரம், பப்ளிக்கேசன், எலட்ரானிக், கம்பியூட்டர், இரும்பு ச்ம்பந்தமான அனைத்துத் தொழிலும் பேசிச் சம்பாதிக்கும் தொழிலும், அச்சுத் தொழிலும் சிறந்தவையே.

**நோய்**

வயிற்றுக் கோளாறு, இடுப்பு வலி, மனக்குழப்பம், இரத்த அழுத்தம், ஆஸ்துமா, கண்நோய் வந்து நீங்க வாய்ப்புள்ளது.

**பெயர் அமைக்கும் முறை**

இந்த எண்காரர்கள் தனது பெயரை புதன், சுக்கிரன், சூரிய ஆதிக்கமான 5,14,23,32,41,50,59,77 போன்றஎண்களிலும் 6,15,24, 33,42,51,60 போன்ற எண்களிலும் 10,19,37,46,64 போன்ற எண்களிலும் அமைத்துக் கொள்ளலாம். புதன் ஆதிக்கம் சாலச் சிறந்தது.

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|
| A | B | C | D | E | U | O | F |
| I | K | G | M | H | V | Z | P |
| J | R | L | T | N | W | | |
| Q | | S | | X | | | |
| Y | | | | | | | |

**பின்பற்றவேண்டியவை**

யோகமான எண்-5,6,1

யோகமான தேதிகள்-5,14,23,6, 15,24,1,10,19,28

யோகமான மோதிரக்கல்-கனக புஸ்பராகம், நீல ஆக்கோமரின்

யோகமான நிறம்- நீலம்,மஞ்சள்

ஆகாத தேதிகள்- 8,17,26,

ஆகாத நிறம்- கறுப்பு,சிவப்பு

(தொடரும்)

# பொலிஸார் மீது நம்பிக்கையிழந்த மக்கள் சட்டத்தைக் கையிலெடுக்கும் நிலையில்

## கரு ஜயசூரிய தெரிவிப்பு

(கொழும்பு)

பொலிஸார் மீது மக்கள் அதிருப்தியடைந்துள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சியின் இணைப் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

நாட்டின் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டும் தரப்பினர் குறிப்பாக, பொலிஸ் துறையினர் மீது மக்களுக்கு ஏற்படும் அதிருப்தி நிலைமை ஆரோக்கியமானதல்ல என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

தேசிய பொலிஸ் ஆணைக்குழு அமைப்பது குறித்த சட்ட மூல விவாதத்தில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸ் சேவை கடுமையான அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது என அவர் வருத்தம் வெளியிட்டுள்ளார். இதனால் பொலிஸார் மீது மக்களுக்கு இருந்த நம்பிக்கை படிப்படியாக வீழ்ச்சியடைந்துள்ளது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஒரு சில அதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் மட்டுமே கௌரவத்துடன் சீருடை அணிவதாகக் குறிப்பிட்டுள்ளார். பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு இடையில் ஒழுக்கம் கிரமமாக வீழ்ச்சியடைந்து செல்வதாகத் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான பதவி உயர்வு, சம்பள உயர்வு, இடமாற்றம் போன்ற முக்கிய தீர்மானங்கள் அரசியல் வாதிகளினால் எடுக்கப்படுகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

பொலிஸார் மீது மக்களுக்கு இருந்த நம்பிக்கை வீழ்ச்சியடைந்துள்ள காரணத்தினால் மக்கள் சட்டத்தை கையில் எடுத்துச் செயற்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான நிலைமைகள் சமூகத்தில் கிளர்ச்சியை அல்லது சமூகத்தில் எதிர் விளைவுகளைத் தூண்ட வழிகோலும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (4-2)

# ஒரிசாவில் விசாரணை செய்யப்பட்ட 19 இலங்கை மீனவர்கள் விடுவிப்பு

(கொழும்பு)

இந்தியக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு இந்தியாவின் ஒரிசா மாநிலத்தின் தேவாலயமொன்றில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வந்த 19 இலங்கை மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

ஒரிசா நீதி, அமைதி, அபிவிருத்தி ஆணைக்குழுவின் செயலாளரான அருட்தந்தை திபாக் கர்பரிச்சாவின் உதவியுடன் குறித்த இலங்கை மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

19 இலங்கை மீனவர்களுடன் மொத்தமாக 24 மீனவர்கள் இரண்டு மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் அவர்களில் ஐவர் பின்னர் விடுதலை செய்யப்படுபவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் விடுதலை செய்யப்பட்டுள்ள இலங்கை மீனவர்கள் நாடு திரும்பும் வரை தேவாலய இல்லமொன்றில் தங்கிருப்பர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நீங்கள் சிறையில் இருந்த போது அனுபவித்த துன்பங்களை நாம் அறிவோம். இப்போது மகிழ்ச்சியாக இருக்கும் தருணம் வந்துள்ளது. நீங்கள் விரைவில் வீடு திரும்புவீர்கள்.

எதிர்கால நம்பிக்கையுடன் இருங்கள் என விடுதலையான இலங்கை மீனவர்களுக்கு ஜோன் பாவ்லா என்ற பங்குத் தந்தை ஆறுதல் கூறியுள்ளார். (4-2)

# அரச மொழிக் கொள்கைகள் தொடர்பில் ஆராய திட்டம்

(கொழும்பு)

மேல் மாகாணத்தில் அரச நிறுவனங்களில் அரச மொழிக்கொள்கை நடைமுறைப் படுத்தப்படுகின்றமை தொடர்பில் ஆராயும் கண்காணிப்புக்களை மேற்கொள்ள தேசிய மொழிகள் மற்றும் நல்லிணக்க அமைச்சு திட்டமிட்டுள்ளது.

இதன்படி கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை ஆகிய பிரதேசங்களிலுள்ள பொலிஸ் நிலையங்கள், வைத்தியசாலைகள், பிரதேச செயலகங்கள் உள்ளடங்கும் வகையில் கண்காணிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கைக்காக 75 கண்காணிப்பு குழுக்களை நியமிக்கவும் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அரச கருமங்களின்போது தமிழ் மற்றும் சிங்கள மொழிகள் பயன்படுத்தப்பட வேண்டுமென்பது அரசியலமைப்பில் உறுதி செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டுகிறார்.

இதற்கமைய அரச நிறுவனங்களில் இந்த நடவடிக்கை உரிய முறையில் முன்னெடுக்கப்படுகின்றதா என்பதை பிரதேச வாரியாக ஆராய்வது தொடர்பில் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

அமைச்சினால் நியமிக்கப்படும் விசேட கண்காணிப்பு குழுவினர் அரச நிறுவனங்களுக்குச் சென்று அரச மொழிக் கொள்கையின் நடைமுறை குறித்து மேற்பார்வை செய்வார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த குழுக்களுக்கு உயர்கல்வி பயின்ற இளைஞர்களை நியமிக்கவும் அவர்களுக்கான பயிற்சிகளை வழங்கவும் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இவர்களிடமிருந்து கிடைக்கப்பெறும் அறிக்கைகளுக்கு அமைய அனைத்து அரச நிறுவனங்களிலும் அரச மொழிக் கொள்கையை உரிய முறையில் செயற்படுத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்தில் இந்த திட்டம் நிறைவு பெற்றதன் பின்னர் நாட்டின் ஏனைய பிரதேசங்களுக்கும் அதை விஸ்தரிக்க நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் மேலும் கூறினார். (4-2)

# விசுவமடு றெட்பானா பகுதியில் ஒருதொகுதி துப்பாக்கி ரவைகள்

விசுவமடு றெட்பானா பகுதியிலுள்ள தனியார் காணி ஒன்றிலிருந்து வெடிக்காத துப்பாக்கி ரவைகளின் ஒருதொகுதி கண்டெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த காணியின் உரிமையாளர் குடியமர்வதற்காக காணியை துப்புரவு செய்த போது நிலத்தினுள் புதைக்கப்பட்டிருந்த உரப்பை ஒன்றில் சுற்றப்பட்ட நிலையில் இத்துப்பாக்கி ரவைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

பற்றைகளாக வளர்ந்திருக்கும் காணியைத் துப்புரவு செய்யும் போதே இவ்வெடிக்காத ரவைகள் மீட்கப்பட்டுள்ளதாகவும் மேலும் அப்பகுதியில் இதுபோல் இன்னமும் வெடிக்காத வெடி பொருட்கள் இருக்கலாமெனவும் சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது. இது குறித்து காணியின் உரிமையாளர் அப்பகுதி இராணுவத்தினரிடம் முறையிட்டுள்ளார். (4-2)

# முச்சக்கர வண்டியொன்றை வழங்குமாறு எதிர்க்கட்சி தலைவர் ரணில் கோரிக்கை

(கொழும்பு)

தமக்கு உத்தியோகபூர்வ முச்சக்கர வண்டியொன்றை வழங்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க பாராளுமன்றில் கோரிக்கை விடுத்துள்ளார். விசேட சிறப்புரிமை கேள்வி ஒன்றை எழுப்பியதன் மூலம் அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

தமக்கு வழங்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ வாகனம் அடிக்கடி பழுதடைவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். பாதைகளின் ஓடும் நேரத்தை விடவும் வாகனம் பழுதுபார்க்கப்படும் இடத்தில் குறித்த உத்தியோகபூர்வ வாகனம் அதிக நேரத்தை கழிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பொலிஸார் தமது வாகனங்களைச் செலுத்துவதற்கு பொலிஸ் மா அதிபர் தடை ஏற்படுத்தி வருவதாகவும் இது தமது சிறப்புரிமைகளை மீறும் வகையில் அமைந்துள்ளது எனவும் ரணில் விக்ரமசிங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

பொலிஸ் உத்தியோகத்தர்கள் பொலிஸ் திணைக்கள வாகனங்களைத் தவிர வேறு வாகனங்களை செலுத்தக் கூடாது என பொலிஸ் மா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

இந்த உத்தரவினால் பிரபுக்கள் பாதுகாப்பு பிரிவில் கடமையாற்றி வரும் பொலிஸ் துறை உத்தியோகத்தர்கள் வாகனங்களை செலுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விடயம் குறித்து கவனம் செலுத்தப்படும் என பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார். (4-2)

# துணுக்காய் கல்வி வலய சிறுவர் நாடக அரங்க போட்டி முடிவுகள்

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட மூன்று கோட்டங்களிலும் சிறுவர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற சிறுவர் நாடக அரங்கப்போட்டி முடிவுகள் துணுக்காய் கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஞா.பத்மநாதனால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் ஒவ்வொரு கோட்டங்களிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலைகளின் பெயர் விபரம் வருமாறு,

**துணுக்காய் கோட்டம்**

மு/அனிஞ்சியன் தமிழ் வித்தியாலயம், மு/மயில்வாகனம் தமிழ் வித்தியாலயம்-மல்லாவி, மு/யோகபுரம் மகா வித்தியாலயம்

**மாந்தை கிழக்குக் கோட்டம்**

மு/நட்டாங்கண்டல் அ.த.க.பாடசாலை, மு/பாலிநகர் மகா வித்தியாலயம், மு/பாண்டியன் குளம் மகா வித்தியாலயம்

**ஒட்டுசுட்டான் கோட்டம்**

மு/ஆறுமுகம் தமிழ் வித்தியாலயம்- ஒட்டுசுட்டான், மு/கற்சிலைமடு அ.த.க.பாடசாலை, 3ஆம் இடம் இரு பாடசாலைகள்:- மு/மாங்குளம் மகா வித்தியாலயம், மு/முத்தையன் கட்டு வலது கரை அ.த.க.பாடசாலை. (4-12-15)



நெடுந்தீவு முகிலனின் குறும்படம் மற்றும் ஆவணப்பட அறிமுக விழா அண்மையில் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினர்களாக கலந்துகொண்ட கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் உரையாற்றுவதையும் பயணிகள் கவனத்திற்கு எனும் கவிதை நூலின் முதற்பிரதியை யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் வழங்க கல்விக் காருண்யன் ஈ.எஸ்.பி.நாகரத்தினம் பெற்றுக் கொள்வதைப் படத்தில் காணலாம்.

# யாவரையும் ஆட்டிப்படைக்கும் வல்லமை பெற்ற சனீஸ்வரர்



பூமியில் பிறக்கின்ற ஒவ்வொரு மனிதனும் பிறக்கின்ற நேரத்தில் எந்த இடத்தில் என்னகிரகம் சஞ்சரிக்கின்றதோ அதைப் பொறுத்தே அவரவர் வாழ்வில் சுகங்களையும் துக்கங்களையும் அடைகிறார்கள்.

அரசனாக வளமான சுகவாழ்வு வாழ்வதும் ஆண்டியாக வறுமைக் கோட்டில் வாழ்வதும், நோய்களினால் துன்பப்படுவதும், நல்ல கல்விகற்று கல்விமானாக திகழ்வதும், நல்ல குரு அமைவதும் நல்ல மனைவி அமைவது, ஜாதகத்தில் கிரகங்களின் அமைப்பைப் பொறுத்தே அமைவதாகும்.

கிரகங்களின் தாக்கங்களின் வேகத்தை கட்டுப்படுத்தவும், கெடுதல்களிலிருந்து விலகிக் கொள்ளவும் பல்வேறு பரிகாரங்களையும் சாந்தி ஹோமங்களையும் கிரக வழிபாடுகளையும் நமக்காக நம் முன்னோர்கள் வகுத்துள்ளார்கள்.

"மழை பெய்வது என்பது காலத்தின் கட்டாயம். அதை எம்மால் தடுக்க முடியாது. ஆனால் மழையில் நாம் நனைந்துவிடாமல் இருப்பதற்காக குடை பிடித்துக் கொள்வது போல"

கிரகங்களின் தாக்கத்திலிருந்து விடுபட இறைவழிபாடுகளை நம் முன்னோர்கள் நமக்கு விட்டுச் சென்றுள்ளார்கள்.

வான் மண்டலத்திலிருக்கும் கிரகங்களின் சஞ்சாரத்தினால் மனித வாழ்வில் ஏற்றத்தாழ்வு உண்டாயின என நம் முன்னோர்கள் கண்டறிந்தனர். இதிலிருந்து பிறந்ததே ஜோதிட சாஸ்திரமும், வான சாஸ்திரமும், கணித சாஸ்திரமாகும்.

மனிதனுக்கு ஆரோக்கியத்தைத் தருபவன் சூரியபகவான் கீர்த்தியை சந்திரனும், செல்வத்தை அங்காரகனும் நல்ல புத்தியை புதனும், கௌரவத்தை குருபகவானும், நாவன்மையை சுக்கிரனும், தைரியத்தை, ஆயுளை சனிபகவானும், நல்வாழ்வை இராகுவும், குல வளர்ச்சியை கேதுவும் யாவர்க்கும் வழங்குவார்கள்.

**கிரகங்கள் ஒன்பதில் ஈஸ்வரன் என்ற சிறப்பு பெற்றவர் சனீஸ்வரன் ஒருவரே!**

சனீஸ்வரபகவான் சர்வ வல்லமை பெற்றவர், யாவர்க்கும் அஞ்சாதவர், நேர்மை தவறாத நீதிதேவன், எவராகயிருந்தாலும் பாரபட்சம் காட்டாதவர், தேவர்கள், அசுரர்கள், மனிதர்கள் அனைவரையும் ஆட்டிவைப்பவர், மும்மூர்த்திகளையும் கூட அவர் விட்டு வைக்கவில்லை. தான் பீடிக்கின்ற காலத்தில் அவர்களையும் பிடித்து அலக்கழித்தவர்.

சனிபகவானுக்கு ஆட்சி வீடாக மகரம், கும்பம் ஆகிய ராசிகளும், உச்சம்பெறும் வீடாக துலாராசியும், புதன், சுக்கிரன், இராகு, கேது, நண்பர்களாகவும், சூரியன், சந்திரன், செவ்வாய் பகைவர்களாகவும், குருபகவான் சமமானவராகவும் அமையப் பெற்றவர். மேடராசியில் நீச்சமடைபவர். 3 ஆம், 7 ஆம், 10 ஆம் வீடுகளைப் பார்ப்பவர். இதில் 3 ஆம் பார்வையும் 10 ஆம் பார்வையும் வலிப் பெற்றதாகும்.

**மனமுருகி வேண்டுவோர்க்கு நல்லருள் புரிபவர் சனீஸ்வர பகவான்.**

அயோத்தி மன்னனான தசரதச் சக்கரவர்த்தி குடிமக்களின் நன்மையே பிரதானமாக கருத்தில் கொண்டு ஆட்சிபுரிபவர். ஒரு சமயம்.ஜோதிட வல்லுனர்கள் தசரத மன்னனின் சபைக்கு வந்து மன்னா வெகுவிரைவில் சனிபகவான் கார்த்திகை நட்சத்திரத்திலிருந்து ரோகினி நட்சத்திரத்தில் பிரவேசிக்கப் போகிறார். அந்தக் கால கட்டத்தில் நாட்டில் மழை பொழியாது, பஞ்சம் பட்டினி நிலவும். நோய்கள் தோன்றும், மக்கள் மடிவர் என கூறினார்.

இதிலிருந்து நாட்டையும், நாட்டு மக்களையும் காக்க வேண்டி வசிஷ்டர் முதலான முனிவர்களிடம் ஆசிபெற்ற தசரதமன்னன் சனி பகவானைக் காணச் சென்றான். சுயநலம் கருதாமல் நாட்டுமக்களின் நல்வாழ்விற்காக தனது கையிலிருந்த வில்லையும் அம்பையும் தேரிலே போட்டுவிட்டு கீழே இறங்கி சனிபகவானை மும்முறை வலம் வந்து வணங்கி துதி செய்தான்.

"தசரத மன்னனின் தோத்திரத்தில் மகிழ்ந்த ஸ்தோத்திரப் பிரியனான சனிபகவான் தசரதா, வேண்டும் வரம் கேள் தருகிறேன் என்றான்"

தாங்கள் கார்த்திகை நட்சத்திரத்திலிருந்து ரோகினி நட்சத்திரத்திற்கு பிரவேசிக்கும் போது நாட்டில் எந்தவித குறையும் இல்லாது மக்கள் சுபீட்சமாக வாழவேண்டும் என வேண்டினான்.

கருணை வள்ளலான சனீஸ்வரன் தசரதா உன் விருப்பப்படியே நடைபெறும் மன்னா நீ என்மீது பாடிய ஸ்தோத்திரத்தை யார் யார் எனக்கு விருப்பமான சனிவாரத்தில் பாராயணம் செய்து வன்னி பத்திரத்தால் அர்ச்சனை செய்து வழிபடுகிறார்களோ அவர்களுக்கு எந்தத் தீமையும் செய்ய மாட்டேன். சௌபாக்கியத்தை நல்குவேன் என்றார்.

தசரத மன்னனும் மனமகிழ்ந்து மீண்டும் சனிபகவானை பணிந்து விடை பெற்றான்.

**அண்ட சராசரங்களை ஆளும் ஈசனே பீடித்தவர் சனிபகவான்.**

அலகில் சோதியனாய் அம்பலத்தில் ஆடுபவனும், உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கரியவனுமாகிய அண்டசராசரங்களை ஆளும் பரமேஸ்வரனை பீடிக்கின்ற காலம் வந்தது. சனிபகவானுக்கு அதை ஈசனிடமே கூறினார். உன்னால் என்னை பிடிக்க முடியாது என்று கூறிய இறைவன் மூன்றேமுக்கால் நாழிகை நீர்க்குகையில் மறைந்திருந்தார்.

அதன்பின் வெளியே வந்தார். அப்போது சனிபகவான் எதிரில் தோன்றினார். சனியே உன்னால் என்னைப் பீடிக்க முடியவில்லையே என்று சிவன் கூறினார்.

அதற்கு சனிபகவான் சாந்திமாக தேவ தேவதா யாராகயிருந்தாலும், பாராமல் உனது காலம் வரும் போது நீதி தவறாது நீடிக்க வேண்டும் என்று எனக்கு வரமளித்த கட்டளையை நிறைவேற்றவே உங்களையும் பீடிக்கின்றநேரம் வந்தபோது அதனை உங்களிடம் தெரிவித்தேன். நீங்கள் எனக்களித்த வரத்தையும் கட்டளையையும் மறந்து உங்கள் வலிமையைக்காட்ட தொடங்கினீர்கள். உங்களுடைய கட்டளையின் முன் உங்களுடைய வலிமை பயனற்றுப்போய் விட்டது. அதனாலேதான் அண்ட சராசரங்களையும் ஆளுகின்ற ஈசனாகிய தாங்கள் எனக்குப்பயந்து முன்றே முக்கால் நாழிகை மறைந்திருந்தீர்கள். இதுவே நான் உங்களைப் பீடித்த காலமாகும் என்றார்.

பரமேஸ்வரன் மகிழ்ந்து சனியனே நான் எனது வரத்தையோ, கட்டளையையோ மறக்கவோ, அலட்சியப் படுத்தவோ இல்லை. என் வரம்பெற்ற நீ நீதிதேவன் என்பதை உலகிற்கு எடுத்துக் காட்டவே இவ்வாறு செய்தேன் என்று கூறி அகில உலகையும் ஆளும் ஈசன் என்றும் பாராமல் உனது கடமையை, எனது கட்டளையை ஏற்று ஈஸ்வரனாகிய என்னையே பீடித்ததனால் உன்னையும் சனீஸ்வரன் என்றே எல்லோரும் போற்றட்டும் என வரமளித்தார்.

**ஏழரைச்சனி**

ஒருவருடைய ஜாதகத்தில் ஜென்மராசியில் இரண்டரை ஆண்டும் முன்னயராசியின் 2 1/2 ஆண்டும், ஜென்மராசிக்கு அடுத்த ராசியில் 2 1/2 ஆண்டுமாக ஏழரை ஆண்டுகள் ஏழரை நாட்டுச் சனியின் காலமாகும்.

இதற்கிடையில் சனி வக்ரம் பெற்று பின்னோக்கிச் செல்வதுமுண்டு. இக்காலத்தில் பல்வேறு துன்பங்கள், இடையூறுகள், கஷ்டங்கள் வந்து சேரும். மேலும் கடகராசி, சிம்மராசி, விருச்சிகராசிகளில் சஞ்சரிக்கும் இரண்டரை ஆண்டுகாலம் அந்த ராசிகாரர்களுக்கு மிகுந்த சிரமத்தை சனிபகவான் கொடுப்பார்.

ஒருவருடைய ஜென்மராசிக்கு எட்டாம் இடத்தில் சஞ்சரிக்கும் இரண்டரை ஆண்டு காலம் அட்டமத்துச் சனிகாலமாகும். ஜென்மராசிக்கு 7 ஆம் இடத்தில் சஞ்சாரம் செய்யும் போது கண்டச்சனி காலமாகும். சனிபகவான் 4ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் காலம் அர்த்தாஷ்டம சனி காலமாகும்.

இக்காலங்களில் ஆசாரசீலராக ஆலய வழிபாடுகள் செய்து சனிபகவானுக்கு வன்னி பத்திரத்தால், கருங்குவளை மலர்களால் அர்ச்சனை செய்வித்து கறுப்பு வஸ்திரம் சாத்தி வழிபட்டு வன்னி சமித்து, கருங்காலி, எள்ளு, தானியங்கள் கொண்டு விசேட திரவியங்களால் ஹோமம் செய்து எள்ளெண்ணெய் தீபம் ஏற்றி. காக்கைக்கு எள்அன்னம் வைத்து மனமுருகி வழிபட்டு சனீஸ்வரனுக்கு பிரதியான துதிகள் பாடி, சனீஸ்வர அஷ்டகம், கோளாறு பதிகம் பாராயணம் செய்து சனீஸ்வர பகவானின் அருள் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக.

கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாசக் குருக்கள்
சர்வதேச இந்துமத குருபீடாதிபதி,
சபரிமலை ஸ்ரீ சாஸ்தா பீடம்-கொழும்பு.

---

தெற்காசியாவில்

# சுகாதார சேவையில் இலங்கை முதல்நாடாக விளங்குகிறது

## கிழக்கு மாகாண அமைச்சர் சுபைர்

(கொழும்பு)

இலங்கை சுகாதார சேவையில் தெற்கு ஆசியாவிலே முதற்தர நாடாக விளங்குகின்றது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சிறந்த தலைமைத்துவம் மற்றும் தூர நோக்கான சிந்தனை ஆகியவற்றுடன் மாகாண சுகாதார அமைச்சின் அயராத உழைப்பினாலும் சேவையினாலும் இவ்விடம் கிடைக்கக் காரணமாகும் என கிழக்கு மாகாண அமைச்சர் எஸ்.எம்.சுபைர் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், அரசாங்கம் இன்று சுகாதாரத்துறைக்கு பல மில்லியன் ரூபா நிதியைச் செலவிட்டு வருகின்றது.

சுகாதாரத்துறை அதிகாரிகளும், ஊழியர்களும் மக்களுக்குசிறந்தசுகாதாரசேவையை வழங்குவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். வைத்திய சேவையில் முக்கியமாக மக்களுடன் அன்பாக பழகுவதும் அவர்களின் கருத்துக்களுக்கு பழகுவதும் அவர்களின் கருத்துக்களுக்கு மதிப்ப ளிப்பதும் வைத்திய பிரிவினரின் முக்கிய அம்சமாகும். அவ்வாறானதொரு நிலைமையை இவ் வைத்தியசாலையில் ஏற்படுத்த வேண்டிய தேவை காணப்படுகிறது.

வைத்தியசாலை அபிவிருத்தி தேவைகள் போன்றவற்றுக்கு முன்பாக மக்களுக்கும் வைத்தியசாலைக்குமான நல்ல தொடர்பு, வெளிப்படைத்தன்மை, நம்பிக்கை என்பன ஏற்படுத்தப்பட வேண்டும்.

மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்திற்கு அமைய நகர்புற வைத்திய சேவைகளைப் போன்று கிராம மக்களும் பெறுவதற்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. கல்முனை பிராந்தியத்தில் சுகாதார சேவை மிக சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

இங்கு மலேரியா முற்றாக கட்டுப்படுத்தப்பட்டிருப்பதாக மத்திய அரச சுகாதார நிலையம் தெரிவித்துள்ளது. அதேவேளை, கிழக்கு மாகாணத்தில் நீரிழிவு, புற்றுநோய் போன்ற ஆபத்தான நோய்களும் அதிகம் காணப்படுவதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. எனவே எமது பழக்க வழக்கம், உடற் பயிற்சி என்பவற்றின் மூலம் இதனை கட்டுப்படுத்த முன்வர வேண்டும் என்றார்.

(4-2)

---

# இலங்கையை சேர்ந்த மாணவர்கள் பிரித்தானியாவில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

பிரித்தானியாவில் கல்வி பயிலும் இலங்கை மாணவர்கள் நேற்று முன்தினம் பிரித்தானிய பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களுக்கு முன்பாக அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர். அத்துடன் அவர்கள் தமது பிரச்சினைகள் குறித்த மகஜர் ஒன்றினையும் பிரித்தானிய பிரதமரிடம் கையளித்துள்ளனர்.

பிரித்தானியாவில் கல்வி பயிலும் தாங்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளதாகவும் விசேடமாக தாம் கல்வி பயிலும் பல கல்வி நிறுவனங்களைப் பிரித்தானிய அரசு மூடி விடுவதற்கு எடுத்த தீர்மானமானது தமக்குப் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது எனவும் அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்தடன் மூடப்பட்டுள்ள கல்வி நிறுவனங்களை மீண்டும் செயற்படுவதற்கு அனுமதிக்க வேண்டும் எனவும் அந்த மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, பிரித்தானியாவில் கல்வி நடவடிக்கைகளுக்காகச் செயற்படும் ஜெமினி, கல்லூரி, விக்டோரியா ஆங்கிலக்கல்லூரி, லண்டன் பிஸ்னஸ் அகடமி, ஒக்ஸ்போர்ட் கொலேஸ் இன்டர்நெஷனல் ஆகிய கல்வி நிறுவனங்களின் அனுமதிப்பத்திரத்தை இரத்து செய்வதற்கு பிரித்தானிய அரசு தீர்மானித்துள்ளது என்றும் இதன் காரணமாக இலங்கையைச் சேர்ந்த சுமார் 125 மாணவர் பாதிக்கப்படுவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (4-2)

---

# அழகியல் போட்டி

(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகத்தினால் யாழ்.மத்திய கல்லூரியில் நாளை ஞாயிற்றுக்கிழமை அழகியல் போட்டிகள் நடைபெறவுள்ளதாக யாழ்.வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் ரி.இராசலிங்கம் அறிவித்துள்ளார்.

இப்போட்டிகள் யாவும் இன்று நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டு பின்னர் திகதி மாற்றம் செய்யப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

(2-4)

## இந்தியா, பிரான்ஸ்

# கூட்டுத் தயாரிப்பில் உருவான செயற்கை கோள்கள் விண்ணில்




எதிர்வரும் 12 ஆம் திகதி ஸ்ரீ ஹரிகோட்டா விண்வெளி மையத்திலிருந்து பி.எஸ்.எல்.வி. வகை ரொக்கெட் விண்ணில் செலுத்தப்படவுள்ளதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது. இது குறித்து வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்திருப்பதாவது,

விண்ணில் செலுத்தப்படவுள்ள பி.எஸ்.எல்.வி. ரொக்கெட்டில் இந்தியா, பிரான்ஸ் கூட்டுத் தயாரிப்பில் உருவான ஆயிரம் கிலோ எடைகொண்ட செயற்கைக் கோளும் 45 கிலோ எடைகொண்ட மூன்று சிறியவகை செயற்கைக் கோள் என 4 செயற்கைக் கோள் களை விண்ணில் செலுத்தவுள்ளது.

பிரான்ஸ் நாட்டு கூட்டுத் தயாரிப்பில் உருவாக்கப்பட்டுள்ள செயற்கைக்கோள் மூலம் பருவகால மாற்றம் மற்றும் உலகளவிலான வெப்பம், மழை போன்றவற்றை குறித்து ஆராய்சியில் ஈடுபடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ரொக்கெட் செலுத்துவதற்கான அனைத்துக் கட்டப் பணிகளும் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளதாகவும் எதிர்வரும் 9 ஆம் திகதி முதல் பவுன்டவுன் ஆரம்பிக்கும் என அதன் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-2)

# குஜராத் முதல்வர் மோடி மீண்டும் உண்ணாநோன்பு



குஜராத் முதல்வர் நரேந்திரமோடி எதிர்வரும் 16ஆம் திகதி முதல் மீண்டும் உண்ணாவிரதம் மேற்கொள்ள உள்ளதாக அறிவித்துள்ளார்.

குஜராத் முதல்வர் நரேந்திரமோடி நாட்டு மக்களிடையே அமைதி, ஒற்றுமை நல்லிணக்கத்தை வலியுறுத்தி கடந்த மாதம் 17ஆம்திகதி முதல் 19ஆம் திகதி வரை மூன்று நாட்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டார்.

நாடு முழுவதும் பரபரப்பாகப் பேசப்பட்ட இந்த உண்ணாவிரதம் மோடியின் ஆதரவாளர்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றது. இதையடுத்து மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் உண்ணாவிரதம் மேற்கொள்ளப்போவதாக மோடி அறிவித்திருந்தார். அதன்படி எதிர்வரும் 16ஆம் திகதி ஜாம்நகர் மாவட்டம் துவாரகாவில் இருந்து மோடி மீண்டும் உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கிறார். இம்மாவட்டத்தில் உள்ள ஜாம்ஜோத்பூர்,லால்பூர்,பான்வாட்,காம்பாலியா உள்ளிட்ட ஆறு தாலுகாக்களுக்கு உட்பட்ட மக்கள் கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வரும் 16ஆம் திகதி முதல் 26 மாவட்டங்கள் மற்றும் ஆறு முக்கிய நகரங்களில் நரேந்திரமோடி தலா ஒருநாள் உண்ணாவிரதம் மேற்கொள்வார் என குஜராத் மாநில செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார். (4-2)

# 2 ஜி ஸ்பெக்ட்ரம் வழக்கில் ராசாவின் மனு தள்ளுபடி

2 ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு குறித்த விசாரணையின்போது உச்ச நீதிமன்றில் நேரில் ஆஜராக அனுமதி அளிக்கும்படி டில்லி சிறப்பு நீதிமன்றில் தொலைத் தொடர்புத்துறை முன்னாள் அமைச்சர் ராசா சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கறிஞர்களால் விளக்க முடியாத சில விடயங்களை நானே நீதிமன்றில் ஆஜராகி விளக்க விரும்புகிறேன்.

எனவே, உச்ச நீதிமன்றில் நடக்கவுள்ள இது தொடர்பான விசாரணைக்கு நேரில் ஆஜராக விரும்புகிறேன். இதற்கு அனுமதி அளிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதைத் தொடர்ந்து இந்த மனு மீதான விசாரணையை நேற்று ஒத்தி வைக்கப்பட்டதாக சிறப்பு நீதிமன்ற நீதிபதி ஒ.பி.சைனி அறிவித்தார். நேற்று நடந்த விசாரணையில் மனு தள்ளுபடி செய்யப்பட்டது. (4-2)

# பாரதச் செய்திகள்



## தனித்தெலுங்கானா போராட்டக்காரர்கள் ரயில் மறியல் போராட்டத்திற்கு அழைப்பு

ஆந்திராவில் தனி தெலுங்கானா மாநிலம் கோரி நீண்ட போராட்டம் நடந்து வருகின்றது. அடுத்தடுத்த போராட்டங்களாலும் 24 நாட்களாக ஐதராபாத் மற்றும் தெலுங்கானாவில் நடைபெறும் முழு அடைப்பு போராட்டத்தாலும் அந்தப் பகுதி ஸ்தம்பித்து விட்டது. பேருந்து போக்குவரத்து முடங்கியது.


நிலக்கரி சுரங்கம் மூடப்பட்டதால் ராமகுண்டம் அனல்மின் நிலையம் மூடப்பட்டு மாநிலம் இருளில் மூழ்கியுள்ளது. இந்த நிலையில் எதிர்வரும் 9, 10, 11 ஆகிய திகதிகளில் 3 நாட்கள் தொடர் புகையிரத மறியல் போராட்டத்துக்கு தெலுங்கானா போராட்டக்குழு அழைப்பு விடுத்துள்ளது.

இதையடுத்து ஆந்திர நிலைமை பற்றி முழு அறிக்கையுடன் டில்லிக்கு வருமாறு ஆளுநருக்கு மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. இதை ஏற்று ஆளுநர் நரசிம்மன் நேற்று டெல்லி செல்கின்றார். இன்று அவர் பிரதமர் மன்மோகன்சிங்கை சந்தித்து அவசர ஆலோசனை நடத்துகிறார்.

மேலும் தெலுங்கானா பிரச்சினை குறித்த முழு விபர அறிக்கையையும் பிரதமரிடம் அவர் சமர்ப்பிக்கிறார். பின்னர் அவர் உள்துறை மந்திரி ப.சிதம்பரம், நிதி மந்திரி பிரணாப் முகர்ஜி, காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி ஆகியோரையும் சந்தித்து தெலுங்கானா பிரச்சினை பற்றி விவாதிக்கிறார்.

ஆளுநரைத் தொடர்ந்து ஆந்திர முதல் - மந்திரி கிரண்குமார் ரெட்டியையும் டில்லி வருமாறு பிரதமர் அழைப்பு விடுத்துள்ளார். இன்று அவர் டில்லி சென்று பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்து தெலுங்கானா பிரச்சினை பற்றி ஆலோசனை நடத்தவுள்ளார்.

தெலுங்கானா ராஷ்டிரிய சமிதி தலைவர் சந்திரசேகர் ராவ் ஏற்கனவே டில்லியில் இருக்கிறார். அவர் மத்திய மந்திரிகள் பிரணாப் முகர்ஜி, ஏ.கே. அந்தோணி ஆகியோரை சந்தித்து தெலுங்கானா கோரிக்கையை நிறைவேற்ற வலியுறுத்தினார். ஆளுநர் அறிக்கையை தொடர்ந்து தெலுங்கானா பிரச்சினையில் மத்திய அரசு முக்கிய முடிவு எடுக்கும் என்று தெரிகிறது. (4-2)



டில்லி ராம் லீலா நிகழ்ச்சியில் பிரதமர் மன்மோகன்சிங், சோனியா பங்கேற்றதைப் படத்தில் காணலாம்.

# இந்திய விமானப் படையின் ஆண்டு விழாவில் பெண்களின் சாகச நிகழ்ச்சி

இந்திய விமானப் படையின் ஆண்டு விழாவில் பெண்கள் மட்டுமே பங்குபெறும் ஸ்கைடைவிங் நிகழ்ச்சி இடம்பெறுகிறது.

இன்று சனிக்கிழமையன்று இந்திய விமானப்படையின் ஆண்டுவிழா நடைபெறவுள்ளது. இவ்விழாவில் விமானப்படையில் இடம் பெற்றுள்ள அதிநவீன போர் விமானங்கள் மற்றும் வானில் விமானங்களின் சாகசங்கள் போன்றவை பொதுமக்களின் பார்வைக்கு விருந்தாக அமையும். இந்தாண்டு வித்தியாசமாக முழுமையாக பெண்கள் மட்டுமே பங்குபெறும் ஸ்கைடைவிங் எனப்படும் வானில் சில நிமிடங்கள் நடத்தப்படும் சாகச நிகழ்ச்சி இடம்பெறவுள்ளது.

இது குறித்து ஸ்கைடைவிங்கில் பங்குபெறும் ஆஷாஜோதிர்மயி தெரிவித்திருப்பதாவது, இந்த நிகழ்ச்சி முதன்முறையாக பெண்களால் பொதுமக்களின் முன்பாக நடத்தப்படவுள்ளது.

இதில் 6 பெண்கள் ஸ்கைடைவிங் சாகச நிகழ்ச்சியை நடத்தவுள்ளனர். வானில் சுமார் 8 ஆயிரம் அடி உயரத்தில் பறக்கும் விமானத்தில் இருந்து ஒருவர் பின் ஒருவராக வெளியேறி வானில் சில நிமிடங்கள் நட்சத்திர வடிவமாக ஜொலிக்க உள்ளனர் எனத் தெரிவித்தார். இந்த சாகச நிகழ்ச்சியில் வயது தடையேதுமில்லை என்பதற்கு இதில் இடம் பெற்றுள்ள ஸ்வரூப் என்ற பெண்மணியே உதாரணம்.ஏனெனில் இவருக்கு இரு குழந்தைகள் உள்ளன என ஜோதிர்மயி தெரிவித்தார். தற்போது உள்ள குழுவினர் விமானப் படை தினத்திற்காக மட்டும் பயிற்சிகளை எடுத்துக் கொள்வதோடு மட்டுமல்லாமல் அடுத்து வரவுள்ள சர்வதேச இராணுவ விளையாட்டுகளிலும் தங்களின் திறமையை வெளிப்படுத்த தயாராகி வருவதாக தெரிவித்தார். (4-2)

# தொலைபேசி இணைப்புக்கள் வழங்கியமை குறித்து அறிக்கை சமர்ப்பிக்க சி.பி.ஐ.க்கு உத்தரவு

(புதுடில்லி)

முன்னாள் மத்திய அமைச்சர் தயாநிதியின் வீட்டிற்கு 323 தொலைபேசி இணைப்புகளை சட்ட விரோதமாக வழங்கியது தொடர்பான பைல்களை தொலைத்தொடர்புத் துறை சமர்ப்பிக்க வேண்டும் என சி.பி.ஐ. உத்தரவிட்டுள்ளது.

மத்திய தொலைத்தொடர்புத்துறை அமைச்சராக தயாநிதி பதவி வகித்த காலத்தில் சென்னையில் உள்ள அவரின் போட் ஹவுஸ் இல்லத்திற்கு பி.எஸ்.என்.எல்.பொது மேலாளர் பெயரில் 323 தொலைபேசி இணைப்புகள் வழங்கப்பட்டன.

சன் டிவி அலுவலகத்தில் இருந்து பூமிக்கு அடியில் தயாநிதியின் வீட்டிற்கு அமைக்கப்பட்ட பிரத்தியே கேபிள்கள் மூலம் இந்த தொலைபேசி இணைப்புகள் எல்லாம் சட்ட விரோதமாக பயன்படுத்தப்பட்டன.

இந்த தொலைபேசி இணைப்புகள் எல்லாம் கட்டணம் அதிகமான ஐ.என்.டி.என். வசதிகளை கொண்டிருந்தன. அதன்மூலம் சன்டிவிக்குத் தேவையான தகவல்கள், செய்திகள் மற்றும் டிவி நிகழ்ச்சிகள் உலகம் முழுவதிலும் இருந்து வெகு விரைவாகப் பெறப்பட்டன என்று சில தரப்பில் புகார் தெரிவிக்கப்பட்டது.

புகார் குறித்து ஏற்கனவே நான்கு ஆண்டுகளுக்கு முன் விசாரணை நடத்திய சி.பி.ஐ. இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கும்படி மத்திய தொலைத்தொடர்புத் துறையை கேட்டுக் கெண்டது. ஆனால், அந்தத் துறையினர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்நிலையில் கடந்த வாரம் முழுமையாக விசாரணையை சி.பி.ஐ. ஆரம்பித்தது.

இதையடுத்து சன்டிவி நிறுவனத்திற்கும் தயாநிதியின் வீட்டிற்கும் இடையே அமைக்கப்பட்டிருந்த கேபிள்கள் மற்றும் அது தொடர்பான தொழில்நுட்ப ரீதியான விபரங்களைத் தரும்படி தகவல் தொடர்பத் துறையை சி.பி.ஐ. அதிகாரிகள் கேட்டுக் கொண்டுள்ளனர். (4-2)

# பவளப்பாறை மீது படகு மோதி விபத்து

## 25 மாலுமிகள் காயம்

நியூசிலாந்திலிருந்து 12 மைல் தூரத்தில் பயணித்துக் கொண்டிருந்த லைபிரியக் கப்பல் பவளப் பாறை மீது மோதியதில் நடுக்கடலில் விபத்துக்குள்ளாகியது.

இக்கப்பலில் பயணம் செய்த 25 மாலுமிகள் காயமடைந்ததுடன் கனமாக எரிபொருள் தாங்கிகள் பாதிப்புற்று ஆபத்திலுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இதனையடுத்து இக்கப்பலில் இருந்த 2 ஆயிரம் கலங்களும் விழாமல் இருந்தது அதிசயமிக்க விடயமாகவும் கூறப்படுகின்றது. 47,230தொன் நிறையுள்ள றினா என்ற கப்பல் நியூசிலாந்தின் வட தீவின் கிழக்குக் கரையிலிருந்து 12 மைல் தொலைவில் உள்ள பாறையிலேயே மோதுண்டுள்ளது.

இதனால் 236 மீற்றர் நீளக் கப்பலில் பல இடங்களில் துளை ஏற்பட்டுள்ளதுடன் சிறிதளவும் எண்ணையும் கசிவதாகவும் இதிலுள்ள சரக்குகள் என்னவென்று அடையாளம் காணப்படவில்லை எனக் கூறப்படுகின்றது.

இக்கப்பலுக்கு காலநிலையில் பிரச்சினையில்லாததால் இதுவரை எந்தவிதப் பிரச்சினையுமில்லையென்றும் இரு சரக்குகளில் நீர் ஏறியிருந்தாலும் அவை அகற்றப்பட்டுக் கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (4-2)

# ஆப்கானிஸ்தானை தனது கட்டுப்பாட்டில் கொண்டுவர தலிபான்கள் புதிய முயற்சி

ஆப்கானில் உள்ள அமெரிக்கப் படைகள் விரைவில் வெளியேறவுள்ளன. இந்நிலையில் ஆப்கானை மீண்டும் தங்களது கட்டுப்பாட்டில் கொண்டு வர புதிய உத்தியை கையாள தலிபான்கள் திட்டமிட்டுள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா மற்றும் அதன் நேச நாடுகளின் படைகளை எதிர்த்து தலிபான்கள் போராடி வருகின்றனர். இதுவரை மேற்கொண்ட நடவடிக்கைகளுக்குப் பதிலாக புதிய உத்தியை கையாள தலிபான்கள் திட்டமிட்டுள்ளனர். தாங்கள் நடத்தும் தாக்குதலில் அதிகளவில் பொதுமக்கள் உயிரிழக்ககூடாது. அதேசமயம் குறிப்பிட்ட இலக்குகளை துல்லியமாக தாக்கத் திட்டமிட்டுள்ளனர்.

இதை உறுதிப்படுத்தும் வகையில் சமீபத்தில் ஆப்கான் முன்னாள் ஜனாதிபதியும் அமைதிக் குழு தலைவருமான பர்ஹநுதீன் ரப்பானியை கொன்றது குறிப்பிடத்தக்கது.

தற்போது அமெரிக்கப் படைகளுடனான பெரிய அளவிலான மோதலை தலிபான் மற்றும் அதன் தோழமை அமைப்பான ஹக்கானி உள்ளிட்டவை தவிர்த்து வருகின்றன. அதேசமயம் ஆப்கான் ஜனாதிபதி ஹமீது ஹர்சாயுடன் அமைதி குறித்துப் பேச்சுவார்த்தையும் நடத்தி வருகின்றனர்.



தங்களது இந்தத் தந்திரம் அமெரிக்கப் படைகளை ஆப்கான் மண்ணைவிட்டு விரைவில் வெளியேற்றும் என தலிபான் அமைப்பினர் நம்புகின்றனர்.

அதேசமயம் செப்டெம்பர் 13 ஆம் திகதி காபூலில் உள்ள அமெரிக்கத் தூதரகம் மீதான தாக்குதல் போன்ற நடவடிக்கைகள் மூலம் நகர் பகுதியில் குறிப்பிட்ட சில இலக்குகளை தாக்கும் உத்தியை தலிபான்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்குப் பதிலாக வான்வழித் தாக்குதலை நடத்தினால் ஏராளமான பொதுமக்கள் உயிரிழக்க நேரிடும் என்பதால் நேட்டோ படைகள் செய்வதறியாது தவிக்கின்றன.

சமீபத்தில் வான்வழித் தொலைத் தொடர்பையும் சில மணி நேரம் தலிபான்கள் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

தங்கள் ஆட்சியிலிருந்த போது நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதற்கு தலிபான்கள் தடை விதித்திருந்தனர். தற்போது அக்கொள்கையிலும் மாற்றம் செய்து நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தத் தொடங்கி விட்டனர்.


ரப்பானியை கொன்றதன் மூலம் தங்களுக்கு அமைதிப்பேச்சுவார்த்தையில்நம்பிக்கையில்லை என்பதை தலிபான்கள் தெளிவாகத் தெரிவித்து விட்டனர். மேலும் அமெரிக்கப் படைகள் வெளியேறியதும் எதிர்காலத்தில் ஆப்கானில் ஆட்சி அமைக்கப் போவது தாங்கள் தான் என்பதையும் சூசகமாக வெளிப்படுத்தியுள்ளனர்.

தங்களின் முந்தைய கல்வி மற்றும் வியாபார வளர்ச்சி தொடர்பான கொள்கைகளில் சிறிது மாற்றம் செய்து உள்ளூர் பயங்கரவாத குழுக்கள் மூலம் மக்களிடையே தீவிரப் பிரசாரத்திலும் ஈடுபட்டுள்ளனர்.

ஆப்கான் அரசின் செயற்பாடற்ற தன்மை குறித்து பிரசாரம் செய்வதன் மூலம் மக்களை தங்கள் பக்கம் திருப்ப தலிபான்கள் முயற்சிக்கின்றனர். கடந்த 1990 களில் ஆப்கானிஸ்தானில் தாங்கள் நடத்திய ஆட்சியின் போது இருந்த கெடுபிடியை மாற்றி உலக நாடுகளின் கருத்துக்களை கேட்கத் தயாராக இருப்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர்.

எதிர்வரும் 2014 ஆம் ஆண்டுக்குள் அமெரிக்கா மற்றும் நேச நாடுகளின் படைகள் அனைத்தும் ஆப்கானிஸ்தானில் இருந்து விலக்கிக் கொள்ளப்படவுள்ளன. அதன் பின் பாதுகாப்பை ஆப்கான் அரசுப் படைகளே மேற்கொள்ளும் எனக் கூறப்படுகன்றது.

அதுபோன்ற ஒரு சூழ்நிலையில் அர சுப் படைகளால் தங்களை தலிபான்களிடமிருந்து பாதுகாக்க முடியாது என அந்நாட்டை சேர்ந்த குடிமக்களில் பலர் கருதுகின்றனர். இதையடுத்து தலிபான்களை வரவேற்க பலர் தயாராகி விட்டதாக கூறப்படுகின்றது. (4-2)



அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவை ஹோண்டுராசின் தலைவர் போர்பிரியோ லோபோ(இடது) வோஷிங்டனில் உள்ள வெள்ளை மாளிகையில் சந்தித்ததைப் படத்தில் காணலாம்.

# பின்லேடனை கொலை செய்ய உதவிய மருத்துவர் தேசத்துரோகி

## பாகிஸ்தான் தெரிவிப்பு



அல்கொய்தா அமைப்பின் தலைவர் ஒசாமா பின்லே;ன் கொல்லப்பட்டதான அமெரிக்க இராணுவ நடவடிக்கை தொடர்பான விசாரணை செய்யும் பாகிஸ்தானிய ஆணைக் குழுவொன்று அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ.க்கு உதவியதாக கூறப்படும் வைத்தியரை தேசத்துரோகம் செய்த குற்றச்சாட்டின் பேரில் விசாரணை செய்ய வேண்டுமென தெரிவித்துள்ளது.

ஒசாமா பின்லேடன் குறித்த இடத்தில் உள்ளாரென தீர்மானிக்க உதவும் வகையில் மரபணு (டி.என்.ஏ) மாதிரிகளை பெறுவதற்காக அபோதாபாத் என்னும் இடத்தில் சி.ஐ.ஏ. ஏற்பாடு செய்த போலி தடுப்பூசி ஏற்றும் நிகழ்ச்சித் திட்டத்தை நடத்தியதாக டாக்டர் ஷகீல் அவ்ப்ரிடி குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்.

அல்கொய்தா தலைவரான ஒசாமா பின்லேடன் அமெரிக்க திடீர்ப்பாய்ச்சல் குழுவால் மே மாதம் இரண்டாம் திகதி கொல்லப்பட்ட சில நாட்களின் பின்னர் இவர் கைது செய்யப்பட்டார்.

இந்த ஆணைக்குழு பல உளவு அதிகாரிகளை விசாரித்து வருகின்றது. கடந்த புதன் கிழமை இக்குழு பின்லேடனின் குடும்பத்தை விசாரணை செய்தது.


அமெரிக்காவின் விசேட படையணியின் இரகசியத் தாக்குதலை அதன் இறைமையை மீறிய செயலென்பதால் பாகிஸ்தான் சங்கடத்துக்கு உள்ளாகியுள்ளது.

அமெரிக்கா எவரும் அறியாத வகையில் இந்தத் தாக்குதலை மேற்கொண்டது எவ்வாறு என ஆராய்வதற்காக முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதியொருவர் தலைமையில் பாகிஸ்தான் விசாரணைக்குழுவொன்றை அமைத்துள்ளது.

ஓர் இராணுவ நகரமான அபோதாபாத்தில் பல வருடங்களாக ஒளிந்து வாழ எப்படி ஒசாமா பின்லேடனால் முடிந்ததென்பதையும் இந்த ஆணைக்குழு ஆராய்ந்து வருகின்றது. (4-2)




# ஆப்கான் ஜனாதிபதியை கொலை செய்ய தீவிரவாதிகள் முயற்சி



ஆப்கானிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகளின் தாக்குதல் அதிகரித்துள்ளது. இதற்கு பாகிஸ்தானின் உளவுத்துறை ஐ.எஸ்.ஐ.நேரடியாக உதவி வருகிறது என்று அமெரிக்கா பகிரங்க குற்றச்சாட்டு கூறி வருகிறது.

இதற்கிடையில் ஆப்கானில் அமைதிக்காக பாடுபட்டு வந்த முன்னாள் ஜனாதிபதி ரப்பானியை தலிபான் தீவிரவாதிகள் சமீபத்தில் சுட்டுக் கொன்றனர்.

இதையடுத்து தலிபான் தீவிரவாதிகளை ஒடுக்க சர்வதேச அளவில் ஆப்கான் ஜனாதிபதி ஹமித் கர்சாய் உதவி கேட்டு வருகிறார்.

இந்நிலையில் ஜனாதிபதி கர்சாயை கொலை செய்ய திட்டமிட்ட மருத்துவ பேராசிரியர் மாணவர்கள் 4 பேரை கைது செய்துள்ளதாக ஆப்கான் உளவுத்துறை அதிகாரிகள் திடுக்கிடும் தகவல் வெளியிட்டுள்ளனர்.

இது குறித்து அவர்கள் கூறுகையில், ஹக்கானி தீவிரவாத கும்பலை சேர்ந்தவர்கள் மருத்துவ பேராசிரியர் மாணவர்களுக்கு தீவிரவாத பயிற்சி அளித்துள்ளனர். அவர்கள் மூலம் ஹர்சாயின் பாதுகாவலர் ஒருவரை தங்கள் வலையில் விழ வைத்துள்ளனர்.

அவர் மூலம் ஹர்சாயை கொல்ல சதி திட்டம் தீட்டியது கண்டுபிடிக்கப்பட்டது. உடனடியாக பாதுகாவலரும் ஏனைய 4 பேரும் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்து 1.5 இலட்சம் அமெரிக்க டொலரும் பறிமுதல் செய்யப்பட்டது. அவர்களிடம் தீவிர விசாரணை நடக்கிறது என்று தெரிவித்தனர்.

ஆப்கான் ஜனாதிபதியாக 2002 இல் பதவியேற்ற பின்னர் ஹமித் ஹர்சாயை கொல்ல 3 முறை முயற்சி நடந்தது. கடந்த 2008 இல் இராணுவ அணிவகுப்பில் ஹர்சாய் பங்கேற்ற போது ரொக்கெட் வீசி கொல்ல முயற்சி நடந்தது. அதில் அதிர்ஷ்டவசமாக அவர் உயிர் தப்பினார் என்பது குறிப்பிடத்தக்கது. (4-2)

நியாயம் இன்னதென்று அறிந்தும் அதை நீ செய்யாதிருப்பது கோழைத்தனமாகும்.

– கோன்பு தஸன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# எங்கள் உழைப்பை உறிஞ்சி எங்களைக் கருக்கும் மதுவும் சோடாவும்

வடபுலத்து தமிழ் மக்களை வழிப்படுத்துவதற்கான அரசியல் தலைமையோ அல்லது அரச நிர்வாகத் தலைமையோ தற்போது இல்லை எனலாம்.

எங்கள் இளைஞர்கள் வழிப்படுத்த ஆளின்றி பாதை தெரியாமல் பயணித்துக் கொண்டிருக்கின்றனர்.

யாழ்.மாவட்டத்திலும் கிளிநொச்சி மாவட்டத்திலும் அண்மையில் ஒரு கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

அதில் ஒரு மாதத்திற்கு பத்துக் கோடி ரூபாவுக்கு மதுபானம் விற்பனையாகும் அதிர்ச்சித் தகவல் தெரியவந்துள்ளது.

மதுபானத்தின் இத்தொகைக்குப் போட்டியாக சோடா வகைகளும் மாதாந்தம் பத்துக் கோடி ரூபாவுக்கு விற்பனையாகும் செய்தி மேலதிகமாக உண்டு.

என்னே அநியாயம். போரினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்திலும் யாழ்ப்பாண மாவட்டத்திலும் மாதம் பத்துக் கோடி ரூபாய்க்கு மதுபானத்தை விழுங்கி உடலையும் குடும்பத்தையும் பரிநாசம் செய்கின்றோம்.

இது தவிர எங்கள் கிணற்று நீரைக் குடித்துத் தாகம் தீர்க்கத் தெரியாமல் சோடாவுக்கும் மாதாந்தம் 10 கோடி ரூபாயைச் செலவிடுகிறோம் எனில், எங்கள் இளம் சந்ததியின் எதிர்காலம் எப்படியிருக்கப் போகின்றது என்பதை ஒரு கணம் சிந்தித்தாக வேண்டும்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இரு மாவட்டங்களிலும் மதுவும் சோடாவும் மாதாந்தம் 20 கோடி ரூபாயைத் தென்னிலங்கைக்கு அனுப்பிவிட, சிகரெட்டும் கையடக்கத் தொலைபேசியும் எங்கள் உழைப்பின் பெரும்பகுதியை உறிஞ்சி விடுகின்றன.

என்ன செய்வது? எங்கள் தலைவிதி இதுவாயிற்று. வருடத்தில் ஒருநாள் மதுவுக்கும் புகைத்தலுக்கும் எதிராகக் குரல் கொடுத்துவிட்டு எல்லாம் திருந்திவிட்டது என்ற நினைப்போடு எங்கள் மத்தியிலுள்ள அரச, அரச சார்பற்ற அமைப்புகள் வாகனங்களில் ஓடித்திரிந்து உழைப்பு நடத்த, எங்கள் இளைஞர்கள் இரவு வேளைகளில் மதுபானச்சாலைகளில் அடைக்கலம் புகுந்துவிடுகின்றனர்.

ஓ! என்னினமே! என் இளைஞர் சமூகமே! உங்களைப் போன்ற இளைஞர்கள்தானே கனவு கண்டார்கள். அதற்காகத் தங்கள் உயிரை ஆகுதியாக்கினார்கள். ஆனால் நீங்கள் ஏன்தான் இப்படி. ஒரு கணம் சிந்தியுங்கள். மதுவுக்கு, குளிர்ச்சோடாவுக்கு, நெஞ்செரிக்கும் சிகரெட்டுக்கு, அரட்டையடிக்கக் காசைக் கரியாக்கும் கையடக்கத் தொலைபேசிக்கு ஒருநாளில் எவ்வளவைத் தாரை வார்க்கிறீர்கள்? கணக்கிட்டுப் பார்த்தால் கண்ணீர் சொரியும்.

கூடவே உங்களை வளர்ப்பதற்காக உங்கள் தந்தையும் தாயும் நோன்பிருந்ததை நினைத்தால் – உங்களை நம்பியிருக்கும் உம் தங்கையின் எதிர்காலத்தை நினைவிருத்தினால் எல்லாமும் விளங்கும். குந்தியிருந்து ஒரு கணம் உன்னையே நீ சிந்தித்து அறி. அது போதும்.

# இந்தியாவையும் சர்வதேச நீதிமன்றில் நிறுத்த வேண்டும்

## வைகோ சூளுரை



இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பில் இந்தியாவையும் சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டுமென வைகோ சூளுரைத்துள்ளார்.

இலங்கை அரசானது தமிழ் மக்களைக் காலனிப் பகுதிகள் போன்ற அடிப்படை வசதிகளற்ற இடங்களில் குடியமர்த்தி வைக்க முயற்சிக்கின்றது என்றும் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ குற்றம் சாட்டியுள்ளார்.

இலங்கை அரசர்ங்கமானது இனவாதம் கொண்டது. தமிழ் மக்களை இனப்படுகொலை செய்த பாசிச வெறித்தனம் கொண்டது.

எனவே இலங்கை அரசாங்கத்துக்கு ஆதரவளித்து தமிழர்களுக்குத் துரோகம் செய்த இந்திய மத்திய அரசாங்கத்தையும் சர்வதேச போர்க்குற்ற நீதிமன்றத்தில் நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் தொடர்ந்தும் வலியுறுத்தியுள்ளதாக ஏ.என்.ஐ. ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (4-2)

# பிராந்திய நிலைய ஆரம்ப வைபவம்

தேசிய கல்வி நிறுவகத்தால் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படும் கல்விமாணிப் பட்ட நெறி பிராந்திய நிலைய ஆரம்ப வைபவம் நாளை மறுதினம் 10ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு அதிபர் எஸ்.சேதுராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா கலந்துகொள்கிறார்.

அன்றைய தினம் கல்விமாணிப் பட்டப் பாடநெறிக்குப் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான பதிவுகளும் இடம்பெறவுள்ளன.

இவ்வாரம்ப வைபவத்தில் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கல்விமாணிப் பட்ட நெறி முதலாம், இரண்டாம், மூன்றாம் மற்றும் வருட ஆசிரியர்களைக் கலந்து சிறப்பிக்குமாறு தேசிய கல்வி நிறுவக இணைப்பாளர் எஸ்.ஆர்.சத்தியேந்திரம்பிள்ளை கேட்டுள்ளார். (எ-12)

# அபிவிருத்திக் கண்காட்சியில் ஜெய்ப்பூர் தயாரிப்புகள்

தைடியிலுள்ள உள்ளூராட்சி அமைச்சு வளாகத்தில் நடைபெறும் அபிவிருத்தியில் உள்ளூர் வளங்கள் மாகாணக் கண்காட்சியில் பங்குபற்றும் சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத் தயாரிப்புகளும் காட்சிப் படுத்தப்பட்டுள்ளதாக கௌரவ பொருளாளர் செ.தெய்வேந்திரன் அறிவித்துள்ளார்.

இக்கண்காட்சியில் செயற்கை அவயவங்கள், அவயவம் சார் உறுப்புகள், நடமாடும் உபகரணம், இயன்மருத்துவம் உட்பட பல்வேறு விடயங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. ஆர்வலர்கள் மற்றும் மாற்று வலுவுள்ளோர்கள் பார்த்துப் பயன்பெறுமாறு யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவன முகாமைத்துவக் குழுவினர் கேட்டுள்ளனர். (எ-12)

# கடலரிப்பை தடுப்பதற்கு தாவரங்கள் நடும் திட்டம்

கடலரிப்பைத் தடுப்பதற்காக கடற்கரையோரங்களில் தாவரங்களை நடும் திட்டமொன்றை ஆரம்பித்துள்ளதாகக் கடற்கரைப் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதிகளவில் கடலரிப்பு ஏற்படும் பிரதேசங்களுக்கு இதன்போது முன்னுரிமை அளிக்கப்படுவதாக திணைக்களத்தின் பணிப்பாளர் கலாநிதி அனில் பிறேமரத்ன கூறியுள்ளார்.

ஏற்கெனவே தெரிவு செய்யப்பட்ட சில கரையோரங்களில் தாவரங்களை நடும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (4-2)

# தாய்லாந்தில் வெள்ளப்பெருக்கு 240 பேர் பலி; 700 வீடுகள் சேதம்

தாய்லாந்தில் பெய்துவரும் மழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் 240 பேர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தாய்லாந்தின் 58 மாகாணங்களில் உள்ள 179 மாவட்டங்களிலும் நேற்று முன்தினம் முதல் பெய்துவரும் கடும் மழையால் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் இவ்வெள்ளப்பெருக்கால் இதுவரை 240 பேர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவித்துள்ள அந்நாட்டின் மீட்புக் குழுவினர் உயிரிழந்தோர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அச்சம் வெளியிட்டுள்ளனர்.

அதேவேளை 700இற்கும் மேற்பட்ட வீடுகள் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் 25 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இவ்வெள்ளப்பெருக்கால் வீதிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதால் மீட்பு நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (பா)

# கிளிநொச்சியில் கண் சிகிச்சை முகாம்

(கொழும்பு)

கெல்ப் எயிட் ஸ்ரீலங்காவானது முதியோருக்கான கண் சத்திரசிகிச்சை முகாமொன்றினை நாளை மறுதினம் திங்கட்கிழமை கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் நடத்தவுள்ளது.

எனவே இம்முகாமில் சத்திர சிகிச்சை பெற விரும்புவர்கள் அன்றைய தினம் கிளிநொச்சி வைத்தியசாலைக்குச் சென்று உதவிகளை பெறமுடியும்.

வவுனியாவில் இருந்து செல்ல விரும்புபவர்கள் நாளை மறுதினம் 9 மணிக்கு வவுனியா பொது வைத்தியசாலையின் இரண்டாம் மாடியில் உள்ள கண் சிகிச்சைப் பிரிவிற்கு சமுகமளித்து அங்குள்ள கெல்ப் எயிட் நிறுவன தொண்டர்களுடன் தொடர்பு கொள்வதனூடாக போக்குவரத்து வசதிகளை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-2)

# பொதுக்கூட்டம்

(நல்லூர்)

கோப்பாய் தெற்கு கிராம அபிவிருத்தி சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் புதுவருட நிர்வாகிகள் தெரிவும் எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4 மணிக்கு கோப்பாய் தெற்கு கிராம சேவை யாளர் அலுவலக மண்டபத்தில் சங்கத்தின் தலைவர் எஸ். தங்கவேலாயுதம் தலை மையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கோப்பாய் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி அதிகாரியும் கலந்து கொள்ளவுள்ளார். (4-3-134)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## தவம்




நான் எனும் ஆணவம் இன்றிச் செயற்படின் நமது பணிகள் சிறப்புற அமையும். செல்வாக்கு மிக்கதாக விளங்கும். தனக்கு எது தேவையோ அதை இறைவன் தந்தருளவில்லை என்ற காரணத்தினால் உலகம் இறைவனைத் துறந்து விட்டது. உதாசீனப்படுத்தியுள்ளது. கடவுளை ஒரு நகராண்மைக்கழக அதிகாரியாகவா நாம் நினைப்பது?

கடும் தவத்தினால் ஆற்றல் ஒருவனை வந்தடைவது என்னவோ உண்மைதான். ஆயினும் பிறர் பொருட்டுப் பாடுபடுவதுதான் உண்மையான தவம் ஆகும். கர்மயோகிகள் கர்மத்தைத் தவத்தின் ஒரு பகுதியாகவே ஏற்கின்றனர். தவம் பிறர் நலம் போற்றும் உயர் பண்பினை வளர்க்கிறது. தன்னலமற்ற சேவையில் ஈடுபட அவனை வாழும் அத் தொண்டனிடம் தவத்தின் சிகரமான மனத் தூய்மையினையும் அளிக்கிறார். இங்ஙனம் அவன் தன்னிடமிருந்த மன மாசுகள் நீங்கப் பெற்று ஆத்மானுபூதி எனும் பெரு நிலையை அடைகிறான். சொல்லப் போனால் பற்றற்றுச் செய்யும் பணியும் தவத்தைப் போன்று கடினமானது தான்.

# அரசாங்கம் தன்னை பாதுகாத்துக் கொள்ள தமிழர்களுக்கான உரிமை வழங்க வேண்டும்

## சுரேஷ் எம்.பி. தெரிவிப்பு



பாலஸ்தீனத்தை தனிநாடாக்கக் கோரிக்கை விடுக்கும் இலங்கை அரசாங்கம் அங்கு இஸ்ரேல் பின்பற்றும் மோசமான வழிமுறைகளையே தமிழர் தாயகத்தில் பின்பற்றுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

கல்முனை மாநகரசபைத் தேர்தலுக்கான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இறுதித் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழர் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய உறுப்பினர் பேராசிரியர் எம்.இராஜேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சுரேஷ் பிரேமச்சந்திரன் மேலும் தெரிவித்துள்ளதூவது,

அரசாங்கம் இன்று வடக்கில் மட்டுமல்ல, கிழக்கிலும் படைத்தரப்பினரை நிலை கொள்ள வைக்கும் நடவடிக்கையிலேயே முனைப்பாக மேற்கொண்டு வருகின்றது. படைத்தரப்பின் இராணுவ நிலைகளை நிரந்தரமாக உருவாக்குவது, அவர்களுக்கான முகவர்களை உருவாக்குவது, படைத்தரப்பினருக்கான குடியிருப்புக்களை உருவாக்குவது போன்ற செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

அத்துடன் வடக்கு, கிழக்கில் பரந்துபட்ட நிலையில் இலங்கை படைத்தரப்பினர் குடியமர்த்தப்படுவதாக இருந்தால் இதன் பிற்பாடு சிங்கள மக்களை அங்கு குடியேற்றவும் அவர்களுக்குப் பாதுகாப்பான சூழ்நிலையை ஏற்படுத்தவும் முடியும் என்ற திட்டமிட்ட செயற்பாடு அரங்கேறிக் கொண்டிருக்கின்றது.

இதனால் எவரும் எதுவும் செய்ய முடியாத நிலை ஏற்படுவதுடன் அரசாங்கம் தான் விரும்பியவற்றை நடத்தலாம். ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்த பட்சம் 30 சதவீதம் சிங்கள மக்களை குடியேற்ற வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் தான் அரசாங்கம் இயங்கி வருகின்றது.

இந்நிலையில் தான் சர்வதேசத்தினால் போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டு அரசாங்கம் பெரும் நெருக்கடி நிலையை எதிர்கொண்டுள்ளது.

விடுதலைப் புலிகள் காலத்தில் போர் இடம்பெற்றது. இதற்கு முன்பு தந்தை செல்வா அகிம்சை வழியில் 30 வருடங்களுக்கு மேலாக போராடினார். அப்பொழுது இலங்கையில் அகிம்மைப் போராட்டம் ஒன்று நடப்பதாக உலகிற்கு தெரியாது.தமிழ் மக்கள் எவ்வளவு தூரம் துன்புறுத்தப்படுகின்றனர். தமிழ் மக்களின் நிலங்கள் எந்தளவு கபளீகரம் செய்யப்படுகின்றது என்பதும் அன்று உலகிற்கு தெரியாது. ஆனால், ஆயுதப் போராட்டம் ஒன்று ஆரம்பித்த பொழுது அந்தப் போராட்டம் ஓரளவுக்கு வெளியே தெரிய வந்தது. ஆனாலும் அதற்கு ஆதரவு கிடைக்கவில்லை. வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரில் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டிருக்கலாம்.

ஆனால் அந்தப் போராட்டம் தமிழ் மக்களின் பிரச்சினைகளை சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்தியது. இலங்கை மண்ணில் தமிழ் மக்கள் சரிசமனாக நடத்தப்படவில்லை. அவர்கள் இரண்டாம் தரப் பிரஜைகளாக நடத்தப்படுகின்றனர். அந்த மக்களுக்கு ஓர் அரசியல் தீர்வு தேவை. அரசாங்கம் அதற்கான ஏற்பாட்டை செய்ய வேண்டும் என சர்வதேசம் கூறும் அளவுக்கு நிலைமைகள் மாறியுள்ளன. அத்துடன் அரசாங்கத்தின் இராணுவ மயப்படுத்தும் திட்டத்தை அறிந்து கொண்ட சர்வதேசம் சட்டம் ஒழுங்குகளை பொலிஸாரே கவனிக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது. அதேவேளை அரசாங்கத்திற்கு பாரிய நெருக்குதல்கள் இன்று ஏற்படுத்தப்பட்டுள்ளன. அரசாங்கம் தன்னைப் பாதுகாக்க, ஜனாதிபதி தன்னைப் பாதுகாத்துக் கொள்ள, கோத்தபாய ராஜபக்ஷ தன்னைப் பாதுகாத்துக் கொள்ள, ஏன் ராஜபக்ஷ குடும்பத்தையே பாதுகாத்துக் கொள்ள வேண்டுமானால் நிச்சயம் பல கேள்விகளுக்கு பதில் சொல்ல வேண்டியது மாத்திரமல்ல தமிழ் மக்களுடைய உரிமைகளை கொடுக்க வேண்டிய சூழ்நிலைக்கும் தள்ளப்படும் நிலை வந்துள்ளது. எவர் என்ன செய்தாலும் அரசாங்கம் கூடிய பிரச்சினைகளை நமக்கு ஏற்படுத்தினாலும் கூட இன்று நிலைமை மாறிக் கொண்டு வருவதே உண்மையாகும். இதே வேளை நாங்கள் இந்த மண்ணில் வாழப் பிறந்தவர்கள். அதற்கு ஏற்ற வகையில் நாங்கள் எங்களது உரிமைகளுடன் வாழ வேண்டும். ஜனாதிபதி ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தர பிரதிநிதியூடாக பாலஸ்தீனம் தனி நாடாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என உலகுக்கு கூறியுள்ளார்.

எமக்கு முன்பாக பல தசாப்தங்களாக அந்த மக்கள் போராடிக்கொண்டிருக்கின்றனர். எனவே, தனிநாடு கோரிக்கை சரியானதே. ஆனால் அந்தப் பாலஸ்தீனத்தை தனி நாடாக்க வேண்டும் எனக் கூறுபவர்கள் பாலஸ்தீனத்திற்கு எதிராக இருக்கும் இஸ்ரேல் அங்கு என்ன மோசமான வழிமுறைகளை பின்பற்றுகின்றதோ அதைப் தமிழ் பிரதேசங்களில் பின்பற்றுகின்றனர் என்பது தான் வேடிக்கையான, வேதனையான விடயமாகும்.

பாலஸ்தீனத்தில் முஸ்லிம் மக்கள் வாழக் கூடிய காஸா பிரதேசம் போன்ற பல பிரதேசங்களில் இஸ்ரேலியக் குடியிருப்புக்கள் உருவாக்கப்படுகின்றன. பாலஸ்தீன மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் இவை உருவாக்கப்படுகின்றன.

எனினும் ஒரு பக்கத்தில் பேச்சுவார்த்தை என்று சொல்லிக் கொண்டு மறுபக்கத்தில் முழுத் தமிழ் சமுதாயத்தையும் குழிதோண்டிப் புதைக்கும் வேலையில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. இவ்வாறானவர்களுடன் தான் நாம் பேசிக்கொண்டிருக்கிறோம் என அவர் மேலும் தெரிவித்தார். (4-2)

# இலங்கையிலிருந்து தங்கம் கடத்தியவர்கள் சென்னை விமான நிலையத்தில் கைதாகினர்

(கொழும்பு)

இலங்கையிலிருந்து 2 கிலோ எடை கொண்ட தங்க நகைகளை க்டத்தி வந்த 8 பேர் கொண்ட கும்பலை சென்னை விமான நிலையத்தில் அதிகாரிகள் மடக்கிப் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இலங்கையிலிருந்து பெருமளவில் தங்கம் கடத்தி வரப்படவுள்ளதாக சென்னை விமான நிலைய அதிகாரிகளுக்குக் கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து இலங்கையிலிருந்து நேற்றைய தினம் விமானங்களில் பயணிக்கும் பயணிகளை தீவிர பரிசோதனை நடத்துமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டிருந்தது.

அதன் பிரகாரம் நேற்று அதிகாலை முதலே கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டது. அதிகாலையில் ஜெட் ஏர்வேஸ் விமானம் ஒன்று கொழும்பிலிருந்து வந்தது. அதில் வந்த பயணிகளை அதிகாரிகள் தீவிரமாக சோதனையிட்டனர். அப்போது பிரஸ்தாப எட்டு பேர் மீது சந்தேகம் வந்தது.

இதையடுத்து அவர்களை அதிகாரிகள் தனியாக அழைத்துச் சென்றனர். கிட்டத்தட்ட 2 மணி நேரம் நடந்த விசாரணையின்போது அவர்கள் உருப்படியான த்கவலைக் கூறாமல் இழுத்தடித்து வந்தனர். இதனையடுத்து அவர்களை முறைப்படி அதிகாரிகள் விசாரித்ததைத் தொடர்ந்து உண்மையைத் தெரிவித்தனர்.

இதையடுத்து அவர்களது உடைமைகளை அதிகாரிகள் பரிசோதித்தனர். அப்போது யாருக்கும் தெரியாத வகையில் பெண்கள் அணியும் தங்க வளையல்களை அவர்கள் பதுக்கி வைத்திருந்தது தெரியவந்தது.

மொத்தம் 2 கிலோ எடை கொண்ட ரூபா 50 இலட்சம் மதிப்புள்ள நகைகள் அவர்களிடமிருந்து மீட்கப்பட்டன. அதனையடுத்து அவர்கள் எட்டு பேரையும் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இந்த எட்டு பேரும் கூலிக்காக அமர்த்தப்பட்டவர்கள் என்பது விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (4-2)




# தொண்டராசிரியர்களுக்கு நியமனம் எப்போது?

ஆசிரியர்களை மதித்து முதன்மைப்படுத்தி அவர்களின் சேவையைக் கௌரவிக்கும் நோக்கில் உலக ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகின்றது. இது எமது நாட்டிலும் உள்ள வழமை. இவ்வகையில் எமது நாட்டு அரசாங்கத்தால் நாட்டுக்கே பெரும் பணியாற்றி வரும் ஆசிரியர்களைக் கௌரவிக்கும் செயற்பாடுகள் நடைபெறுகின்றன. இது வரவேற்கத் தக்கது.

ஆனாலும் இன்னொரு பக்கத்தில் தாம் சேவையாற்றுவதற்குரிய சம்பளம் ஏதும் இன்றி நீண்டகாலமாக பாடசாலைகளில் சேவையாற்றி வரும் வன்னிப் பகுதித் தொண்டர் ஆசிரியர்களை எல்லாவகையிலும் புறக்கணித்தது போல பாராமுகமாக இருப்பது வன்னிப் பகுதித் தொண்டர் ஆசிரியர்களாகிய எமக்குப் பெரும் வேதனையையும் விரக்தியையும் தருகின்றது.

கடந்த பத்து வருடங்களுக்கும் மேலாக எவ்வித வேதனமும் இன்றி வன்னிப் பகுதிப் பாடசாலைகளில் சேவையாற்றி வரும் நாம் கடந்த கால கொடிய யுத்தத்தாலும் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளோம். கடந்த காலத்தில் வட பகுதித் தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்பட்ட போது கூட வன்னிப் பகுதித் தொண்டர் ஆசிரியர்களாகிய நாம் மட்டுமே புறக்கணித்து ஒதுக்கப்பட்டோம்.

காலத்திற்குக் காலம் எமக்கும் நியமனம் வழங்கப்படும் என்ற வாக்குறுதிகள் மட்டுமே தான் பலராலும் வழங்கப்பட்டுள்ளன. இதனை நம்பியேதான் 10,13 வருடங்களாக ஏமாற்றப்பட்டவர்களைப் போல பெருங்கஷ்டங்களை எதிர் நோக்குகின்றோம்.

எனவே எல்லாவகையிலும் பாதிக்கப்பட்டு எமக்கும் நிரந்தர ஆசிரியர் நியமனம் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் சேவையாற்றி வரும் வன்னிப் பகுதித் தொண்டர் ஆசிரியர்களாகிய எமது சேவைகளையும் கருத்தில் எடுத்து எமக்கும் நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்க ஆவன செய்து உதவுமாறு உரியர்களை மிக மிக எதிர்பார்ப்புடனும் பணிவாகவும் கேட்டுக் கொள்கின்றோம்.

வன்னி தொண்டராசிரியர் ஒன்றியம்

# பாதுகாப்பு கடமைகளில் விசேட பொலிஸ் குழுக்கள்



உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளில் 22 ஆயிரம் பொலிஸாரை உள்ளடக்கிய 18 விசேட பொலிஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்படுவர் என தேர்தலுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரத்ன தெரிவித்துள்ளார்.

நீதி– நேர்மையான தேர்தலை நடத்துவதற்குரிய சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், தேர்தல் நியதிகளை மீறியமை தொடர்பாக இதுவரை மிகவும் சொற்ப முறைப்பாடுகளே கிடைத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

தேர்தலில் முக்கிய தினங்களாகக் கருதப்படும் இன்றும் நாளையும் வாக்களிப்புத் தினத்திலும் விசேட பாதுகாப்பு ஒழுங்குகள் நடைமு றைப்படுத்தப்படும் எனவும் தெரிவித்தார். இன்று நடைபெறவுள்ள 23 உள்ளூராட்சிச் சபைகளுக்குமான தேர்தல் நடவடிக்கைகளுக்கான பாதுகாப்புத் திட்டங்கள் குறித்து பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலையொட்டிய வன்முறைச் சம்பவங்களில் இதுவரை 194 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் 45 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

வழமையான தேர்தல்களோடு ஒப்பிடும் போது இம்முறை வன்முறைகள் வெகுவாகக் குறைந்துள்ளதுடன் சிறு சிறு சம்பவங்களே பதிவாகியுள்ளன. 93 வன்முறைச் சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகள் இதுவரை பொலிஸாருக்குக் கிடைத்துள்ளதுடன் இச்சம்பவங்கள் தொடர்பிலேயே 194 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (4-2)




டிஎப்சிசி வர்த்தன வங்கியின் வர்த்தன பிரபு முன்னுரிமை வங்கிச் சேவை நேற்று யாழ்ப்பாணத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் வங்கியின் தனிநபர் கணக்கு பணிப்பாளர் ஜிலன் எட்வேட் நாடா வெட்டி வர்த்தன பிரபு அலுவலகத்தை திறந்து வைப்பதையும், வாடிக்கையாளர் ஒருவருக்கு அன்பளிப்பு வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

## வாணி விழா

மதுரம் கிட்ஸ் நிறுவனத்தின் வாணி விழா நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு கோப்பாய் தெற்கு டச்சு வீதியில் உள்ள மதுரம் இன்ஸ்ரிரியூட் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மதுரம் கிட்ஸ் நிர்வாக இயக்குநர் கே.கிருபாகரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி லயன் வை.தியாகராஜாவும் சிறப்பு விருந்தினராக யாழ்.கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி ஓய்வுபெற்ற உதவி அதிபர் உருத்திரகுமாரி சுரேந்திரகுமார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (எ-8)

## கொழும்பு...

136 முறைப்பாடுகளில் 24 முறைப்பாடுகள் அரச சொத்துகள் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டமை தொடர்பானது என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரலின் இயக்குநர் ரோகன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இதேவேளை அரச அதிகாரிகள் தொடர்ச்சியாகத் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக இன்னொரு சுயாதீன கண்காணிப்பு நிறுவனமான கஃபே அமைப்பின் இயக்குநர் கீர்த்தி தென்னக்கோன் கூறினார். (பர)

## நேருக்கு...

இதேவேளை வெள்ளைக் கொடி வழக்கு தொடர்பான விசாரணைகள் நேற்று நடைபெற்றது. அதன்போது ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதவான் [illegible]மினால் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இனவாதத்தை தூண்டும் வகையில் போலியாக இந்த வெள்ளைக்கொடி குறித்த செய்தி வெளியிடப்பட்டுள்ளதாக பிரதி சொலிசிட்டர் ஜெனரல் புவனேக அலுவிஹார தெரிவித்துள்ளார்.

வெள்ளைக்கொடி ஏந்தி வந்த எவரும் சுடப்படவில்லை என பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் சவேந்திர சில்வா ஆகியோரின் சாட்சியங்களின் மூலம் தெளிவாவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தமக்குத் தெரிந்த வகையில் அவ்வாறான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெறவில்லை என சரத் பொன்சேகா சாட்சியத்தில் தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கு விசாரணைகள் எதிர்வரும் புதன்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

வழக்கு விசாரணைக்கு சென்ற பொன்சேகா கருத்து தெரிவிக்கையில்;

போலிக் குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பொய்யான குற்றச்சாட்டுக்களை வழங்கியுள்ள வஞ்சக அரசியல்வாதிகளினால் நேருக்கு நேர் அரசியல் நடத்த முடியுமா என அவர் தெரிவித்தார். (பர)

## காங்.சீமெ...

ரூபாய் வரை செலவாகும் எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் 250 முதல் 500 மெற்றிக் தொன் சீமெந்தை உற்பத்திசெய்ய முடியும் எனவும் சீமெந்து தயாரிப்பதற்காக இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்படவுள்ளன.

சீமெந்துச் தொழிற்சாலை மீள ஆரம்பிக்கப்படவுள்ளதால் வேலைவாய்ப்புகள் அதிகரிக்கும் எனவும் அமைச்சர் திசேரா குறிப்பிட்டுள்ளார். (பர)

# இலங்கை வங்கி விளையாட்டுக் கழகத்தின் விளையாட்டு விழா யாழ்ப்பாணத்தில்!

இலங்கை வங்கி விளையாட்டுக் கழகம் வருடாந்த விளையாட்டு விழா இறுதி நிகழ்வுகளை இவ்வருடம் யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளது. வடமாகாண ஊழியர்களிடையே விளையாட்டுத் தொடர்பான ஆர்வத்தினை அதிகரிப்பதற்கும் எல்லா மாவட்ட ஊழியர்களையும் ஒன்றிணைப்பதற்கும் இதுவொரு வாய்ப்பாக அமையவுள்ளது.

அது மாத்திரமல்லாது வடமாகாணத்திலுள்ள இலங்கை வங்கி வாடிக்கையாளர்களை விளையாட்டுத்துறையில் கலந்து கொள்ளச் செய்வதற்கான ஊக்குவிப்பாகவும் அமையுமென விளையாட்டுக்கழகம் தெரிவித்தது.

72 ஆண்டுகள் வங்கிப் பாரம்பரியத்தில் பழமையான இலங்கை வங்கியானது வங்கித் துறையில் மட்டுமல்லாது கலை, கலாசார, விளையாட்டு விழாக்களிலும் முன்னோடியாக விளங்குகின்றது.

நாடளாவிய ரீதியில் இலங்கை வங்கியைச் சேர்ந்த 500இற்கும் மேற்பட்ட ஊழியர்கள் இந்நிகழ்வில் பங்குபற்றுவது பெருமைக்குரிய விடயம். அன்றைய தினம் நடைபெறவுள்ள உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் வடமாகாண இலங்கை வங்கி ஊழியர் அணி பங்குபற்றுவது இந்நிகழ்வை மேலும் சிறப்பிக்கின்றது.

இலங்கை வங்கி வாடிக்கையாளர்களையும் பொதுமக்களையும் ஒன்றிணைக்கும் நோக்குடன் யாழ்.மாவட்ட இளைஞர்களுக்கான 90 மைல் சுற்றுப் பாதையைக் கொண்ட துவிச்சக்கரவண்டி ஓட்டப்போட்டி ஒன்றினையும் அன்றைய தினம் காலை நடத்தத் தீர்மானித்துள்ளோம். இந்நிகழ்ச்சி விளையாட்டு வீரர்களை ஊக்குவிப்பதற்கான ஓர் படிக்கல்லாக அமையுமென எதிர்பார்க்கின்றோம்.

மேலும் இவ்விளையாட்டு விழா நிகழ்வில் வடமாகாணப் பாடசாலைகளில் இலங்கை வங்கி சிறுவர் சேமிப்பு அலகில் அதிக தொகையைப் பேணுகின்ற முதல் 10 பாடசாலைகளுக்கு விளையாட்டு உபகரணக் கொள்வனவிற்காக 25 ஆயிரம் ரூபாய் வீதம் வழங்கப்படவுள்ளது.

அத்துடன் வடமாகாணத்தில் விளையாட்டுத் துறைக்குப் பங்களிப்புச் செய்த சிறந்த வீர, வீராங்கனைகள் 16 பேர் இவ்விழாவில் கௌரவிக்கப்படவுள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் தமிழ் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் கலைநிகழ்வுகளுடன் ஆரம்பிக்கும் இந்நிகழ்வு மாலை 4 மணியளவில் பரிசளிப்பு விழாவுடன் நிறைவு பெறவுள்ளது.

இந்நிகழ்வில் மக்களைப் பார்வையாளர்களாகப் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு இலங்கை வங்கியினர் அன்புடன் அழைக்கின்றனர். (எ)

# வன்னியில் கொழும்பு மக்களை குடியேற்ற அரசாங்கம் திட்டம்

## ரணில் குற்றச்சாட்டு


கொழும்பு மக்களை வன்னியில் குடியேற்றுவதற்கு அரசாங்கம் முனைப்புக் காட்டி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் காணப்படும் 90 ஆயிரம் வீடுகளை உடைப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். இன்று நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வாக்காளர்கள் அரசாங்கத்திற்கு நல்ல பாடம் புகட்ட வேண்டுமென கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனநாயக உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டுமாயின் இத்தேர்தலில் மக்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளிக்க வேண்டும்.

மக்கள் சிறந்த வாழ்க்கையை எதிர்பார்ப்பதாக அரசாங்கத்திற்குத் தெரியப்படுத்துவதற்கு இவ்வாக்கெடுப்பினைப் பயன்படுத்த முடியும். முச்சக்கரவண்டி சாரதிகள் மற்றும் நடைபாதை வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை இல்லாதொழிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பு வறிய மற்றும் செல்வந்தர்கள் என்ற பல்வேறு சமூகத்தினரைக் கொண்ட



மைந்தது எனவும் இச்சமூகக் கட்டமைப்பில் மாற்றம் ஏற்படுத்த வேண்டிய அவசியமில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-8)

## நாவாந்துறை சம்பவ...

தலைவர் அறிவித்திருந்தார்.

எனினும் குறித்த நிறுவனம் நேற்று தொலைத்தொடர்பு கோபுரத்தை அமைக்கும் பணிகளை ஆரம்பித்தமையை அடுத்து அப்பகுதி பொதுமக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதனையடுத்து தொலைத்தொடர்பு கோபுரத்தை அமைக்கும் பணியில் ஈடுபட்ட நிறுவனத்தின் அறிவிப்பின் அடிப்படையில் வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலைய அதிகாரிகள் மற்றும் பொலிஸார் சம்பவ இடத்திற்குச் சென்றனர்.

எனினும் பொதுமக்கள் தனது எதிர்ப்பை தொடர்ந்து வெளிப்படுத்தியதையடுத்து பொலிஸார் கடும்போக்கைக் காட்டியுள்ளனர். எதிர்ப்புத் தெரிவிக்கும் பொதுமக்கள் அனைவரையும் நாவந்துறையில் நடந்தது போன்று பயங்கரவாத தடுப்புச்சட்டத்தில் வழக்குப் பதிவு செய்து கைது செய்ய முடியுமென வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலைய அதிகாரியொருவர் கடும் தொனியில் எச்சரித்தார்.

அத்துடன் சம்பவ இடத்துக்குச்சென்ற வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவரிடமும், அரசாங்கம் நினைத்தால் எங்கும் தொலைத் தொடர்பு கோபுரம் அமைக்கலாம் என அப்பொலிஸ் அதிகாரி கடும்தொனியில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை குறித்த இடத்தில் தொலைத் தொடர்பு கோபுரம் அமைப்பதற்கு சுற்றுச் சூழல் அதிகார சபையின் அனுமதி வழங்கப்பட்டமையை அடுத்தே வலி.மேற்கு பிரதேச சபை வரி செலுத்துவதற்கான அனுமதியை வழங்கியதாக சபை உறுப்பினர் நடனேந்திரன் தெரிவித்தார்.

எனினும் அப்பகுதி மக்களின் எதிர்ப்பை அடுத்து தொலைத்தொடர்பு கோபுரம் அமைக்கும் பணிகளை இடைநிறுத்துமாறு பிரதேச சபை தலைவரால் குறித்த நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை இச்சம்பவம் தொடர்பில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலாமகேஸ்வரனுடன் தொடர்பு கொண்டு சம்பவம் தொடர்பில் தெரிவித்துள்ளனர்.

எனினும் பிரதேச சபை தலைவரால் அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில் தம்மால் எதுவும் செய்ய முடியாதென அவர் தெரிவித்துள்ளார்.

ஆவணங்கள் தொடர்பான செயற்பாடுகள் மேற்கொண்ட பின்னரே பிரதேச சபைத் தலைவரால் அதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் அதனைத் தடுப்பதற்கு எவராலும் முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (பர)

உல்லாசம்
உங்கள் கண்முன்னே...
TILKO JAFFNA CITY HOTEL
TILKO hotels
No.70/6, K.K.S
Road, Jaffna.
Tel: 021 2225969
web:www.cityhoteljaffna.com
e-mail: info@cityhoteljaffna.com

இடமாற்றம்
இல. 75, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த
நியூ லலிதாஸ் ஜூவல்லறி ஸ்தாபனம்
10.09.2011 தொடக்கம் இல. 111, மின்சார நிலைய வீதியில்
இயங்கி வருகின்றது என்பதை அன்பர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.
தொடர்புகளுக்கு : 021 222 4134

# ஆபிரிக்காவை சேர்ந்த 3 ...

லைபீரியாவில் பிறந்த லேய்மா பௌவீஆறு குழந்தைகளின் தாயாரா வார்.

இவர் லைபீரியா பெண்களைத் திரட்டி அமைதி இயக்கத்தை ஆரம்பித்து, அதன் ஊடாக பெண்களின் உரிமைக்காக அகிம்சை வழியில் பல்வேறு போராட்டங்களை தலைமையேற்று நடத்தியுள்ளார்.

யேமன் நாட்டைச் சேர்ந்த அரசியல்வாதியான ரவாக்குல் கர்மன் ஒரு தீவிர மனிதவுரிமை செயற்பாட்டாளராக் இருப்பதுடன், பெண் பத்திரிகையாளர்கள் அமைப்பின் தலைவராகவும் பணிபுரிகின்றார்.

யேமன் ஜனாதிபதி அலி அப்துல்லா சாலேவுக்கு எதிராக போராட்டங்கள் நடத்தி பலதடவைகள் சிறை சென்ற அவர், ஊடக சுதந்திரத்திற்காகவும் ஜனநாயகத்துக்காகவும் தொடர்ச்சியாகப் போராடி வருகின்றார்.

இம் மூவருக்குமான சமாதானத்துக்கான நோபல் பரிசை அறிவித்த இப்பரிசுக்குழுவின் தலைவர் துர்பியோன் ஜாக்லான்ட், சமுதாயத்தில் ஆண்களுக்கு இருக்கின்ற உரிமைகள் பெண்களுக்கு கிடைக்கின்ற வரை உலகில் நிலையான சமாதானத்தையும், ஜனநாயகத்தையும் ஏற்படுத்த முடியாது எனக் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (பா)

புலமைப் பரிசில் – 2012
(நாவலர் வெளியீடு)
பயிற்சிப் பரீட்சை–01ல் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற பரிசுக்குரிய மாணவர்கள்
✵ மோ.துஷாரகா – 159
(யா/புனித ஜோன் பொஸ்கோ)
✵ மா.தமிழ்ப்பிரியன் – 157
(யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்)
✵ ர.சானுஜா – 156
(யா/இந்து மகளிர் ஆர.பா.)
அடுத்த பரீட்சை – 03
09.10.2011 (ஞாயிறு)
விரும்பிய நேரங்களில் வெளி மாணவர்களும் பரீட்சைக்குத் தோற்றலாம்.
பரீட்சை நேரங்கள்
காலை – 8-10 | மாலை – 2-4
" – 9-11 | " – 3-5
" – 10-12 | " – 4-6
புதிய
நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

விற்பனையாளர் தேவை
புத்தகம், ஸ்ரேசனறி பொருட்கள் வியாபார ஸ்தாபனத்திற்கு விற்பனையாளர்கள் தேவை.
ஆண்/பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது ஆர்வமுடையவர்கள் நேரில் வரவும்.
ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212, K.K.S வீதி யாழ்ப்பாணம்.
(சி-4661) T.P : 021 222 5542

தையல் வேலைக்கு
பெண் தேவை
நன்றாக தையல் தெரிந்தவரும் ஓரளவு கணனி அனுபவமுள்ளவருமான பெண் கடை வேலைக்குத் தேவை. கிறிஸ்தவ ஆவிக்குரிய சபையைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.
தொடர்பு : 0217901716
(6342) 0774911106

வரணி மிசன் பாம்
இறைச்சிக் கோழி (Broiler)
முட்டை (Egg)
மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 0773435719
விற்பனை நிலையம்,
வரணி மிசன்பாம்,
(6341) வரணி.

Personal & Group Classes
வங்கியியல் கற்கைநெறி
CBF
Structure of Accounts
DBF
Accounting analysis & Planning
K.ஸ்ரீபரன் BBA (Fm.Spl)
(6343) 0774598430

பொருளியல்
PAPER CLASS
A/L 2012, 2013
DMI
S.S.சிறி
நாளை ஆரம்பம் (ஞாயிறு 8.00 மணி)
நேர அட்டவணை நிறுவனத்தில் பெறலாம்
(சி-4664)

விற்பனையாளர் தேவை
சிறந்த கவர்ச்சிகரமான பேச்சாற்றல் உள்ள விற்பனையாளர் தேவை. உடன் தொடர்புகொள்ளவும். (2 ஆண், ஒரு பெண்)
09.10.2011 - 12.00 மணிக்கு முன்னர்
தொடர்புகளுக்கு : 0778551710
E-mail : Jaffna gmailes@gmail.com
(சி-4663)

# மரண அறிவித்தல்



## குமாரசாமி சுந்தரமூர்த்தி

காரைநகர் களபூமி சத்திரைந்தையைப் பிறப்பிடமாகவும் கம்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட ஏ.எஸ்.குமாரசாமி அன் கோ, கண்ணன் ஸ்ரோர்ஸ் உரிமையாளரான குமாரசாமி சுந்தரமூர்த்தி அவர்கள் நேற்று (07.10.2011) காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற அருளம்பலம் சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற செந்தில்நாயகியின் அன்புக் கணவரும் பாக்கியத்தின் பெறாமகனும் காலஞ்சென்ற பரமேஸ்வரி, தேவராணி, நடேசன், பத்மநாதன், சந்திரா ஆகியோரின் அன்புச் சகோதரரும் அருணகிரிநாதன் (ஏ.எஸ்.குமாரசாமி அன் கோ உரிமையாளர், கம்பளை), தேவகுஞ்சரி, இராசகுமாரி, கமலக்கண்ணன் (கண்ணன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர், கம்பளை), சாந்தகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் பரஞ்சோதி (வெங்கடேஸ்வரா ஸ்ரோர்ஸ் உரிமையாளர், யாழ்ப்பாணம்), சிவயோகன் (ஏ.எஸ்.குமாரசாமி அன் கோ, கம்பளை), சுரேந்திரன் (கிருஸ்ணா நகை மாளிகை உரிமையாளர், யாழ்ப்பாணம்), சொர்ணதேவி, நகுலேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும் செந்தூரன், சிவதர்சினி, சாளினி, தர்ஷிகா, மயூரன், சுதன், தனுஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை (09.10.2011) பத்து மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காகக் கம்பளை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முகவரி:
இல.113/6, கண்டி வீதி, கம்பளை.
0812351201

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(சி-4668)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.10.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.